



நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -125

## பிரபாகரனின் இறப்பு இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை



## வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்தது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கான சதித்திட்டமா?



## மஹிந்த பிரதமரானால் சிறுபான்மையினம் மீண்டும் ஒடுக்கப்படும்



# பிரபாகரனின் இறப்பு இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை



பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்கின்ற செய்தி அண்மைக்காலமாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் பயன்படுத்தி வந்த கைத்துப்பாக்கி தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் தோற்றம்பெற்றுள்ளன. கடந்த வாரம் இந்தியாவின் பிரபல்யமான ஊடகமான தினத்தந்தியில் பிரபாகரனின் இருப்பு பற்றிப் பலரிடமும் கருத்துக்கள் வினவப்பட்டுள்ளன. இதன்போது பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளன. நிராயுதபாணியாக பிரபாகரன் சரணடைவதற்கான வாய்ப்புக்கள் இல்லாத பொழுதிலும் 18.05.2009 அன்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொன்றுவிட்டோம் என இலங்கை அரசாங்கம் தெரிவித்த அதே நேரம் ஒரு தமிழ்த்தலைமையின் எதிர்காலம் எவ்வாறிருக்கவேண்டும் என்ற தொலைநோக்கோடு சிந்தித்தவர் தான் புலிகளின் தலைவர்.

ராஜீவ் காந்தியினது கொலைக்குப்பின்னர் பிரபாகரனின் தலைமையினை அழித்தொழிக்க திட்டம் வகுத்தது இந்திய அரசு. தலைவர் பிரபாகரன் ஒரு தீர்க்கதரிசி. ஈழ மண்ணில் இந்தியப் படைகளால் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களின் மிக மோசமான அத்தியாயங்கள் பற்றி விரிவாகப் பார்ப்பதற்கு முன்னதாக, இந்தியா தொடர்பாக அக்காலத்தில் விடுதலைப் புலிகள் கொண்டிருந்த நிலைப்பாடு பற்றி ஓரளவு மேலோட்டமாகப் பார்த்துவிடுவது நல்லது என்றே நினைக்கின்றேன்.

இந்தியாவின் விடயத்தில் ஆரம்பம் முதல் புலிகள் ஓரளவு எச்சரிக்கை உணர்வுடனேயே இருந்துவந்துள்ளார்கள். குறிப்பாகப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், இந்தியா பற்றி அதிக எச்சரிக்கையைத் தன்னகத்தே கொண்டுள்ளவராகவே இருந்துவந்துள்ளார் என்பதற்கு, அந்நாட்களில் வெளியான பல செய்திகள் சாட்சி பகர்வனவாக இருக்கின்றன. தனது பிராந்திய மேலாதிக்க நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டே இந்தியா ஈழத்தமிழ் அமைப்புக்களை வளர்க்க முனைந்ததே தவிர, ஈழத்தமிழர்களில் ஒன்றும் அக்கறை கொண்டு அது எந்தக் காரித்தையும்மேற்கொண்டிருக்கவில்லை. இதனைப் புலிகள் நன்றாகவே தெரிந்து வைத்திருந்தார்கள். இந்தியாவின் இந்த நோக்கத்தை இயன்றவரை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவே புலிகளும் எண்ணியிருந்தார்கள்.

இந்திய அரசியலை, அந்த அரசியலில் உள்ள ஓட்டைகளை, தமது இன விடுதலைப்போருக்கா்ன ஒரு தளமாக முடியுமான அளவு பயன்படுத்திக் கொள்ளும் திட்டமே புலிகளின் தலைமையிடம் இருந்து வந்துள்ளது. ஈழ விடுதலைக்காகப் போராட முன்வந்த அனைத்து இயக்கங்களும் இந்திய அரசினால் நயவஞ்சகமாக ஏமாற்றப்பட்டன என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. ' ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில், ஆரம்பம் முதலே அவர்கள் இந்தியாவின் விடயத்தில் அதிக எச்சரிக்கை உணர்வுகளைக் கொண்டிருந்தார்கள்.

இந்தியாவின் ஒவ்வொரு நடவடிக்கையின் உண்மையான நோக்கம் பற்றி அவர்கள் அதிகம் சிந்தித்தார்கள். இந்தியாவின் ஒவ்வொரு அசைவினதும் உண்மையான காரணம் பற்றிய தெளிவினை அவர்கள் நன்றாகவே பெற்றிருந்தார்கள். மற்றைய இயக்கங்கள் போன்று முற்று முழுதாக இந்தியாவை மட்டுமே நம்பி புலிகள் ஒருபோதும் தமது போராட்டத்தை நடாத்தவில்லை. மற்றைய இயக்கங்கள் அனைத்தும் காலத்தால் அழிக்கப்பட்டுவிடப், புலிகள் அமைப்பு மட்டும் காலத்தையும் வென்று, இன்றும் நிலைத்து நிற்பதற்கு இதனைத்தான் பிரதான காரணம் என்று நான் கூறுவேன்.

இன்று உலகத் தலைவர்களால் வியப்புடன் நோக்கப்படும் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள், அக்காலத்திலேயே இந்தியாவிடம் ஏமாறாத ஒரு மனிதனாக, எதிர்காலத்தை கணிப்பிடும் ஓர் அறிஞராக இருந்து வந்திருக்கின்றார் என்பதற்கு அக்காலத்தில் வெளியான பல செய்திகள் சான்று பகர்கின்றன.

80களின் ஆரம்பத்தில், இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் வைத்துப் புலிகளின் ஒரு தொகுதிப் போராளிகளுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சியை வழங்கியது. பொன்னம்மான் (குகன்)என்பவர்தலைமையில்,விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒருதொகுதிப் போராளிகள் பயிற்சிக்காகச் சென்றிருந்தார்கள். புலிகளின் முன்னாள் யாழ் தளபதி கிட்டு அவர்களும்பயிற்சிக்காகச்சென்றிருந்தார். மிகவும்குளிர் சூழ்ந்த இடத்தில் நடைபெற்ற பயிற்சிகளின் போது, போராளிகள் அதிக கஷ்டங்களை அனுபவித்தார்கள். பயிற்சி நெறிகளுக்கு இந்தியப் படையைச் சேர்ந்த கேணல் ஒருவர் பொறுப்பாக இருந்தார். அவர் இலங்கைத் தமிழ்மக்கள் பற்றி அதிக அனுதாபம் கொண்டவராக இருந்ததுடன், பயிற்சி பெறச்சென்ற போராளிகள் விடயத்திலும் அதிக அக்கறையை வெளிப்படுத்தினார். புலிகளுடன் அதிக பரிவுடனும், பாசத்துடனும் நடந்துகொண்டார்.

பயிற்சிகள் முடிவடைந்து விடைபெறும் நேரம். அந்த இந்திய கேணலின் கண்கள் கலங்கிவிட்டன. போராளிகளும்மிகவும்உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப்பட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கிட்டு ஓடிச்சென்று அந்த இந்திய கேணலின் மடியில் புரண்டு விம்மி விம்மி அழத்தொடங்கிவிட்டார். பயிற்சியை முடித்துக்கொண்ட புலிகள் கண்ணீரோடு விடைபெற்றுச் சென்னையை வந்தடைந்தார்கள். சென்னை அடையாற்றில் தங்கியிருந்த புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் தமது பயிற்சி அனுபவங்களைப் போராளிகள் பகிர்ந்து கொண்டார்கள். இடைநடுவே, கிட்டு இந்தியப்படை கேணலின் மடியில் புரண்டு விம்மியழுத கதையையும் போராளிகள் பிரபாகரனிடம் கூறிவைத்தார்கள். அதனைக்கேட்டுச் சிறிது நேரம் மௌனம் சாதித்தபிரபாகரன் இவ்வாறுதெரிவித்தார்: "நாங்கள் ஒரு நோக்கத்திற்காகப் பயிற்சி எடுக்கப்போனோம். ஆனால் இந்தியாவோ வேறொரு நோக்கத்திற்காக எங்களுக்குப் பயிற்சி தந்திருக்கின்றார்கள். எங்களுடைய நோக்கத்திற்கு எதிராக என்றோ ஒருநாள் இந்திய இராணுவம் திரும்பினால், இதே கேணலுக்கு எதிராக சண்டை பிடிக்கும்படி கிட்டுவுக்கு நான் உத்தரவிடுவேன். கிட்டுவும் சண்டை பிடித்தேயாகவேண்டும்."

கிட்டுவும் மற்றைய போராளிகளும் திகைத்துப் போனார்கள். முழுத் தமிழ் இனமும் இந்தியாவை மட்டுமே நம்பி இருந்த அந்தக் காலகட்டத்தில் இந்தியாவிற்கு எதிராகப் பிரபாகரன் தெரிவித்த கருத்துக்கள் அவர்களுக்கு அதிக ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தன. புலிகளின் தலைவர் ஆரம்பம் முதலே ஒரு நிதர்சனத் தலைவராக இருந்து வந்துள்ளார் என்பதுடன், அவர் இந்தியாவின் விடயத்தில் மிகவும் அவதானமாகவே சிந்தித்து வந்துள்ளார் என்பதற்கு மேற்குறிப்பிட்ட சம்பவம் சான்று பகர்கின்றது.

### வெளிநாடுகளிடம் இருந்து ஆயுதங்கள்

இந்தியா பற்றி புலிகளின் தலைவர் கொண்டிருந்த எச்சரிக்கை உணர்வுக்கு, அக்காலத்தில் நடந்ததாகக் கூறப்படுகின்ற மற்றொரு நிகழ்வையும் உதாரணமாகக் கூறமுடியும். இந்தியா ஈழத் தமிழ் போராளிகளுக்கு பயிற்சியை வழங்கிய பின்னர் ஆயுதங்களையும் கொடுக்க முன்வந்தது. இந்தியா தமக்கு ஆயுதங்களைத் தர முன்வந்த செய்தியை அறிந்த போராளிகளுக்கும், இயக்கத் தலைவர்களுக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி. தமது விடுதலை நோக்கிய பாதையில் இனிமேல் துணிகரமாக பயணிக்கலாம் என்ற எண்ணம் ஒவ்வொரு போராட்ட அமைப்புக்கள் மத்தியிலும் காணப்பட்டது. புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் மத்தியிலும் இந்த மகிழ்ச்சி காணப்படவே செய்தது.

இந்தியா தமக்கு ஆயுதம் வழங்கப் போகின்றது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்காகப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பிரபாகரனைச் சந்திக்கச்சென்றார்கள். கிட்டுவும் அவர்களுடன் சென்றிருந்தார். மிகவும் குதூகலத்துடன் சென்ற அவர்களிடம் தலைவர் பிரபாகரன் தெரிவித்த கருத்து, அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "நாங்கள் உடனடியாக வெளியில் இருந்து ஆயுதம் வாங்கவேண்டும்" என்று பிரபாகரன் அவர்களிடம் தெரிவித்தார். பிரபாகரனின் கருத்தைக் கேட்டவர்களுக்கு அதிர்ச்சி. இந்தியாதான் ஆயுதம் தரப் போகின்றதே. பின்னர் எதற்காக வெளியில் இருந்து ஆயுதம் வாங்கவேண்டும்? அவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. அவர்களுடைய மனங்களில் ஓடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட பிரபாகரன் இவ்வாறு தெரிவித்தார்: "இந்தியா ஆயுதம் தருகின்றது என்றால், எம்மைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நோக்கத்தில்தான் அது எமக்கு ஆயுதங்களைத் தருகின்றது. நாம் எமது சொந்தக்காலில் நிற்க வேண்டுமானால், சொந்தமாகவும் நாம் ஆயுதங்களைத் தேடிக்கொள்ளவேண்டும்" என்று தெரிவித்தார்.

அப்பொழுது, பிரபாகரன் அவர்களுக்கு ஒரு புதிராகவே தென்பட்டார். பிரபாகரன் அவர்களின் உள்நோக்கத்தின் ஆழத்தை புரிந்துகொள்ள அவர்களுக்குப் பல வருடங்கள் பிடித்தன. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டு, புலிகள் ஒப்படைக்கவேண்டிய ஆயுத விபரங்கள் இந்தியப் படையினரால் வெளியிடப்பட்ட போதுதான், தமது தலைவனின் தீர்க்கதரிசனத்தின் பரிமாணத்தை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். இந்தியப்படைகள் புலிகளிடம் இருந்து ஆயுதங்களை பலவந்தமாகக் களைய ஆரம்பித்ததைத் தொடர்ந்து, இரு தரப்பினருக்கிடையேயும் பாரிய யுத்தம் மூண்ட போதுதான், புலிகள் வெளியில் இருந்தும் ஆயுதங்களைத் தருவித்துக்கொண்டதன் அனுகூலத்தை அவர்கள்புரிந்துகொண்டார்கள்.ஒருதலைவன், எதிர்காலம் பற்றி எந்த அளவிற்குச் சிந்திக்கவேண்டும், எப்படியான தொலைநோக்குகளையெல்லாம் கொண்டிருக்கவேண்டும் என்பதற்கு, புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு சிறந்த உதாரணம்.

### இந்தியாவின் ஏஜெண்டுகள்

இந்தியாவின் உள்நோக்கத்தை ஆரம்பம் முதலே புலிகள் அறிந்து செயற்பட்டிருந்தார்கள் என்பதற்குப் பல உதாரணங்களைக் கூறமுடியும். 1986ம் ஆண்டு மே மதம் 7ம் திகதி புலிகளுக்கும், ரெலோ அமைப்பினருக்கும் இடையில் பாரிய மோதல் வெடித்தது. ரெலோ அமைப்பிற்கு எதிராகப் புலிகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், அந்த அமைப்பையும் தடைசெய்தார்கள். ரெலோ அமைப்பின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் புலிகளால் கொலை செய்யப்பட்டார். நூற்றுக்கணக்கான ரெலோ உறுப்பினர்கள் புலிகளால் கொல்லப்பட்டும், கைதுசெய்யப்பட்டும் இருந்தார்கள்.

ரெலோ அமைப்பிற்கு எதிராக புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கும், ரெலோ அமைப்பை புலிகள் தடைசெய்ததற்கும், அந்த அமைப்பிற்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்களை புலிகள் முன்வைத்திருந்தார்கள்.

1) ரெலோ உறுப்பினர்கள் மக்களைத் துன்புறுத்தி, கொள்ளையிட்ட குற்றவாளிகள்.

2) ரெலோ - இந்திய ஏகாதிபத்தியத்தின் "ஏஜெண்டாகச்" செயற்பட்டுக்கொண்டு இருந்தது.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் பாதையைத் திசை திருப்புவதில் இந்தியா காண்பித்து வந்த அக்கறையை ஆரம்பத்திலேயே புலிகள் அறிந்துவைத்திருந்தார்கள். இந்தியா தனது திட்டத்திற்கு ரெலோ அமைப்பைப் பயன்படுத்த ஆரம்பித்ததையும் புலிகள் அறிந்துவைத்திருந்தார்கள்.தமிழீழத்திற்கு எதிரான இந்தியாவின் எந்தவொரு திட்டத்தையும் தவிடுபொடியாக்கும் மாற்றுத்திட்டங்களை வகுப்பதில் புலிகள் ஆரம்பம்முதலேமிகவும்எச்சரிக்கையுடன் செயலாற்றி வந்துள்ளார்கள். ரெலோ அமைப்பிற்கு எதிராக 1986ம் ஆண்டு மே மாதத்திலேயேபுலிகள்மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். இந்த அடிப்படையில்தான், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் அதனைத் தொடர்ந்து ஈழமண்ணில் இந்தியா புலிகளுக்கு எதிராக மேற்கொள்ள ஆரம்பித்திருந்த ஆயுதக் களைவையும் புலிகள் அணுகினார்கள்.

இதன்பிறகு யுத்தம் நீடித்துக்கொண்டே சென்றது. அமைதிப்படையாக நாட்டுக்குள் களமிறங்கிய இந்திய இராணுவம் இலங்கையின் அனைத்துப்பாகங்களிலும் தமது துஷ்பிரயோக நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தது. இந்த வரலாறானது தமிழ் மக்கள் மத்தியில் கறைபடிந்துபோயுள்ளது. உலக வல்லரசுகள் அனைத்தும் பிரபாகரனுடைய இருப்புப் பற்றியே கவனம் செலுத்தின. காரணம் மாவீரர் தினத்தில் மாத்திரமே மக்கள் முன் அவர் உரையாற்றும் நிகழ்வு நடந்தது. இந்திய இராணுவம் இருந்த காலகட்டத்திலும் கூடப் பிரபாகரனின் இருப்பு என்பது உறுதிப்படுத்தப்படாமலேயே இருந்தது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் பிரபாகரன் தன்னைக் காப்பாற்றுவதற்கு முனைந்தாரா? அல்லது போர்க்களத்தில் கொல்லப்பட்டாரா? அல்லது எதிரியிடம் பிடிபட்டுக்கொல்லப்பட்டாரா? வேறு நாடுகளுக்குத் தப்பிச்சென்றுவிட்டாரா?, எரிக்கப்பட்டாரா? அல்லது புதைக்கப்பட்டாரா? அப்படியெனில் எங்கு? எவ்வாறு? புதைக்கப்பட்டார் அல்லது எரிக்கப்பட்டார்? என்றெல்லாம் பல கேள்விகள் எழுகின்றன. இதற்கான விடையை அரசும் சரியாக வழங்கவில்லை.

தொடரும்...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## பாராளுமன்றத்தேர்தலில் TNAயினதும், தமிழ் மக்களினதும் ஒற்றுமை அவசியம்

தமிழ் மக்களுடைய பாரம்பரிய கலை, கலாச்சார விழுமியங்கள் பாதுகாக்கப் படவேண்டுமாகவிருந்தால் தமிழ்த் தரப்புக்களின் ஒற்றுமை அவசியம். தமிழினத்தின் துரோகிகளாகச் செயற்பட்டுவந்த தமிழ்க்குழுக்கள் இதுவரை சாதித்தது என்ன? என்பதைப்பார்க்கின்றபொழுது, மக்களின் எதிர்ப்பு மாத்திரமே என்பது புலப்படுகின்றது. அரசுடன் இணைந்து வெறுமனே பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்துக்கொண்டும், தமது சுகபோக வாழ்வுக்காக மக்களைப் பயன்படுத்தி அரசிற்கு விலைபோன சம்பவங்களுமே வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது. இதன் காரணமாக தமிழினம் தொடர்ச்சியாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்திருக்கின்றது.

கடந்த புதனன்று (10.06.2015) தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது. இதில் முக்கிய விடயங்களாக எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலின் வேட்பாளர்கள் மற்றும் அதற்கான ஒழுங்குகள், தமிழ்க் கட்சிகளின் தற்போதைய தன்மைகள் தொடர்பாக பகிரங்கமான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இச் சந்திப்புக்கள் அனைத்தும் இரகசியமான முறையிலே இடம்பெற்றிருக்கின்றது. இதற்கிடையில் கட்சியின் பதிவுகள் தொடர்பிலும் பூதாகரமான வதந்திகள் உருவாக்கப்படுகின்றன.

இன்றைய காலத்தின்தேவை என்ன? கட்சிப்பதிவா? அல்லது தமிழ் மக்களின் ஒற்றுமையா?. தமிழ் மக்களின் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமையை தக்கவைத்துக்கொள்வதற்கான முயற்சிகளில் சிந்தித்து செயற்படவேண்டும். நிலை தடுமாறும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுகின்றது. தமது கட்சிகளை பலப்படுத்துவதற்கான அனைத்து திட்டங்களையும் மைத்திரியின் அரசு செயற்படுத்திவருகின்றது. பணத்தின் மூலம் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களை உள்வாங்கிக்கொள்ள அரசு முயற்சிக்கின்றது.

இதற்கான பேச்சுக்கள் அனைத்தும் வெளிநாடுகளில் இடம்பெறுகின்றன. வெளிப்படையாகவே வெளிநாடுகளிலிருந்து வடமாகாணசபை உறுப்பினர்கள் பணத்தினை பெற்றுக்கொள்வதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார். இதுவொரு வகையில் தமிழ் அரசியல்வாதிகளைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும். தமிழினத்தின் காட்டிக்கொடுப்புக்கு அப்பால் பெரும்பான்மைப் பலத்தினை தமிழ் இனம் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவை எழுந்துள்ளது.

மஹிந்த, மைத்திரி, ரணில் போன்றவர்களின் நலன்களுக்காக தமிழ் அரசியல்வாதிகள் விலை போவார்களாகவிருந்தால் அது தமிழினத்திற்குச் செய்யும் துரோகமாகவே கருதப்படும். அஹிம்சைவாதம் எனக்கூறிக்கொண்டு அரசின் கால்களைப் பற்றிக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எதிர்மறையான கருத்துக்களை முன்வைப்பவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். அன்றிலிருந்து இன்றுவரையில் தமிழின அரசியல்வாதிகள் காட்டிக்கொடுக்கும் நிலையை மறைமுகச்செயற்பாடாக தொடர்கின்றார்கள்.

தமிழினத்தின் கைகள் பலமாக இருக்கின்றபொழுது அதனை பலவீனப்படுத்தும் நோக்கில் அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. தமிழரசுக்கட்சியினைப்பொறுத்தவரை கடந்த காலமாக தமது சுயகௌரவத்தினை விட்டுக்கொடுத்துவருகின்றார்கள். மகாத்மா காந்தியின் அஹிம்சை வழி, தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றவர்களின் தியாகங்களைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். அரசினால் திட்டமிடப்பட்டு தமிழ்ப் பிரதேசங்கள் சுவீகரிக்கப்படுகின்றபொழுது தமிழ்த்தலைமைகள் அதனைத் தடுக்கவேண்டும். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும் என்று கூறினாலும், இனிமேல் நடக்கப்போவதையாவது சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும். எதிர்வரும் பாராளுமன்றத்தேர்தலில் தமிழர்களும், த.தே.கூட்டமைப்பும் மிகப் பலம்பொருந்திய ஒரு கூட்டணி என்பதை இவ்வரசாங்கத்திற்கு நிரூபித்துக்காட்டவேண்டியது தலையாய கடமைகளில் ஒன்றாக அமைகின்றது எனலாம்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

**50**

1998.08.30 அன்று படையினரின் தடைக்கம்பிச் சுருள் அருகே நேரடியாகப் போய் நிலைமையைப் பார்த்துவரவென மேஜர் பரா புறப்பட்டார். பராவுடன் கப்டன் இன்சுரபி, தாயகி, மணிமொழி ஆகியோர் போயிருந்தனர். கிட்டத்தட்ட படையினரின் பார்வை எல்லைக்குள் நுழைந்துவிட்ட நிலையில் அவர்களை இவர்களும் இவர்களை அவர்களும் கண்டுவிட்டதால் தவிர்க்கவேமுடியாமல்நாம்சண்டையைத் தொடக்கவேண்டியதாயிற்று. எல்லோருக்கும் முன்னேபோன பராவை நாம் இழக்கநேரிட்டது. இவருடன் போராட்ட வாழ்விலும் இணைந்துகொண்ட தங்கை கப்டன் கேமா கொக்குத்தொடுவாய் சமர்க்களத்தில் 1995இல் வீரகாவியம் ஆகியிருந்தார்.


எங்களுக்கு வாய்ப்பாயிருந்த காட்டின் இயற்கை அமைப்பு படைத்தரப்புக்கும்வாய்ப்பாய் இருந்ததால், வேவு நடவடிக்கைகளின்போது சில சிக்கல்களை எதிர்கொண்டோம். நல்ல பகல் வெளிச்சத்தில் மரங்களிடையே மறைந்தும் புற்களிடையே தவழ்ந்தும் படையினரின் பகுதியை நோக்கி நாங்கள் போய்க்கொண்டிருக்கும்போது, இடையில் தற்செயலாகத் தலையை நிமிர்த்திப்பார்க்க, சற்றுத்தள்ளி மரங்களிடையே மறைந்தவாறும், புற்களிடையே தவழ்ந்தவாறும் எமது பகுதியைநோக்கி எதிர்வேவு அணியினர் போய்க்கொண்டிருப்பதைக் காணக்கூடிய வாய்ப்புக்களும் கிடைக்கும். நிலைமையைக் காவலரணுக்கு அறிவித்துவிட்டு நாம் முன்னகர்ந்துவிடுவோம்.

மிகக் கவனமாக உருமறைப்புச் செய்துகொண்டு அவதான்மாகஒவ்வொரு அடியையும் எடுத்துவைத்து எம்மவர்கள் போக, அதுபோலப்படைத்தரப்பும்வர, ஒரு பெரிய மரத்தின் அல்லது, மண்புற்றோ, பற்றையோ ஏதோ ஒன்றின் இருபுறமும் இரு வேவு அணியினதும் முன்னணி வீரர்கள் பதுங்கி, மெல்ல எட்டிப்பார்த்து, ஒருவரை ஒருவர் கண்டு திடுக்கிட்டு, திரும்பிப்பார்க்காமலேயே எழும்பி அவர்களும் ஓட, நாமும் ஓடி, பாதை மாறி, திசை கண்டுபிடித்து, எங்கோ வேவு பார்க்கப்புறப்பட்ட நாம்வேறெங்கோ வேவு பார்த்து, எப்படியோ போன வேலையை முடித்துக்கொண்டு திரும்பிய நாட்களும் உண்டு.

மிகவும் கடினமான வேவுப் பணியுடன் நகர்ந்து கொண்டிருந்தன எமது நாட்கள். மிகவும் சிக்கல் நிறைந்த அந்த வேலை முடிவடையும் தறுவாயில், தாம் இரு ஆயுதங்களையாவது எடுத்துக்கொடுப்போம் என்கின்ற உறுதியான நம்பிக்கையில் அவர்கள் தாக்குதலைத் திட்டமிட்டபோது அந்த நதிமூலம் (water shed) - 01 புறப்பட்டது. பள்ளமடுச் சந்தியை மையப்படுத்தி கஜேந்தியின் பிளாட்டூன் நின்ற இடத்தில் மருந்துக்குத்தானும் ஒரு கிணறு இல்லை. இவர்களுக்கான குடிநீர் விநியோகம் மாட்டுவண்டியிலேயே நடைபெற்றது. ஒரே ஒரு பிளாட்டூனுக்காக எரிபொருளைச் செலவழித்து இழுபொறியில் நீர் நிறைக்கும் நிலையில் நாம் அன்று இல்லை.

பெரும்பாலான நாட்களில் மாட்டுவண்டி ஓட்டும் அப்பாவை ஓய்வில் விட்டுவிட்டு மாடுகளை மேய்த்துக்கட்டித் தண்ணீர் அள்ளும் பணியைக் கஜேந்தியே செய்துகொள்வார். ஒரு சாரத்தால் தலைப்பாகை கட்டி, இன்னொரு சாரத்தை நீண்ட காற்சட்டைக்கு மேலால் இடுப்பில் கட்டி, கஜேந்தி மாட்டுவண்டியில் தண்ணீர் கொண்டுவரும் அழகே தனி அழகு. வருவது அப்பாவா, கஜேந்தியா என்று சட்டென்று இனம் காணமுடியாது. ஓரிடத்தில் நிற்க மாட்டாத சுறுசுறுப்பு நிறைந்த, கடும் உழைப்பாளியான கஜேந்தி ஓய்வாக அமர்ந்திருப்பதைக் காண்பது அரிது.

மாங்குளத்தில் மைதிலியுடன் கஜேந்தி நின்ற நாட்களில் இருதடவைகள் படையினரை உள்நுழைந்து தாக்கியிருக்கின்றார். தேர்ந்த வேவுப்புலியான மைதிலியும் கடும் சுறுசுறுப்பு நிறைந்த கஜேந்தியும் சேர்ந்துகொண்டால் கேட்கவாவேண்டும். ஒரு தாக்குதல் கஜேந்தி உள்நுழைந்து எடுத்த தரவுகளின்படி நடந்தது. படையினரின் முன்னரங்க நிலையொன்றின்மீது திடீர்த்தாக்குதல் செய்துவிட்டு போன வேகத்திலே திரும்பி வந்துவிட்டனர்.



இரண்டாவது அடி வித்தியாசமானது. கஜேந்தியின் அணி 1999.04.01 அன்று தாக்குதலுக்காகப் பதுங்கிப்பதுங்கி முன்னகர்ந்தது. மூன்று பக்கங்களையும் கவனமாக அவதானித்தபடி நகர்ந்துகொண்டிருந்த நம்மவர்கள் படையினரின் பதுங்கித்தாக்கும் அணியொன்று எமது காப்பரண்களைநோக்கிப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டுவிட்டு கஜேந்தியின் தோளைத்தொட்டனர். திட்டம் சடுதியில் மாற்றம் அடைந்தது.

படையினரின் பதுங்கித்தாக்கும் அணிக்கு விழுந்தது முதுகு அடி. அவர்கள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. முன்னே இருந்த எமது அரண்களைத் தாக்கப்போனவர்கள் பின்னேயிருந்து விழுந்த அடிக்கு ஏற்ப தம்மை நிலைப்படுத்தி எம்மைநோக்கித் தாக்குவதற்கு நாங்கள் வாய்ப்பைக் கொடுக்கவில்லை. அடியைத் தொடக்க முதலே மைதிலிக்கு கஜேந்தி விடயத்தைத் தெரியப்படுத்தியிருந்தமையால் மைதிலியின் கட்டளையில் மேஜர் அமுதாவின் எறிகணை செலுத்தும் அணியினர் எறிகணைகளை வீசிக்கொண்டிருந்தனர். படையினரின் சுடுகலன்களை எடுத்துக்கொண்டு நாங்கள் எங்கள் பகுதிக்குத் திரும்பினோம். கொல்லப்பட்ட படையினருள் ஒருவர் மேஜர் தர அதிகாரி என்பதை அன்றிரவே அலைவரிசைகளை ஒட்டுக்கேட்டு அறிந்து கொண்டோம்.

மரங்கள் குறைவான நீண்ட வெளிகொண்ட ஆனால் இடையிடையே பற்றைத் தொகுதிகளுடனிருந்த அந்தப் பகுதியில் வெயில் கொழுத்தி எரித்தது. ஆனால் கஜேந்தியில் எந்த வாட்டமும் தெரியவில்லை. மன்னாரின் பறட்டைவெளியை முள் மரப்பற்றைகளை ஆராயும் வேலையை அவர் தொடங்கிவிட்டார்.

போர் முழக்கம்-04 படைநகர்வு நடந்தவிதம் எம்மிடம் பல கேள்விகளை எழுப்பிவிட்டிருந்தது. படை நடவடிக்கை நடந்துமூன்றுமாதங்களாகின்றன. அடுத்த நகர்வை வெகுவிரைவில் எதிர்பார்க்கலாம். படையினர் நகரக்கூடிய வாய்ப்புள்ள வழிகளை கஜேந்தி தேடத்தொடங்கினார். நீண்டகாலமாக நிர்வாக வேலைகளில் ஈடுபட்டிருந்த கப்டன் மனோ, எறிகணைச் சூட்டாதரவுக்கு வழுத்திருத்தம் சொல்லும் பயிற்சி வகுப்பை முடித்துக்கொண்டு கஜேந்தியுடன் மன்னார் வந்திருந்தார். அவரும் அன்று புறப்பட்டார்.

படையினரின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக அவர்களுக்கு மிக நெருக்கமாகப் போய்வந்த கஜேந்தி ஒரு விடயத்தைக் கவனித்தார். தமது அடுத்த நகர்வுக்காக படையினர் பாதைகளைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தது கண்களில்பட்டது. எம்மில் ஆட்தொகை குறைந்த காப்பரண்நோக்கி ஒரு பாதை எடுக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதைவழியே படையினரின் நிலைகளைநோக்கி நடந்துபோன கஜேந்தி, இடையில் பாதை இரண்டாகப் பிரிந்து, எமது பிறிதொரு காப்பரணைநோக்கிப்போவதை அவதானித்தார்.

இந்தப் பாதைகள் எமது முன்னரங்க நிலைகளைச் சந்திக்குமிடங்களில் எம்மால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருந்தன. அப்படியெனில் இன்னும் இரண்டொரு நாட்களில் படையினர் வருகை தரவுள்ளனர். பள்ளமடுப் பகுதியில் படையினர் இனி முன்னேறக்கூடும் என்று ஓரளவு எதிர்பார்க்கப்பட்டபோதே அம்பகாமத்தில் நின்ற மைதிலி படையணியின் சிறப்புத் தளபதி விதுஷாவின் கட்டளைக்கு இணங்க பள்ளமடுவுக்குச் சென்று எதிர்தாக்குதலுக்கான முன் நடவடிக்கைகளைச் செய்துகொண்டிருந்தார். நீண்ட நேரமாக கஜேந்தியின் தொடர்பைக் காணவில்லை என்று மைதிலி யோசித்துக்கொண்டிருந்தபோது அவர் வந்துசேர்ந்துவிட்டார். அவரின் முகபாவமும் களைப்பும் மைதிலிக்கு நிறைய விடயங்களை உணர்த்தின.

“என்னக்கா?” என்று ஆவலாகக் கேட்டார் மைதிலி.

கஜேந்தி தான் கண்டவற்றை எல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்ல மைதிலியின் மூளை இரவிரவாகத் திட்டங்களைத் தீட்டியது. படையினர் அகற்றிய கண்ணிவெடிகள் அகற்றியபடியே கிடக்க, அவர்களின் கவனத்தை ஈர்க்காதவகையில் புதிய கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டன. முன்னேறிய படையினர் பின்வாங்குவதற்கு எந்தப் பாதையைப் பயன்படுத்துவார்கள் என்று ஆராய்ந்த மைதிலி நீரோடியலர்ந்த ஆற்றுப்படுக்கை ஒன்றை இனங்கண்டார்.

தொடர்வான்...

**தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்**

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 329. | வீ.வே.மருதை | மனோன்மணி சாமுவேல் | முல்லைத்தீவு | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 330. | வீ.வே.மைவிழி | மங்களேஸ்வரி சபாரத்தினம் | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 331. | வீ.வே.புகழரசி | சிவதர்சினி யோகராசா | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 332. | வீ.வே.அரசி | சசிகலா சுந்தரேசன் | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 333. | வீ.வே.கலைக்கொடி | ஜெயந்தினி இரத்தினசபாபதி | திருகோணமலை | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 334. | வீ.வே.கிளி | நிர்மலாதேவி மகாராசா | யாழ்ப்பாணம் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |
| 335. | வீ.வே.இளமயில் | புவனேஸ்வரி செல்வராசா | மன்னார் | 1998.02.01 | கிளிநொச்சி - பரந்தன் |

# மஹிந்த பிரதமரானால் சிறுபான்மையினம் மீண்டும் ஒடுக்கப்படும்.



முப்பதுவருடகாலமாகத்தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதோடு, காகம் இருக்கப் பனம் பழம் விழுந்த கதையாக, மஹிந்த தான் யுத்தத்தை வெற்றிகொண்ட வீர தீரக் கதாநாயகனென அவரைப் போற்றிப் புகழ்ந்தவர்களும், இப்போதும் அவ்வாறே அவரைப் போற்றிப் புகழ்பவர்களும் நிறையப்பேர் இருக்கத்தான் செய்கின்றார்கள். உண்மையில் யுத்தம் முறியடிக்கப்படுவதற்குப் 'பிரேமதாஷ' அவர்கள் ஆரம்பத்திலேயே மேற்கொண்ட சூழ்ச்சிகரமான நடவடிக்கைகள் தான் மிகப் பிரதானமான காரணிகளாக விளங்கியிருக்கின்றன.

தமிழ் மக்களிடம் தமிழ் ஈழத்துக்கான ஆணையைப் பெற்று நாடாளுமன்றஞ் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவ்வாணைக்கு விசுவாசமாகச் செயற்படத் தவறியிருந்தார்கள். ஓரேயொரு நாடாளுமன்ற அமர்வில் மட்டும் பங்குபற்றி "எமக்கு எமது மக்கள் தனித் தமிழ் ஈழம் அமைத்துத் தருமாறு ஏகோபித்து 'ஆணை வழங்கியுள்ளார்கள். எனவே அம்மக்களின் ஆணைக்கு விசுவாசமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அவர்கள் எமக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்றிக் கொடுப்பது எமது தலையாய பணி என்னுங் கருத்தை உலகமும் அறியும்வகையில் முரசறைவித்துவிட்டு அதன் பின்னர் அவர்களால் "ஸ்ரீலங்கா வேறு நாடு தமிழ் ஈழம் வேறு நாடு" என முன்வைக்கப்பட்ட கருத்தோவியத்துக்கமைவாகத் தமிழர் தாயகத்தில், வடக்கின் யாழ்ப்பாணத்திலோ அல்லது கிழக்கின் திருமலையிலோ வங்கச் சிங்கம் முஜிபர் ரஹ்மான் பாணியிலே தமிழ் ஈழத்துக்கான அரசியல் நிர்ணய சபையை உருவாக்கித் தமது தாயக ஆட்சிக்கான அரசியல் சட்டத்தையும் வரைந்து தம்முடைய நேர்மைத்திறனையும், தைரியத்தையும் வெளிக்கொணர்ந்திருக்க வேண்டும். அத்தோடு பாரத உப கண்டத்தின் அடிமை விலங்கொடித்த உத்தமனார் காந்தி வழியிலே ஸ்ரீலங்கா ஆளுவோருக்கெதிரான யுத்தங்களை மேற்கொண்டிருக்கவும் வேண்டும்.

ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது இவ்வாறு செயற்படாதது மட்டுமல்ல, ஸ்ரீலங்காவின் நாடாளுமன்றத்திலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது 1977ம் ஆண்டு தேர்தலிலே பெற்றுக் கொண்ட ஆசனங்களை விட அதிகளவு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதனால் அவ்வமைப்பினால் எதிர்க்கட்சியாகவும் அவ்வமைப்பின் செயலாளர் நாயகமான 'அமிர்தலிங்கம்' அவர்களுக்கு 'எதிர்கட்சித் தலைவர்' ஆகும் வாய்ப்பும் எதிர்பாராதவிதமாக அமைந்தது.

கூட்டமைப்பாரின் இப் பதவி சுகத்தைச் சாதகமாக வைத்து, அவ்வரசில் பிரதமர் பதவி வகித்த பிரேமதாஷ அவர்கள் அவ்வமைப்பாரின் நீண்ட கால வர்க்க நலனைத் தாம் தமிழ் மக்களிடம் பெற்றுக்கொண்ட மிகப் பொறுப்பு வாய்ந்த 'தமிழ் ஈழம்' என்னும் ஆணைக்கு விரோதமாகவும், அவ்வாணையைக் காட்டிக்கொடுத்து அதற்குத் துரோகமிழைக்கும் விதமாகவும் மிகவும் தந்திரோபாயங்களுடன் பயன்படுத்திக்கொண்டார். இதனால், ஒற்றையாட்சியின் கீழான சமஅந்தஸ்து, சமஷ்டி அமைப்பு முறையிலான ஆட்சியமைப்பை வலியுறுத்திக்கொண்டே, இலங்கையின் முதலாளித்துவ வலையமைப்புக்குள்ளும், உலக முதலாளித்துவ வலைப் பின்னலுக்குள்ளும், அமெரிக்க ஏகாதிபத்திய வேட்டைப் பொறிக்குள்ளும் இலங்கைத் , தமிழினத்தைச் சிக்க வைத்தமையின் விளைவாக உருவான பெறுபேறுகளைப் போலல்லாது, 'தனி நாடு' என்னும் ஆணைக்குள்ளும் இவ்வலையமைப்புகளுக்குள் 'இலங்கைத் தமிழ் மக்கள்' சிக்க வைக்கப்பட்டதனால் முன்னெப்போதையும் விடத் தமது எதிர்கால வாழ்வு தொடர்பில் பாரதூரமானதும், பாதகமானதுமான விளைவுகளைத் தமிழ் மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இக்கள நிலவரத்தில் வடபகுதி இளைஞர்களின் ஆயுதந்தரித்த போராட்டத்தை முறியடிப்பதற்குச் சர்வதேச அளவிலான அமெரிக்கசார்பு, அமெரிக்கஎதிர்ப்புநிலையின் வழமையான வடபகுதியின் அரசியல் பின்னணியை இறுகப்பற்றிக்கொண்ட பிரதமர் பிரேமதாஷ அவர்கள் ஆயுததாரிகளில் ஒரு பகுதியினரை இராணுவத்தினரோடு இணைய வைத்தார். இவ்விடத்தில், இலங்கையை ஆள்வோர் எவராகவிருந்தாலும் அவ்வாள்வோர்மீதும் அவ்வாள்வோரின் அரசியல் கட்சிகள் மீதும்குடிமக்கள்என்னும்தோற்றப்பாட்டில் இராணுவத்தினர் வெறுப்பும், குரோதமும் உள்ளவர்களாகவே விளங்கி வருகின்றார்கள்.

இந்நிலையானது 1971ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் முன்னெடுக்கப்பட்ட 'றோகண விஜேவிர' அவர்களின் கிளர்ச்சியின் பின் மேலும் வலுப்பெற்றது. இவ்விடயத்தைச் சகல ஆட்சியாளர்களும் புரிந்துகொண்டிருப்பார்கள். எனவே இவ்வாட்சியாளர்களின் வரிசையில் பிரேமதாஷ அவர்களும் இவ்வியல்பைப் புரிந்துகொண்டு, கடமையின் நிமித்தம் கட்டுப்படுத்தி இராணுவத்தினரை மிகவும் கண்காணிப்புக்காளாக்கியபோதும் அவர்களின் இவ்வரசியல் சுபாவத்தைப் பயன்படுத்தி வடபகுதி ஆயுததாரிகளில் ஒரு பகுதியினரை இராணுவத்தோடு இணையவைத்தார். பிரேமதாஷ அவர்களின் இந்நடவடிக்கையே தாம் கைப்பற்றி வைத்திருந்த யாழ்ப்பாணத்தை இழப்பதற்கும் அவர்களின் ஆயுதப் போராட்டம் முறியறிக்கப்படுவதற்கும் அடிப்படையானதும், பிரதானமானதுமான காரணியாகவும் இருந்தது.

இதன்பின்புலிகள்அமைப்பானது, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தபோது சந்திரிகாவிடமிருந்து ஆட்சியதிகாரமானது 'ரணில் விக்கிரமசிங்க' தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு கைமாற்றப்பட்டபோது "இடைக்கால நிர்வாகம், பேச்சு வார்த்தை" என ரணில் காட்டிய மாயவலைக்குள் மாட்டுப்பட்டு, யுத்த நிறுத்தத்துக்கும் இணங்கி நின்றபோது, பேச்சுவார்த்தையைச் சாட்டாக வைத்து ரணிலும் அவருடைய பரிவாரங்களும் அடிக்கடி ஹெலிகளில் கிளிநொச்சியை வட்டமிட்டமையும், விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களின் இருப்பிடங்களை அவர்கள் அவதானித்துச் சென்றமையும், அவர்களோடு இணைந்து வந்த 'தேசப்பட விற்பன்னர்கள்' படம் வரைந்து சென்றமையும் மேற்றரப்பட்ட மாவட்டங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப்புலி அமைப்பின் முக்கியஸ்தர்களை அவர்கள் இருந்த இடங்களை இலக்குவைத்து விமானக்குண்டுவீச்சுகளைமேற்கொண்டு கொன்றொழித்தமைக்குக் காரணிகளாக அமைந்திருந்தன.

எனவே, காகம் இருக்க ஏற்கனவே இளகியிருக்கும் பனம் பழம் விழுந்த கதையாக மஹிந்த அவர்கள் ஆட்சியிலிருக்கும்போது யுத்தம் முறியடிக்கப்பட்டமையால் அவர் தான் யுத்தத்தை முடித்துவைத்த தீரமிகு கதாநாயகனென்னும் பொதுவான ஓர் அபிப்பிராயம் அன்று தொட்டு இன்றுவரை நிலவிவருகின்றது உண்மையில் 1977ல் ஆட்சி அமைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்களை ஜனாதிபதியாகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P) அரசாங்கத்தின் பிரதமராகவிருந்த 'பிரேமதாஷ' அவர்களின் அபாரமான அரசியல் சாணக்கியத்தின் பாற்பட்டதும், தந்திரோபாயத்தின் பாற்பட்டதுமான தமிழ் ஈழத்துக்கான மிகவும் பொறுப்பு வாய்ந்ததும், தூரநோக்கோடும் உள்ளீர்க்கப்படவேண்டியதுமான ஆணையைத் தமிழ்க் கூட்டமைப்பார் 'ஏனோ தானோ' என்னும் மனோபாவத்தோடு துஷ்பிரயோகம் செய்தமையோடு, காட்டிக்கொடுத்தமையும் வர்க்க நலனுக்கும் ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்துக்கும் துணை போனமையும், வடக்கின் ஆயுததாரிகளில் ஒரு பகுதியினர் இராணுவத்தோடு இணைந்தமையுமே புலிகளின் தோல்விக்கான பிரதான காரணிகளாக இருந்திருக்கின்றன. பின்னர் 'ரணில்' அவர்களுடைய அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம், பேச்சுவார்த்தை என்னும் பூச்சாண்டிகளுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பினர் உடன்பட்டுத் தாமிருக்கும் இடங்களை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்தமை அவர்களின் தோல்விக்கான நிஜமான துணைக்காரணியாகும். இவ்விடத்தில் ஆட்சி மாறினாலும் 'குண்டு போடுபவர்கள்'ஒரே நபர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவது மிகவும் இன்றியமையாதது.

யுத்தத்தின் பின்னர் குற்றவாளியாகச் சர்வதேசத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட மஹிந்த அவர்கள் 'யுத்தத்தை வெற்றிகொண்டவர்' என்னும் போலிப் பிம்பத்தை பெற்றுக்கொண்டமையினால், அப்பிம்பத்தைநிஜமாக்கமுனைந்துசர்வதேசப் பார்வைக்கு மதிப்பளித்து, அச்சர்வதேச முகாமைத் திருப்திப்படுத்த முனையாமல் சிங்களக் கடும் போக்காளர்களையும், மக்களையும் திருப்திப்படுத்தும் தன்முனைப்புமேலோங்கியவராகத்தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தார். ஒரு கையால் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இடதுசாரிக் கட்சித் தலைவர்களையும், மறு கையால்'சிஹலஉறுமய'போன்றசிங்களக் கடும்போக்கு அமைப்புக்களையும் அணைத்து வைத்துக்கொண்டு முற்றுமுழுதாக முரண்பட்டதும், மிகுந்த தந்திரோபாயத்தோடு இணைந்ததுமான தமிழர் விரோத ஆட்சியை நிர்வகித்து வந்தார். முதுபெரும் இடதுசாரித் தலை வரும், இடதுசாரித் தலைவர்கள் தடம் புரண்டு சென்றபோதும் வாய்மை காத்தவருமான 'வாசுதேவ நாணயக்கார' அவர்களைத் தேசிய மொழிகள் அமுலாக்கல் சமூக நல்லிணக்க அமைச்சராக நியமித்தமை மஹிந்த அவர்களின் உச்சக்கட்டத் தந்திரோபாயமேயெனக் கொள்ளப்படவும் வேண்டும்.

தமிழர் நலன் சார்ந்த (தமிழ்மொழியில் தேசிய கீதம் இசைத்தல் அரசநிர்வாக அலகுகளில் சிங்கள தமிழ் மொழிகளின் சம பிரயோகம்) நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மஹிந்தாவின் ஒரு கையினால் அரவணைக்கப்பட்ட இடதுசாரிகள் பரிந்துரைத்தபோது, மறு கையினால் அணைக்கப்பட்ட சிங்களக் கடும்போக்காளர்களான இனவெறியர் எதிர்த்து நின்றமையும், இவ்வாறான ஒரு முரண்நிலையில் மஹிந்த அவர்கள் கடும்போக்காளர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி அவர்களின் விருப்பிற்கு இசைவாக தனது தமிழர் விரோத ஆட்சியை நடத்திச் சென்றார்.

சிங்கள பௌத்த கடும்போக்காளர்களின் விருப்பிற்கு மாறாக மஹிந்தவாகவிருந்தாலுஞ் சரி அல்லது வேறெரெவராகவிருந்தாலுஞ் சரி ஆட்சியைக் கொண்டு செல்லமாட்டார்கள் என்பதே நிஜமானதாகும்.

மைத்திரி அவர்கள் ஜனாதிபதியான தேர்தலின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பார் அவருக்கு வாக்களிக்கும்படி வடக்கு-கிழக்கு மக்களை வேண்டியமையைப் பலரும் எதிர்பார்த்தே இருந்திருப்பார்கள். மஹிந்த ஆட்சி தமிழர் விரோத ஆட்சி என்னுங் காரணத்தால், அவ்வாட்சியை அகற்றுவதற்கு இன்னுமொரு தமிழர் விரோத ஆட்சியைத் தான் தமிழரையும் வாக்களிக்கச் செய்வதன் மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் கொழும்பில் நிறுவமுடியுமேயொழிய அக்கூட்டமைப்பால் மட்டுமல்ல எவராலுமே தமிழர் நலனைப் பேணக்கூடிய ஆட்சியை அமைப்பதற்கான பங்களிப்பைச் செய்யமுடியாது. இவ்விடத்தில் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பெரிதாக அலட்டிக்கொள்ளும் 'தமிழ்த் தேசியத்தின்' வங்குறோத்துத்தனம் அம்பலத்துக்கு வருகின்றது. அத்தோடு மஹிந்தவோடு இணைந்து ஆட்சி செய்த 'மக்கள் விடுதலை முன்னணி'யினர் (ஜே.வி.பி) தம்முடைய ஆதரவு இல்லாமல் மஹிந்தாவால் ஆட்சியமைக்க முடியாதென ஆணவத்தோடு கருத்துவெளியிட்டமையும், அதைப் பொறுத்துக்கொள்ளமுடியாத 'மஹிந்த' ஜே.வி.பியினருக்கென ஆசனங்கள் சிலவற்றை ஒதுக்கி அவர்களோடு இணைந்து தேர்தலில் போட்டியிடுவதையும் தவிர்த்துத் தனித்து நின்றே போட்டியிட்டு ஆட்சியை அமைத்தார். இதன் காரண மாக ஜே.வி.பி யினருக்கு மஹிந்த . மீது ஏற்பட்ட குரோதந்தான் அவரைக் கடந்த தேர்தலின் போது 'வீட்டிற்கு அனுப்பி வைக்கவேண்டும்' என்னும் ஆக்ரோஷத்தை அவர்களுக்குள் தோற்றுவித்தது. இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பி மஹிந்தவுக்கு மாற்றீடாக மைத்திரி எனப் பிரச்சாரஞ் செய்து மைத்திரிக்கு ஆட்சி அமைப்பதற்குத் துணை நின்றதோடு, அவருடைய அரசாங்கத்தின் தேசிய நிறைவேற்றுச் சபையிலும் அங்கம் வகித்தது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாரின் பதிலீடு அவர்களால் பிரச்சாரப்படுத்தப்படும் தமிழ்த் தேசியத்தின் வங்குரோத்துத்தனத்தைப் பிரதிபலிப்பதைப் போலவே, மக்கள் விடுதலை முன்னணியினரின் பதிலீடு அவர்களால் பேசப்படும் இடதுசாரித்துவத்தின் வங்குரோத்துத்தனத்தைப் பிரதிபலிக்கின்றது.

இவ்விடத்தில் இலங்கைத் தீவை யும், தமிழ் மக்களையும் ஒரு சேரப் பாதுகாக்க வேண்டுமென்றால் தேசத்தில் நிலைகொண்டுள்ள இடதுசாரித்துவத்தின் வங்குரோத்துத்தனம் உடனடியாக அகற்றப்படவேண்டுமெனவும், தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் தமிழ்த் தேசியத்தின் அதே வங்குரோத்துத்தனம் உடனடியாக அகற்றப்படவேண்டுமெனவும் கருத்துக் கூறுவதே பொருத்தமான ஒன்றாகவிருக்கும்.

08ஆம் பக்கம் பார்க்க...

**வீரப்பதி விநோதன்**

# மலையகத்தமிழரின் இன்றைய நிலை மாற்றம்பெறுமா?

இலங்கையில் வதியும் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர், மலையாளிகள் என்னும் ஐந்து இனத்தவர்களில் தமிழர் என்னும் இனத்தவர்களுக்குள் மட்டுந்தான் வித்தியாசப்பட்ட பிரச்சினைகளின் பாற்பட்ட 'மலையகத் தமிழர்' என்னும் தனிப்பட்ட மக்கள் குழுமம் அடையாளப்படுத்தப்படுகின்றது. இவ்வடையாளப்படுத்தலுக்கு அவ்வினத்தின் வரலாற்றுப் பின்னணியும் அதன் சீவனோபாய' நெறிமுறைகளுமே காரணமாக அமைந்துள்ளனவெனலாம்.

இலங்கையையும், இந்தியாவையும் பிரித்தானியர் ஆட்சி செய்தபோது, அவர்கள் தமிழகத்தில் மிகவும் பின் தங்கிய பொருளாதார நிலையிலும் தீண்டாமையின் பாற்பட்டும் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் குழுமத்தினரை இலங்கைக்குக் கொண்டு சென்றால் அவர்களுக்கு மிகக் குறைந்தளவு சம்பளத்துடன் வதிவிட வசதி உட்பட ஏனைய வசதிகளையும் மிகவும் குறைந்த பெறுமதியுடன் செய்துகொடுத்துப் பெருந்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தினால் தாம் அதி உச்ச இலாபத்தை ஈட்டலாமெனச் சிந்திக்கத் தலைப்பட்டனர். இச் சிந்தனையின் பெறு பேறாகவே அவர்கள் இம்மக்களை இலங்கைக்கு அழைத்துச் செல்லத் தீர்மானித்தார்கள்.

அன்றாடச் சாப்பாட்டிற்கே அல்லற்பட்டுக்கொண்டும், வதிவிட வசதியைப்பொறுத்து ஏதிலிகளாகவும் வாழ்ந்து கொண்டிருந்த, புறக்கணிக்கப்பட்ட, தீண்டாமைக்கு இலக்கான, மிகவும் நலிவடைந்த மக்களுக்குப் பிரித்தானியரின் இத்திட்டம் மிக வரப்பிரசாதமாக அமைந்ததையிட்டு ஆச்சரியப்படமுடியாது.

இதனால் இம்மக்கள் வாழ்ந்த கிராமங்களைச் சேர்ந்த ஓரளவு வசதி படைத்தவர்களையும், முதனிலை வகித்தவர்களையும் பிரித்தானியர் அழைத்துத் தமது இத்திட்டத்தை அவர்களுக்கும் கூறி அவர்கள் மூலமாக அம்மக்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காகத் திரட்டினார்கள். பின்னர் கங்காணிகள் என அழைக்கப்பட்ட இவர்களுக்கும் பிரித்தானியர் பணத்தைக் கொடுத்து அம் மக்களை இலங்கைக்குக் கொண்டுசெல்வதற்காக இலாவகமாகத் திரட்டினர். பின்னாளில் 'கங்காணிமார்' என விளிக்கப்பட்ட இவர்கள் பிரித்தானியர் கொடுத்த பணத்தில் ஒரு சிறிதளவை இம் மக்களுக்கு வழங்கி ஆசைகாட்டிக் கப்பலேற்றி இவர்களை இலங்கைக்கு அழைத்து வந்தார்கள்.

இலங்கைக்கு இம்மக்களை அழைத்து வந்த 'கங்காணிமார்' எனப்பட்ட இந்நபர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பெருந்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட இம் மக்களுக்குள், பெண்களில் பெரும்பாலானோர் தேயிலைக் கொழுந்து பறிக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். ஆண்கள் பெருந்தோட்டங்களில் ஏனைய சகல உடல் உழைப்புக்களையும் வழங்கியதோடு இறப்பர்த் தோட்டங்களில் பால் வெட்டும் பணியிலும் பெருமளவானோர் அமர்த்தப்பட்டிருந்தார்கள். இத்தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கித் தேசத்துக்கு மிகப் பெருமளவில் வருமானத்தை ஈட்டிக்கொடுத்தபோதும் கூட அவர்களுடைய வருமானம் மிகக்குறைந்தளவிலேயே இருந்தது. இதற்கு அவர்கள் தமிழகத்தில் வாழ்ந்த வாழ்க்கைப் பின்னணியே பிரதான காரணியாக விளங்கியது. பிரித்தானியர் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளையும் ஆண்டு கொண்டிருந்தமையால் இந்தியாவின் தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருந்த அவர்களுடைய ஏதிலி வாழ்க்கையை அறிந்து வைத்திருந்து இங்கே அவர்களை அழைத்து வந்தமையால் தமது உச்ச இலாபத்தைக் கருத்திற்கொண்டு போதும் போதுமென்றளவுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். இவர்களை ஆங்கிலேயர் அழைத்துவந்தபோது ஒவ்வொரு குழுவுக்கும் தலைமை வகித்தவர்கள் மட்டும் பெருந்தோட்டங்களின் பிரித்தானிய நிர்வாகத்தினரால் தொழிலாளர்களை மேற்பார்வை செய்யும் கங்காணிமாராகவும், கணக்குப்பிள்ளைகளாகவும் நியமிக்கப்பட்டார்கள். இப்பாட்டாளி மக்களின் இழிநிலைகண்டு கொதித்தெழுந்த அச்சமூகத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலர் ஒன்று சேர்ந்து அத் தமிழ்த் தொழிலாளர்களின் நலன் கருதித் தொழிற்சங்கங்களை அமைக்கும் பணியில் மிகவும் தீவிரத்துடன் ஈடுபட்டார்கள். இம்மக்களின் துயர்துடைக்க மிகத் துணிச்சலுடனும் அபாரமான கருணைப் பார்வையுடனும் தொழிற்சங்கத்தை



ஆரம்பித்த மூலவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆவார். அன்னார் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்னும் தொழிற்சங்கத்தை மலையகத் தமிழ்ப்பாட்டாளி மக்களின் விடியலைக்கருதி ஆரம்பித்தார். இத் தொழிற்சங்கம் பின்னாளில் அரசியல் கட்சியாகவும் பதிவு செய்யப்பட்டது. தொண்டமான் அவர்களோடு மலையகத் தமிழ் மக்களின் விடியலுக்காக உழைத்த உத்தமர்களுள் 'செல்லச்சாமி' அவர்கள் பாராட்டப்பட வேண்டியவராக விளங்கினார். இத்தொழிற்சங்கம் சார்ந்த அரசியல் கட்சி பிற்காலத்தில் முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்பேணும் துரதிட்டவசமான நிலைக்குத் தள்ளப்பட்டபோதும், ஆரம்பத்தில் காந்திய நெறிசார்ந்த நிலையில் வர்க்கக் கண்ணோட்டமற்று மலையகத் தமிழ் மக்களின் நலனுக்காகவும், அவர்களின் மனிதத்துக்காகவும், சுயமரியாதைக்காகவும் மிகவும் விசுவாசத்தோடு வேலை செய்தார்கள். ஆரம்பகாலத்தில் இவர்களுக்கு மலையகத் தமிழ் மக்கள் மீதிருந்த வாஞ்சை அப்பிரதேசத்திலுள்ள தமிழ் இடதுசாரிப் பிரமுகர்களுக்குக் கூட இருந்ததில்லையெனக் கூறலாம். மலையகத் தமிழ் மக்கள் அன்று தமது இழிநிலையை வெளிப்படுத்தும் முகமாக ஒரு சில மைல்களுக்குக் கூட ஊர்வலங்களை நடத்த முடியாத நிலையிலிருந்தனர். தமது வாழ்வாதாரங்களுக்காக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களைக் கூட நடத்த முடியாத கீழ் நிலைப்பட்ட நிலையில் அவர்கள் இருந்தார்கள். அதனால் தனிப்பட்ட ஊர்வலம் நடத்தும் உரிமையைக் கூடப் போராடி, உயிர்த்தியாகம் செய்து பெறவேண்டிய நிலை அம்மக்களுக்கு ஆரம்பகாலத்திலிருந்தது. இவ்வுரிமையைப் பெறும் போராட்டத்தில் ஐயாவு, பிரான்சிஸ் என்னும் இருமலையகத் தமிழ் இளைஞர்கள் காவற்றுறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியானார்கள். ஆனால் அவர்கள் இன்றோ மலையகத்திலிருந்து கொழும்பு வரை வாகனபவனியாகவந்து ஆர்ப்பாட்டப் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியளவுக்கு முன்னேறியுள்ளார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக மஹிந்த அரசின் இடைப்பட்ட காலத்தின்போது மலையகத் தமிழ் மக்களைக் 'கள்ளத்தோணிகள்' எனப் பொருளற்ற விதமாகத் தூஷித்த அமைச்சர் ஒருவருடைய கூற்றுக்கு அதிருப்தி வெளியிடும் முகமாக மலையகத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் தமது அரசியல் பேதங்களுக்கும், தனிநபர் குரோதங்களுக்கும் அப்பாற்பட்டு மலையகத்திலிருந்து பெருவாரியான வாகனங்களில் தமது கட்சிக் கொடிகளுடனும், தொழிற்சங்கப் பதாகைகளுடனும் கொழும்புக் கோட்டை வரை வந்து தம்முடைய மிகவும் வலுவான அதிருப்தியை வெளியிட்டார்கள். இதன் விளைவாகக் 'கள்ளத்தோணிகள்' எனத் தூஷித்த அமைச்சரின் தவறுக்காக மனம் வருந்தி அரசின் வேறொரு முக்கியஸ்தர் மன்னிப்புக் கோரியதும் தெரிந்ததே.

இந்நிகழ்வுகளிலிருந்து நாம் இரு விடயங்களைக்கற்றுக்கொள்ளவேண்டும். முதலாவது மலையகத்தின் தமிழ் அரசியல் தலைவர்கள் மேற்கொண்ட தீரமிகு போராட்டத்தினாலும் அப்பிரதேச மக்கள் தமது இழிநிலையிலிருந்து விடுபட்டமையும், இரண்டாவது இவ்விழிநிலையிலிருந்து விடுபட்டாலும் கூட மீண்டும் இழிநிலைகளுக்கு ஆளாகாதவாறு வாழ்வதற்குரிய போதியளவு வலுவற்றவர்களாக தாம் வாழ்ந்து கொண்டிருப்பதைப் புரிந்துகொண்டமையும் ஆகிய இரு விடயங்களுமே நாம் கற்றுக் கொள்ளவேண்டியவையாகும். மலையக மக்கள் தமது கீழ்நிலை தொடர்பில் தமக்கு இன்னமும் விழிப்புணர்வு மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து நிற்பதே அமைச்சர் ஒருவரின் தூசணைக்கெதிராக மலையகம் தொடக்கம் கொழும்பு கோட்டை வரை இடம்பெற்ற பிரமாண்டமான ஐக்கியப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலமாகும். இந்தளவுக்கு மலையகத் தமிழ் மக்களை தலைநிமிர வைத்தவர்கள் தொண்டமான், செல்லச்சாமி போன்ற அரசியல் பிரமுகர்கள் ஆவார்கள் என்பதே நடுநிலையாளர்களின் தீர்ப்பாகவிருக்கமுடியும். எனினும் மலையகத் தமிழர்கள் இத்தீவின் பூர்விகப் பிரஜைகள் இல்லையென்னும் நிலையும் பெருந்தோட்டங்களில் மிகவும் மலிவான நிலையில் வேலைசெய்வதற்காக அழைத்துவரப்பட்ட தென்னிந்திய ஏதிலிகள் என்ற அமைவுமே இன்றும் கூட மலையகத் தமிழர்களின் அடிப்படை நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. போரட்ட உணர்வுகளும், அவர்களுடைய உயர்வுக்கான ஆக்ரோசமான கருத்துக்களும் மிகவும் வீச்சோடு கட்டவிழ்த்துவிடப்படுகின்ற போதிலும், அவர்களின் அடிப்படைச் சுயமரியாதை மனிதம் என்பவை இன்றும் பெரும் கேள்விக்குறிகளாகவே உள்ளன.

இதனால் தான் வடக்கை விடவே 'தமிழ் ஈழம்' தொடர்பில் அங்குள்ள அரசியல்வாதிகளும், மக்களும் இளையோரும் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் மிக்கவர்களாக விளங்கினார்கள். வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் தனிநாடாக மலர வேண்டுமென்ற ஆத்மதுடிப்பு வடக்குக் கிழக்கின் மக்களுக்கும், இளையோருக்கும் இருந்தமையைவிட அங்குள்ள மக்களுக்கும், இளையோருக்கும் அதிகளவில் இடம்பெற்றமையிலிருந்தே அவர்களுடைய உண்மை நிலையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். இ.தொ.கா என்னும் தொண்டமானின் அமைப்பு மலையகத் தமிழ் பாட்டாளிகள் என்னும் தனித்துவமான குறியீட்டுடன் அம் மக்களின் இழிநிலைகளை அகற்றுவதற்கு முன்னின்று அயராது உழைத்தமையின் பெறுபேறாக விளைந்த பயன் அவர்களின் இழிநிலையின் பாற்பட்டுச் சீர்தூக்கிப் பார்ப்பின் மிகப் பெரியதெனவே கூறவேண்டும். அத்தோடு அப்பகுதியில் இடதுசாரி அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும் தமது கட்சிகளின் சகல இனங்களினதும் தொழிலாளர் ஐக்கியம் தொடர்பான சோசலிஷ அரசு என்னும் அரசியல் எண்ணோட்டத்தைப் பின்னணியாக வைத்து அம்மக்களின் விமோசனத்துக்காக வேலை செய்தார்கள். இவ்வரசியல் நடவடிக்கைகளில் மலையகத்தைச் சேர்ந்த சிங்கள இடதுசாரிகளும் ஈடுபட்டார்கள். எனவே மலையகத்தைச் சேர்ந்த தேர்தல் தொகுதிகளில் ஆரம்பத்தில் சிங்கள, மலையகத் தமிழ் மக்களின் இணைந்த வாக்களிப்பினால் இடதுசாரி அரசியல்வாதிகள் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாத் தெரிவு செய்யப்பட்டார்கள். எனினும் தமிழர் தனித்துவமான குறியீடுகளுடன் விளங்கிய இ.தொ.கா போன்ற அமைப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால், உள்ளூர் ஆட்சி உறுப்பினர்களால் இம்மக்களின் நலன் தொடர்பில் செயற்பட்டதைப் போன்று இவர்களால் செயற்படமுடியாமல் போய்விட்டமையையும் இவ்விடத்தில் ஆழ்ந்து நோக்கவேண்டும்.

எது எப்படியிருந்த போதும் காலப்போக்கில் இ.தொ.கா பிரமுகர்கள் உட்பட மலையகத்தமிழ்அரசியல்வாதிகள் இம்மக்களின் விமோசனத்துக்காக ஆரம்பத்தில் செயற்பட்டதைப் போன்று அக்கறையுடனும், விசுவாசத்துடனும் செயற்படாமல் அம்மக்களினால் தாமும் மிகக் குறைந்த தொகையினரும் அரசியல்ரீதியாக இம்மக்களினால் வளர்க்கப்பட்டு பிரபல்யங்களானமையையும், பணம் சொத்துச் சுகங்கள் சேர்த்தமையையும் இம்மக்களுக்குள் இருந்து நில உடமையாளர்களாகவும், முதலாளிகளாகவும், கல்வியாளர்களாகவும், அரச அதிகாரிகளாகவும் மிகக் குறைந்த தொகையினர் உருவானதையும் ஏது நிலைகளாகக் கொண்டு இம் மக்களின் முழுமையான விமோசனம் தொடர்பில் தமக்கு ஆரம்பத்திலிருந்த அக்கறையையும், காருண்யத்தோடு இயைந்திருந்த உள்ளீர்ப்பையும் காலப்போக்கில் படிப்படியாகத் தளரவிட்டுத் தமது சுயமேம்பாட்டையும் அம்மக்களுக்குள் இருந்து உருவான மிகக் குறைந்தளவான சொத்துரிமையாளர்களையும் உயர் கல்வியினால் உயர்பதவிகளை பெற்று கொண்டவர்களை மட்டும் பிரதானமாகக் கருத்துக்கெடுத்துத் த[illegible] இச் சிறு தொகையினரையும் பெரு[illegible]ளவில் வளர்த்தெடுப்பதற்காக பயன்பட்ட மலையக வெகுஜனத் [illegible] கைவிட்டார்கள் எனத்தான் [illegible]டும். இதன்பின் இந்நபர்களினதும் தமதும் நலன்களுக்காகவும், சுக போக வாழ்க்கைக்காகவும் மலையக வெகுஜனத் திரட்சியைப் பகடைக்காயாக பயன்படுத்தும் தன்மை தான் இவ்வரசியல் பிரமுகர்களை அதிகளவில் ஆட்கொண்டு இன்றுவரை அது நீடித்துக் கொண்டே இருக்கின்றது.

மேலும் வடக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும், எமது பிரச்சினைகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன எனக்கூறி இலங்கையில் ஆட்சி அமைப்போர் எவராகவிருந்தாலும் அவர்களுடைய அரசாங்கங்களில் அமைச்சர்ப் பதவிகளையும், பிரதி அமைச்சர்ப் பதவிகளையும் முன்னெப்போதையும் விட அதிகளவில் பெற்றுவிடுகின்றார்கள். இவர்களுடைய இத்தன்மையை ஆளுவோர் மலையக எழுச்சியை மேலெழாதவாறு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றார்கள்.


அமைச்சர்ப் பதவிகளையும், பிரதியமைச்சர்ப் பதவிகளையும் அபாரமாக அலங்கரிக்கும் இம்மலையக அரசியல்வாதிகள் மலையக வெகுஜனநலனைப் பின்னிறுத்தித் தமது நலனை முன்னிறுத்திச் சந்தர்ப்பவாதிகளாகத் தமது அரசியலை முன்னெடுப்பதோடு ஆட்சிமாற்றம் உருவாகும் சாத்தியம் தென்படும்போது திடீரென்று யாரும் எதிர்பாராத வண்ணம் ஆட்சிக்கு வரக்கூடிய கட்சியொன்று என்னும் உள்ளீர்ப்பின் பாற்பட்டு இணைந்து புதிய ஆட்சியிலும் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுவிடுகின்றார்கள்.

08ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

# வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்தது தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கான சதித்திட்டமா?

வடக்கு-கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொள்ளும்போது அம் மாகாணங்களில் தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாகவும், அதே மொழியைப்பேசும் இஸ்லாமிய மக்கள் சிறுபான்மையாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். இஸ்லாமிய மக்கள் அதிகளவில் வடக்கை விடக் கிழக்கில் வசித்து வருகின்றார்கள். வடக்கில் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தமிழ்பேசும் இஸ்லாமிய மக்கள் அதிகளவில் வசித்து வருகின்றார்கள். முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும்



இம்மக்கள் வசித்து வருவதோடு யாழ்ப்பாணத்திலும் தொன்றுதொட்டு குறிப்பிடப்பட்ட பகுதிகளில் வசித்து வருகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த இம் மக்கள் விடுதலைப்புலிகளின் நிழல் ஆட்சியின்போது அங்கிருந்து வெளியேற்றப்பட்டமையும், தற்போது மீள் குடிறேியுள்ளமையும் தெரிந்ததே. இம்மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் ஏனைய பிரதேசங்களிலுள்ள இஸ்லாமிய மக்களோ, இஸ்லாமிய அரசியல்வாதிகளோ விடுதலைப் புலிகளின் அந்நடவடிக்கைகளுக்கு இஸ்லாமிய மக்களின் தவறு காரணமாக விருந்ததுபோலும் என்னும் எண்ணப்பாங்கினால் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. எனினும் துரோக எண்ணங்கொண்ட சில இஸ்லாமிய அரசியல்வாதிகளும் பொது அமைப்புக்களும் மட்டுமே இவ்விடயங்கள் தொடர்பில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான கருத்தை வெளியிட்டிருந்தனர்.

கிழக்கு மாகாண சபையில் இஸ்லாமிய அரசியல் கட்சிகள் அரச தரப்பினரோடு விரும்பியோ விரும்பாமலோ இணைந்து ஆட்சி அமைப்பதற்கு இவ் வடக்கு-கிழக்கு மாகாணப் பிரிவினை மிகுந்த உறுதுணையாக அமைந்துள்ளது. வடக்கு-கிழக்குப் பிரியாமல் ஒரே மாகாண சபையாகச் சேர்ந்து இயங்குமாகவிருந்தால் இந்நிலை தவிர்க்கப்படும் வாய்ப்புண்டு. எனவே வடக்கு-கிழக்கில் வதியும் தமிழ், இஸ்லாமிய மக்களை அவர்கள் ஒரே மொழியைப் பேசுபவர்களாகவிருந்தபோதுங் கூடப் பிரித்துவைத்துத் தமது அரசியல் அதிகாரத்தை அப்பகுதிகளில் நிலைநாட்டுவதற்கான ஒரு சதித்திட்டமே வடக்கு-கிழக்குப் பிரிப்பு என்னும் விடயத்துக்குள் உள்ளடங்கியுள்ளது என்பது வெள்ளிடைமலை.

மேலும் தமிழரசுக்கட்சி ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பகாலத்திலே, கிழக்கிலங்கையில் அன்று இளைஞராகவும், எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவுமிருந்த சொல்லின் செல்வர் செ.இராசதுரை அவர்கள் இக்கட்சியை அடி, உதைகள் உட்படப்பல இன்னல்கள், இடையூறுகளை எதிர்கொண்டு அப்பிரதேசத்தில் கட்டி வளர்த்தார். அத்தோடு அந்நேரத்தில் இஸ்லாமிய அன்பர்களில் பெரும்பாலானோரும் தமிழரசுக்கட்சியின் மீது ஈடுபாடுகொண்டு . அதன் ஆதரவாளர்களாகவும், அனுதாபிகளாகவும் விளங்கினர். இதற்குத் தமிழரசுக்கட்சியின் கொள்கைப் பிரச்சார வாரப்பத்திரிகையான சுதந்திரனில் அக்காலப்பகுதியில் இஸ்லாமியர்களும் குறிப்பிடத்தக்களவில் ஆக்கங்களை ஆக்கி வந்தமையையும் சான்றாகக் குறிப்பிடலாம். காலப்போக்கில் தமிழரசுக்கட்சியின் வடக்கிலுள்ள தலைமை பிரதேச உணர்வுகளையும், இஸ்லாமியர் தொடர்பில் சமநிலையற்ற அணுகுமுறைகளையும் படிப்படியாகக் கையாளத் தொடங்கியது. இதனால் ஆரம்பத்தில் இஸ்லாமியர்களுக்குள் தமிழரசுக்கட்சியின் மீது ஈடுபாடுகொண்டிருந்தவர்கள் படிப்படியாகத் தமது அடையாளங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லீம் லீக் போன்ற அரசியல் கட்சிகளை ஆதரிக்கத் தொடங்கினார்கள். இந்நிலையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தலைமைப் பதவியை மாற்றி மாற்றி வழங்கும் இயல்பைக் கொண்டதாக விளங்கியமையால், கிழக்குத் தலைமையும் அப்பதவியை நாடிநின்றது. எனினும் வடக்குத் தலைமையானது அப்பதவியைக் கிழக்குக்கு வழங்குவதில் பின்னின்றது. நீண்டகாலக்கட்சி அனுபவமும், தமிழ் மணமும் கமழ்ந்து நின்றதோடு, தி.மு.க பாணிப் பேச்சாளராகவும் விளங்கிய செ.இராசதுரை அவர்கள் இப்பதவியை எதிர்நோக்கியிருந்ததோடு வடக்கிலும், கிழக்கிலும் இருந்த தமிழரசுக்கட்சியின் கொள்கைவாதிகளும் நேர்மையாளர்களும் அவருக்கு



அப்பதவியை வழங்குவதில் ஆர்வமுள்ளவர்களாக விளங்கினர். எனினும் வடக்கின் தமிழரசுத்தலைமை கிழக்கைத் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்தமை அக்கட்சி சார்ந்த முக்கியஸ்தரும் வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்களினது பேரபிமானத்துக்குப் பாத்திரமானவருமான செ.இராசதுரை அவர்களையும் அப்பிரதேசத்தைச்சேர்ந்த தமிழ்-இஸ்லாமிய மக்களையும் அதிருப்தி கொள்ளவைத்தது. இதன் விளைவாகத் தமிழரசுக்கட்சியின் மீது ஆரம்ப காலத்தில் அபிமானம் வைத்திருந்த இஸ்லாமியர் தமது சமூகத்தின் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் முஸ்லீம் லீக் போன்ற கட்சிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போன்ற கட்சிகளிலும் அபிமானங்கொள்ள ஆரம்பித்தார்கள். அத்தோடு கிழக்கிலங்கையின் செ.இராசதுரை தவிர்ந்த வேறுபல பிரமுகர்களும் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க ஆகிய கட்சிகளில் பகிரங்கமாக இணைந்து வேலைசெய்யவும், இரகசியமாக இணைந்து வேலை செய்யவும் ஆரம்பித்தார்கள். வடக்கின் தமிழரசுத்தலைமையின் பிரதேச ரீதியான இப்பாகுபாட்டினால் கிழக்கில் தமிழரசுக்கட்சியின் பிரமுகர்கள் அடைந்த அதிருப்தியையும், மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பையும் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியன மிகவும் மகிழ்ச்சியுடன் நோக்கியதோடு அவர்களுக்கிடையில் உருவான இக்கசப்புணர்வை வடக்கு-கிழக்குப் பிரிவுக்கு ஒரு சாதகமான காரணியாக இறுகப்பற்றிப் பிடித்துக்கொண்டுமுள்ளார்கள்.

இதன் பின்னணியில் 1977 இடைத்தேர்தலின்போது செ.இராசதுரை, கவிஞர்.காசி ஆனந்தன் ஆகியோர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் வீட்டுச்சின்னத்தின் கீழும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் உதயசூரியன் சின்னத்தின் கீழும் மோதவிடப்பட்டார்கள். இராசதுரை அவர்களைக் களையெடுக்கும் நோக்கில் அமிர்தலிங்கம் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இச்சூழ்ச்சித்திட்டம் எதிர்பாராத விதமாக இராசதுரை அவர்கள் வென்றும், காசி ஆனந்தன் அவர்கள் தோற்றும் தோல்வியைத் தழுவிக்கொண்டதோடு, தேர்தலில் வெற்றிபெற்ற இராசதுரை அவர்கள் ஐ.தே.க இல் இணைந்து இந்து மத விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சுப்பதவியையும் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஐ.தே.க அரசாங்கம் ஐ.தே.க பிரமுகரும் அமைச்சரும் என்னும் நிலையில் நாடாளுமன்றத்தில் இராசதுரை ஆற்றிய கன்னி உரையின்போது பெரிதாக ஆரவாரப்படுத்தியதோடு அவ்வரசாங்கம் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றுக்குள் பெரிதாக கூச்சலிட்டுத் தமது அசாதாரண மகிழ்ச்சியை அம்பலப்படுத்தியுமுள்ளார்கள்.

வடக்கு-கிழக்கைப் பிரித்துத் தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு ஏற்கனவே திட்டமிட்டு உருப்படியான வழியெதுவும் தெரியாதநிலையில் சிந்தித்துக்கொண்டிருந்த இலங்கையின் ஆளுவோருக்கு இராசதுரை தொடர்பிலான இந்நிலைப்பாடு வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. இப்பின்னணியில் தான் கொழும்பின் ஆள்வோர் தொடர்ந்தும் கிழக்குத் தமிழ்பேசும் மக்களை வடக்கின் தமிழ்த்தலைமை, கீழ்மாகாணத்தமிழர்கள் எனவும், இஸ்லாமியர்கள் எனவும் ஓரங்கட்டக்கூடியதான தந்திரோபாயமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. கொழும்பின் ஆட்சியாளர்கள் வடக்கின் தமிழ்த்தலைவர்களின் பிரதேசம் சார்ந்த புறக்கணிப்புக்களினாலும் தமிழர்-இஸ்லாமியர் என்னும் முரண்பாடு தொடர்புகளினாலான பாகுபாடுகளினாலும் அதிருப்தியடைந்த கிழக்கின் தமிழ்பேசும் மக்களான தமிழ்-இஸ்லாமிய மக்களையும் அவர்களின் பிரதேசஞ்சார்ந்த பிரதிநிதிகளையும் தமது வலைக்குள் அகப்படுத்தும் நடவடிக்கைகளை மிகவும் துரிதகதியில் மேற்கொண்டார்கள். இதன் பெறுபேறுகள் தான் பிரதேசஞ்சார்ந்த அரசியல் நியமனங்கள், சமூக நலன்சார்ந்த நியமனங்கள் என்பவற்றில் கிழக்குக்கு முன்னுரிமை அளித்துத் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் தமிழரையும், இஸ்லாமியர்களையும் வடக்கு, கிழக்கு என்னும் பிரதேச உணர்வின்பாற்பட்டுப் பிரித்துவைத்து அதில் வெற்றியையுங் கண்டுள்ளார்கள்.

அத்தோடு விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆரம்பகாலத்திலிருந்தே தொடர்ச்சியாக அவ்வமைப்பில் பல ஆண்டுகள் அங்கம் வகித்து அயராதுழைத்த கருணா அவர்கள் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச்சென்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்னும் அமைப்பை உருவாக்குவதற்குப் விடுதலைப்புலிகள் அமைப்பின் நிழல் ஆட்சிக்குள் இடம்பெற்ற பிரதேச ரீதியான பாதுபாடுதான் காரணமாக இருந்திருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தையும் விடுதலைப்புலிகள் அமைப்பினர் தமது கட்டுப்பாட்டிலிருந்து கைநழுவிவிட்டு பின் பல ஆண்டுகளாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது அந்நிழல் நிர்வாக ஆட்சி அலகுகளுக்கு பொறுப்பாளர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது பிரதேச ரீதியான பாதுபாடும் ஏனைய விடயங்களிலும் இப்பாகுபாடும் இழைக்கப்பட்டதனால் தான் பிரதேச ரீதியான இப்பாகுபாடு இழைக்கப்படுவதனை பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் தான் கருணாவின் வெளியேற்றமும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டமையும் இடம்பெற்றதெனக்கருதுவதற்கு இடமிருக்கின்றது.

இப்பின்னணியில் தான் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்படுதவதற்குக் கருணா அவர்கள் மிகவும் பக்கபலமாக இருந்துமுள்ளார். தொடர்ந்து கிழக்கில் இடம்பெற்ற பிரதேச சபைத் தேர்தலில் கருணா அவர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திருமதி. சிவகீர்த்தா பிரபாகரன் ஆகியோரும், அவர்களையொத்தவர்களும் மாகாண ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு துணைபோனதோடு, வடகிழக்கைப் பிரித்து ஆட்சிசெய்யும் சூழ்ச்சிக்கும் துணைபோயுள்ளார்கள்.

எனவே இவ்வாறான நிகழ்வுகள் வடக்குக் கிழக்கைப் பிரித்துவைத்து ஆளவேண்டுமென்னும் இலங்கையை ஆள்வோரின் பசிக்கு அவர்கள் அதிகளவு கஷ்டப்படாமலே பெற்ற உணவுகளாகும். தொடர்ந்தும் இந்நிலை நீடித்துவருவதை அவர்கள் மிகவும் சாதுரியமாக மெருகூட்டி வலுப்படுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரித்துவைத்து அப்பிரிவினையில் சவாரி விடுவதையே தமது தாரக மந்திரமாகக் கொண்டுள்ளார்கள்.

இவ்வாறாக வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரித்துத் தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கான சதித்திட்டத்தை முறியடித்து அத்திட்டத்தினால் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு தொடர்பில் உருவாகவுள்ள ஆபத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் நம்மவர்கள் தமக்குள் ஏற்படும் அரசியல் முரண்பாடுகளையோ அல்லது தனிநபர் முரண்பாடுகளையோ கொழும்பு ஆளுவோருடன் இணைந்து பலப்பரீட்சை செய்துகொள்ளும் சாபக்கேட்டை உடனடியாக அகற்றவேண்டும். தமக்குள் எக்காரணிகளை முன்னிட்டாவது, தனிநபர் முரண்பாடுகளோ அல்லது பிரதேசஞ் சார்ந்த முரண்பாடுகளோ அல்லது சமூகஞ்சார்ந்த முரண்பாடுகளோ அல்லது நிதி விவகாரங்களின் பாற்பட்ட முரண்பாடுகளோ தோன்றும்போது மறந்துங்கூட ஆளுவோருக்குத் துணைபோய் அவர்களுடைய பிரித்தாளும் சூழ்ச்சிக்கு அடிபணிந்துவிடக்கூடாது.

தமக்குள் எப்பின்னணியைக்கொண்ட பிரச்சினைகளுக்காவது முகங்கொடுக்கும்போது தமிழர் என்ற உணர்வையும், வடக்கு-கிழக்கு இணைந்த ஒரே தாயகம் என்னும் கோட்பாட்டையும் ஒரு சிறிதளவேனும் தளரவிடாமல் தமக்கிடையிலே பலப்பரீட்சை செய்துகொள்ளவேண்டுமே தவிர எதிரியுடன் இணைந்து பலப்பரீட்சை செய்துகொள்வது முழுத் தமிழினத்துக்குமே ஓர் ஆபத்தான விடயமாகும்.

மறவன்

08ஆம் பக்கம் பார்க்க...

# தமிழர் கலை, கலாச்சாரம் தொடர்பில் விழிப்புணர்வு அவசியமானது

தமிழகம், இலங்கை உட்பட உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் மொத்த எண்ணிக்கையிலும் பார்க்க மிகக்குறைந்த எண்ணிக்கையைக்கொண்ட உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் எத்தனையோ இணக்குழுமங்களுக்குத் தமக்கெனத் தனிநாடுகளும் சுயாட்சிகளும் இருக்கும்போது தமிழருக்கென ஒரு தனி நாடோ சுயாட்சியோ இல்லாமல்போனது அவ்வினத்தின் துரதிட்டம் என்றுதான் கொள்ளவேண்டும்.

இதனால்தான் காந்தியாரின் பாரத சுதந்திரப்போரின்போது தமிழகத்தில் இருந்து பங்குபற்றிய ஏறக்குறையச் சமவயதினரான மூதறிஞர் இராஜாஜி அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் பிரித்தானியரின் சிறைச்சாலையில் ஒன்றாகவிருந்து வாடியபோதும் பின்னாளில் பாரதத்துக்குச் சுதந்திரம் கிடைத்த பின் இவ்விரு நண்பர்களும் இருவேறுபட்ட துருவங்களாக மாறி முன்னவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பாரத தேசத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்திச் சுதந்திராக்கட்சி என்னும் கட்சியை ஆரம்பித்துத் தமிழகத்தின் கவர்னராகவும் பதவி வகித்தார். பின்னவர் பெரியார் அவர்கள் தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கு தேசத்தவர் ஆகிய முப்பிரிவினர்களையும் உள்ளடக்கிய திராவிட இனத்தவர்களின் இழிநிலைகண்டு கொதித்தெழுந்ததோடு அவ்வினத்தவர்களுக்குள் மேட்டுக் குடியினராக வாழ்ந்துகொண்டிருந்த வைதீகப் பிராமணர்களினதும், மதத்தை முகமூடியாகக்கொண்டும் கடவுளரைப் பாதுகாப்புச் கவசங்களாகக் கொண்டும் டில்லியின் உள்ளூர் ஆதிக்க சக்திகளின் அனுசரணையோடு தமிழகத்துக்குள் கட்டவிழ்த்துவிட்ட பகுத்தறிவுக்கொவ்வாத மூடத்தனங்களையும், மந்திரமாயா ஜாலங்களையும், பாலியல் வக்கிரங்களையும், அசாதாரணமான உழைப்புச் சுரண்டலையும் கடுமையாகச் சாடிய ஈ.வெ.ரா.பெரியார் அவர்கள் பிராமண ஆதிக்கத்தின் வரம்புமீறலைப் பிரதானமான கருப்பொருளாகக்கொண்டு முதலில் சுயமரியாதை இயக்கம் என்னும் பகுத்தறிவு சார்ந்த அமைப்பை உருவாக்கிப் பின்னாளில் அவ்வமைப்பைத் திராவிடர் கழகம் என்னும் பெயரில் அரசியல் கட்சியாக மாற்றினார். இக்கட்சிக் கொடியின் நிறம் கறுப்பாக பெரியார் அவர்களினால் ஆக்கப்பட்டதிலிருந்தே அவருடைய விசித்திரமான-விநோதமான மனோபாவத்தைப் புரிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்ல. தமிழரை மிகப் பெரும்பான்மையினராக உள்ளடக்கிய உலகளாவிய திராவிட இனத்தின் அடிமைநிலைகண்டு அகமிக வருந்தி அவ்வினத்திற்கான ஒரு சுயாட்சி மிக்க தனிநாடு தேவையென்பதை உணர்ந்து திராவிட நாடு என்னும் கோரிக்கையை முன்வைத்தார். இவருடைய அரசியலின்பாற்பட்ட ஈர்ப்பினால் அறிஞர் சி.என்.அண்ணாதுரை அவர்கள் கவரப்பட்டு அன்னாரோடு ஆரம்பத்தில் இணைந்து வேலை செய்தபோதும்பின்னர் பிரிந்து திராவிடர் முன்னேற்றக்கழகம் என்னும் அமைப்பை உருவாக்கிப் பெரியார் அவர்களால் முன்வைக்கப்பட்ட திராவிட நாடு கோரிக்கையை ஆரம்பத்திலும் பின்னர் தமிழ்நாடு என்னும் கோரிக்கையையும் முன்வைத்தார். தமிழர் சுயமரியாதை, கலை, கலாச்சாரம் தொடர்பில் விழிப்புணர்வின் அவசியம் முதன்முதலாகத் தந்தை பெரியார் அவர்களினாலேயே அரசியல் ரீதியாக உணரப்பட்டிருந்தது. பெரியாரின் இவ்வுணர்வினால் கவரப்பட்டு அவரைப் பின்தொடர்ந்து அறிஞர் அண்ணா அவர்கள் அவரைவிடப் பலமடங்கு வீச்சோடு பின்னாளில் தமிழர் சுயமரியாதை, கலை, கலாச்சாரம் தொடர்பிலான விழிப்புணர்வின் அவசியம் பற்றி எழுதியும் பேசியும் வந்ததோடு அரசியல் ரீதியாகவும் அவ்விழிப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளதோடு அதற்கான தனது அரசியல் பணிகளையும் அயராது மேற்கொண்டு வந்துள்ளார்.

இவ்வாறாகத் தமிழர் கலை, கலாச்சாரம் தொடர்பிலான விழிப்புணர்வின் அவசியம் பற்றி அரசியல் ரீதியாக ஈ.வெ.ரா.பெரியார் அவர்களினால் முதன்முதலாக வலியுறுத்தப்படத், தொடர்ந்து அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி முதலானோரால் அவ்வலியுறுத்தல் மெருகூட்டப்பட்டுக்கொண்டே வந்தது. இதன் தாக்கம் இலங்கைத் தமிழ் மக்களுக்குள்ளும் தமிழர் கலை, கலாச்சாரம் தொடர்பிலான விழிப்புணர்வின் அவசியம் வேண்டற்பாலது என்னும் சிந்தனையைத் தோற்றுவித்தது.

தமிழ்மக்கள் உலகம் முழுவதும் பரந்துவாழ்ந்தபோதும், அவர்களுக்கெனத் தன்னாதிக்கம், இறைமை, சுயநிர்ணயம், சுயாட்சி என்பன எந்த நாட்டிலுமே இல்லாத நிலையில் அவர்களால் தொன்றுதொட்டுபேணப்பட்டுவந்தகலை, கலாச்சார விழுமியங்களும் பேணப்பட்டு பாதுகாக்கப்படாமல் அம்மக்களின் தனித்துவம் சிதைக்கப்படுவதோடு மற்றைய இனங்களுக்குள் அமைந்திராத அளவில் சிந்தனையாளர்கள், சித்தர்கள், ஞானிகள், அறிஞர்பெருமக்கள் ஆகியோர் பெருமளவில் தமிழர்களுக்குள் குறிப்பாகத் தமிழகத்தில் தோன்றியிருந்தமையும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோர் அவதரித்திருந்தமையும் அபாரமான ஆற்றல்மிக்க கலைஞர்கள் அவர்களுக்குள் வாழ்ந்தமையும் தமிழர் கலை, கலாச்சாரம் தொடர்பிலான விழிப்புணர்வு எந்தளவுக்கு அவசியமானதொன்றாக விளங்குகின்றதென்பதற்கு ஆதார சுருதிகளாக விளங்குகின்றன. தமிழர் கலை, கலாச்சாரம் தொடர்பில் விழிப்புணர்வின்றி ஏனோதானோ என இருப்பதோடு மட்டுமல்லாமல் பிற இனத்தவர்களின் கலை, கலாச்சாரம் தொடர்பில் ஈடுபாடுகொண்டு அவற்றின்பால் ஈர்க்கப்பட்டுச் செல்வதாலும் தமிழர்களுக்குள் வாழ்ந்து மடிந்த தலைசிறந்த சிந்தனையாளர்கள், சித்தர்கள், ஞானிகள், காப்பிய கர்த்தாக்கள் ஆகியோரைப்பற்றி வருங்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ளமுடியாத நிலையையும், அவர்களுடைய அருமருந்தன்ன திராவிடர் தமிழர் நலன்பேணும் ஆக்கங்கள் அனைத்தும் அம்மக்களின் தனிச்சிறப்புக்களையெல்லாம் விலாவாரியாக எடுத்தியம்பும் இலக்கிய ஓவியங்கள் சகலவையும் பூண்டோடு அழிந்தொழிவதோடு தொன்றுதொட்டு இருந்துவரும் உலகையே உவகையில் ஆழ்த்திய தமிழர் கலை, கலாச்சாரம் அகிலந் தழுவியளவில் மங்கி மடிவதற்கும் வழிவகுக்கும்.

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் திராவிடர்-தமிழர் நலன்சார்ந்த கலை, கலாச்சார விழிப்புணர்வின் அவசியத் தன்மையை-அவர்களுடைய ஆடை, அணிகலன்களோடும் கிராமிய மட்டத்தில் இடம்பெறும் கலைநிகழ்ச்சிகளோடும் மட்டும் வரையறைக்குட்படுத்தாமல் குடும்ப ஆரோக்கியத்துக்கும், சமூக சௌக்கியத்துக்கும் சாதகமாக வலியுறுத்தினார். அன்னார் குடும்பப் பிரிவினைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், பெண் அடக்குமுறை, பெண்ணை வெறும் சிற்றின்பப் பொம்மையாக கருதும் பிற்போக்குத்தனம், சமஸ்கிருத மொழி சார்ந்த இந்து மதக் கிரியைகள் அனைத்தையும் ஆரியர் தமது திராவிடர்-தமிழர் மீதான அடக்குமுறை ஆட்சியைக் கச்சிதமாகக் கையாள்வதற்கான சூழ்ச்சிகளும், சதித்திட்டங்களுமே என வர்ணித்தார். அவர் அக்காலத்தையத் தமிழ்ச் சினிமாக்களையே கலாச்சாரச் சீரழிவுக்கு வித்திடுக்கின்றன என வர்ணித்தவர் எனின் இக்காலத் தமிழ்ச் சினிமாக்களை அவரையொத்த கண்கொண்டு நோக்குபவர்களுக்கு அச்சினிமாக்கள் எந்தளவு வீச்சுடன் கலாச்சாரச் சீரழிவுக்கு வித்திடுகின்றன என்பது தெளிவாகப் புரியும்.



இன்றைய தமிழர் கலைப் படைப்புக்கள், மேற்கத்தையப் பாணியைக்கைக்கொண்டு அதன் வழி நின்றும், தமிழர் கலை மரபுகளைப் பேணியும் வெளிக்கொணரப்படுவதால் தமிழர் மரபுசார்ந்த மனிதந் தழுவிய கலைவெளிப்பாடுகளைத் திரிவுபடுத்தியும் இரண்டுங்கெட்டான் நிலையில் காணப்படுகின்றன. இந்த இரண்டுங்கெட்டான் நிலை தமிழர்களைக் குறிப்பாக இளையோரைத் தமது மரபுசார்ந்த கலை வெளிப்பாடுகள் எவையெனத் தெரிந்துகொள்ளமுடியாத நிலையில் திணறடிக்கச் செய்கின்றன. இதனால் தற்போது தமிழர் மரபுசார்ந்த கலை வெளிப்பாடுகளும் அதன் குறியீடுகளும் திசைமாறிச் செல்வதோடு மங்கு மறையவுஞ் செய்கின்றன.

வெறும்கேளிக்கை ஆட்டங்களும் அர்த்தமற்ற அநாகரிகமான கலை வெளிப்பாடுகளும், சினிமா உட்பட அனைத்துக் கலை ஊடகங்களையும் இன்று நிறைத்து நிற்கின்றன. இன்றைய சினிமாக்களின் கதையோட்டங்களும், காட்சி வெளிப்பாடுகளும், பாடல்களும் தொன்றுதொட்டு இருந்துவரும் தமிழர் கலை வெளிப்பாடுகளுக்கு முரணாகவும், பண்பாட்டு விழுமியங்களுக்கு மாறாகவும், பெண்கள் தொடர்பான உயரிய இடத்தையும், ஆண்கள் தொடர்பில் பெண்கள் காலங்காலமாகக் கடைப்பிடித்துவரும் மிகவும் மரியாதை மிகுந்த அணுகுமுறைகளைச் சிதைப்பனவாகவும் பிஞ்சு உள்ளங்களில் மரபுசார் தமிழர் கலை வெளிப்பாடுகள் சார்ந்த ஆரோக்கியமற்ற விதைகளை விதைப்பனவாகவும் விளங்குகின்றன.

மேலும் உள்ளூர் மட்டங்களில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளும் இப்பாணியைப் பின்பற்றியே பெருமளவில் மக்கள் நுகர்வுக்கு ஆட்படுத்தப்படுகின்றன. அத்தோடு உள்ளூரில் தயாரிக்கப்படும் குறும்படங்களும் இத்தன்மை வாய்ந்தவைகளாகவே காணப்படுகின்றன. தமிழரின் வழிபாட்டுத் தலங்களான சைவத் தலங்களிலும் கிறிஸ்தவத் தேவாலயங்களிலும் கூடப் பாலியல் வக்கிர உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் இவ்வழிபாட்டுத் தலங்களுக்குப் பெண்கள் ஆடைகள் அணிந்து செல்லும் முறையும், அவர்களுடைய அலங்காரங்களும் வழிபாட்டுத்தலங்களிலிருந்தே தமிழர் கலாச்சாரம் தொடர்பிலான விழிப்புணர்வு மழுங்கடிக்கப்படுவதற்கு வித்திடுகின்றன. இந்து ஆலயங்களில் காலங்காலமாக ஆண்கள் மேலாடையின்றி உட்சென்று வழிபாடு செய்ய வேண்டுமென்னும் இந்து மதஞ்சார்ந்த கலாச்சார மரபு உள்ளூர் ஆலயங்களிலுங்கூட மிகப்பெருமளவில் மீறப்பட்டுள்ளது. வருமானம் ஈட்டுவதொன்றையே இலக்காகக்கொண்டு தென்னிந்தியச் சினிமாத்துறையினர் பாரம்பரிய தமிழர் கலாச்சார மரபுகளை எவ்வாறு சிதைத்துச் சின்னாபின்னமாக்குகின்றார்களோ அதைப்போலவே இந்துமத ஆலய நிர்வாகத்தினரும் வருமானம் பெறுவது ஒன்றை மட்டுமே இலக்காக வைத்துக் காலங்காலமாக இருந்துவந்த இந்துமதஞ்சார்ந்த தமிழர் கலாச்சார விழுமியங்களை ஆலயங்களில் கூடக்காற்றில் பறக்கவிட்டுள்ளார்கள்.

இடையிட்டு அந்நியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டவர்கள் வழிவந்த கிறிஸ்தவ மதஞ்சார்ந்த தமிழர்கள் கூடச் செய்யத் தயங்கும் விடயங்களைச்செய்து தமது மேற்கத்தையம் தொடர்பிலான தாழ்வு மனப்பான்மையைப் பூர்த்தி செய்துகொள்கின்றார்கள்.

கிறிஸ்தவ மத வழிபாட்டுத்தலங்களில் நம்மவர்கள் மேற்கொள்ளும் ஆட்டம்பாட்டங்களை மேற்கத்தையக் கிறிஸ்தவர்கள் கூடச் செய்யத்தயங்குவர். இதனால் கிறிஸ்தவத்தின் பெயராலும் தமிழர் கலை-கலாச்சார விழுமியங்கள் உருக்குலைக்கப்படுகின்றன என்பதே பொருத்தமானதாகும்.

தொன்மைமிக்க மதம், ஆதிமூலமதம், வரலாறே இல்லாத மதம், முதல் மனிதனும், முதல் மனுஷியும் கடைப்பிடித்த மதம் எனப்பெருமை பேசும் இந்து மதத்தவர்கள் தமது மதச் சம்பிரதாயங்களை ஆலய வழிபாட்டு நேரங்களிலும் ஏனைய சமயஞ்சார்ந்த கிரியைகளிலும் முழுமையாகக் கைவிட்டுப் பணம் சம்பாதிக்கும் யுக்தி நவீன தென்னிந்தியச் சினிமாத் தயாரிப்பாளர்களின் பணம் சம்பாதிக்கும் யுக்தியைப் போலல்லாது மிகவும் கேவலமானது. ஏனெனில் ஆலய வழிபாடும்இந்துமதஞ்சார்ந்தகிரியைகளும் சினிமாத்துறையோடு ஒப்பிடப்படுமளவுக்கு தரங்குறைந்தனவல்ல. எனவே இந்துமதஞ்சார்ந்த ஆலய வழிபாடும் அம்மதஞ்சார்ந்த கிரியைகளுங்கூட தமிழர் கலாச்சார விழுமியங்களின் தரத்தை மிகவும் வலுவான வீச்சோடு வீழ்ச்சியடையச்செய்கின்றன.

இவ்விடத்தில் தமிழ்பேசும் இஸ்லாமியர் தமது பள்ளிவாசல்களில் இடம்பெறும் வழிபாடுகளில் பயபக்தியோடு இஸ்லாமிய மதஞ்சார்ந்த நெறிகளைக் கடைப்பிடித்துத் தமிழ் பேசுபவர்கள் என்னும் முறையில் தமது வழிபாடு சார்ந்த கலாச்சாரம்பேணும்கண்ணியத்தை இந்து மதஞ்சார்ந்த தமிழர்களும், இடையிட்டுத் தழுவியதனால் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களும் பேணிப்பாதுகாத்துத் தமிழர் கலாச்சாரம் தொடர்பில் விழிப்புணர்வைப் பேணுவார்களாக.

இறுதியாக தமிழில் வெளிவந்துகொண்டிருக்கும் பெருந் தொகையான பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் ஏனைய ஊடக வெளியீடுகள் ஆகியவற்றின் உள்ளடக்கங்கள் வெறும் வியாபார நோக்கமொன்றையே மையமாகவைத்து அந்நோக்கத்தை மட்டுமே வென்றெடுக்கக்கூடியதான ஆக்கங்களை மட்டுமேதொடர்ச்சியாகவும், துரிதமாகவும் அள்ளி வழங்கிக்கொண்டிருக்கின்றன. இவ்வாக்கங்கள் இளையோரின் உள்ளங்களில் மட்டுல்ல முதியோரின் உள்ளங்களிலும் நச்சு விதைகளைத் தூவிப் பாரம்பரியத் தமிழ் கலை கலாச்சார விழுமியங்களுக்கு நிரந்தரமாகவே சாவு மணி அடிக்கின்றன.

08 ஆம் பக்கம் பார்க்க...

கருணைக் கண்ணன்

# பிராந்தியச்  செய்திகள்

## 19 வருடங்களின் பின்னர் கொலை சந்தேகநபர் ஒருவர் கைது



நபர் ஒருவரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் 19 வருடங்களாக மறைந்திருந்த நபர் ஒருவர் வீரவில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அம்பாந்தோட்டை பொலிஸ் தலைமையகத்திற்கு கிடைத்த தகவலுக்கமைய அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது, சந்தேக நபர் அவரது வீட்டின் கட்டிலுக்கு கீழ் மறைந்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நபர் 1996ம் ஆண்டு இரத்தினபுரி பிரதேசத்தில் மாணிக்கக்கல் வியாபாரி ஒருவரை கொலை செய்துவிட்டு அவரிடம் இருந்த மாணிக்கக்கற்களை கொள்ளையடித்து சென்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்டவர் அம்பாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது,

## மூன்றரை கிலோ கஞ்சா பொதியுடன் இருவர் கைது

முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மதுரங்குளி கரிக்கட்டை பிரதேசத்தில் வைத்து மோட்டார் சைக்கிளில் மூன்றரை கிலோ கஞ்சாவைக் கொண்டு சென்று கொண்டிருந்த இருவரை புத்தளம் பிரிவின் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம் செவ்வந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து கஞ்சாவை மொத்தமாகக்கொண்டு வந்து புத்தளம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் விற்பனை செய்து வந்திருப்பதாக அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினையடுத்து புத்தளம் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் வீதியில் காத்திருந்து இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதி மற்றும் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக முந்தல் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

---

கோலையில் 12.05.15 அன்று காலை இடம்பெற்ற வீதி விபத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டுபாதசாரிகள் உள்ளிட்ட மூன்றுபேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். கேகாலை ரான்வல்ல என்னும் இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. டிப்பர் ரக வண்டியொன்றும் லொறியும் மோதிக் கொண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்னளனர்.

---

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

எனினும் எதிர்வரும் தேர்தலில் மஹிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவாராகவிருந்தால் தமிழ் மக்கள் மீண்டும் தற்போதைய மைத்திரியின் ஆட்சியில் அடக்கியொடுக்கப்படுவதைவிட அதிகளவு வீச்சோடு அடக்கியொடுக்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. இறுதியாக இடம்பெற்ற தேர்தலின்போது தமிழ் மக்களைக் கூட்டமைப்பார் மைத்திரிக்கு வாக்களிக்கும்படி கோரியமையும், அவர்களின் கோரிக்கைக்கமைவாகத் தமிழ் மக்கள் அவருக்கே வாக்களித்தமையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாரின் மீது மஹிந்தவுக்கு ஏற்பட்ட சீற்றத்தைவிடத் தமிழ் மக்கள் மீதே அவருக்கு அதிகளவு சீற்றத்தையேற்படுத்தியிருக்கும். நாட்டில் உள்ள இடதுசாரியினருக்குத் தமது வங்குரோத்துத்தனங்களிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அவ்வப்போது விதம் விதமான உபாயங்கள் உதயமாவதுபோல், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பாருக்கும் தமது வங்குரோத்துத் தனங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு அவ்வப்போது விதம் விதமான உபாயங்கள் உதயமாகிக்கொண்டிருக்கத்தான் செய்கின்றன.

எது எப்படியிருந்தபோதும் எதிர்வரும் தேர்தலில் மஹிந்தவைப் பிரதமர் ஆக்குவது தமிழருக்கு மிகவும் பாதகமாகவே முடியும். கடந்த தேர்தலின்போது மைத்திரிக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தமையையிட்டு அவர்கள் மீது மிகுந்த சீற்றமடைந்திருக்கும் மஹிந்த அவர்கள் மீண்டும் ஆளுங்கட்டில் ஏறி னால், பழிவாங்கும் இயல்பைத் தன்னகத்தே அதிகளவில் கொண்டிருக்கும் மஹிந்த அவர்கள் தமிழர் மீதான அடக்கு முறைகளையும், புறக்கணிப்புக்களையும் எதேச்சாதிகாரங்களையும் நிச்சயமாக அதிகளவில் கட்டவிழ்த்து விடுவார் என்பதே நிதர்சனமாகும். எனவே எதிர்வரும் தேர்தலில் மஹிந்தவைப் பிரதமராக்குவதற்குத் தமிழ் மக்கள் முன்வருவது விவேகமல்ல. அதேநேரம் யாரைப் பிரதமராக்க வேண்டும் என்னும் விடயத்திலும் வங்குரோத்துத் தமிழ் தேசியத்தினதும் குரலைக் குருட்டாம் போக்கில் பின்பற்றுவதும் விவேகமான ஒன்றல்ல.

எனவேதமிழ்மக்கள்சுயசிந்தனையின் பாற்பட்டுத் தம்முடைய அரசியல் தெரிவை மேற்கொள்ள முன்வருவதே விவேகமானதாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாரோ அல்லது ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது 'கஜேந்திரகுமார் பொன்னம்பலம்' தலைமையிலான அணியோ அல்லது ஏனைய குழுக்களோ தமிழ் மக்களுக்குள் விதைக்கும் எண்ணங்களை அம்மக்கள் தமக்குள் கலந்தாலோசித்து ஆழப் பரிசீலித்தபின்பே எக்கட்சியை ஆதரிப்பதென்னும் முடிவுக்கு வரவேண்டும்.

எனினும், இதுவரையில் தமிழ் மக்கள் தமது சுயத்தை இழந்து குருட்டாம்போக்கில் தமது பிரதிநிதிகள் என எண்ணப்பட்டுவரும் அரசியல் வாதிகளின் கைப்பொம்மைகளாகச் செயற்பட்டு வருவதின் தொடர்ச்சியே இறுதியாக இடம்பெற்ற தேர்தலின்போதான மஹிந்தவை நிராகரித்தமையெனலாம். அதனால் அவரை நிராகரித்தமை தொடர்பான அவரது கடுஞ்சீற்றம்எதிர்வரும்தேர்தலில் அவர் பிரதமராக்கப்பட்டால் தமிழ் மக்கள் மீதான அவருடைய எதிர்ப்பாய்ச்சல் மிக அதிகளவில் இடம்பெறும் என்பதற்கு ஏதுநிலையுண்டு. எனவே தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் மஹிந்தவை நிராகரித்தே தமது தீர்ப்பை வழங்குவது தான் தற்போதைய அரசியல் கள அமைவில் பொருத்தமான ஒன்றாகவிருக்கும்.

## 12 வயதுச் சிறுவன் கடத்தப்பட்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பில் 12 வயதுச் சிறுவன் ஒருவன், கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆறுமுகத்தான்குடியிருப்பு கலைமகள் வீதியைச் சேர்ந்த முஹம்மத் அஸ்லம் (வயது 12) என்ற மாணவனே கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளதாக அதிகாலை ஒரு மணிக்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட சிறுவன் தற்போது ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் குறித்து சந்தேக நபரைத் ஏறாவூர் பொலிஸார் தேடி வருகின்றனர்.

---

தலைமன்னார்ஸ்ரேசன் பழைய பாலத்தடி கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் 11.06.15 வியாழக்கிழமை காலை மரத்தில்செதுக்கப்பட்ட பழைமைவாய்ந்த மனித உருவம் கொண்ட சிலை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. புதன்கிழமை மாலை இந்த சிலை கரையொதுங்கியதைக் கண்ட மீனவர்கள் தலைமன்னார் கிராம சேவை அலுவலகருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.மீனவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் காலை கிராம அலுவலகர் குறித்த பகுதிக்குச் சென்று சிலையை மக்களின் ஒத்துழைப்புடன் மீட்டு தனது அலுவலகத்திற்கு கொண்டு சென்றுள்ளார். இந்த விடயம் தொடர்பில் கிராம அலுவலர் மன்னார் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

மீட்கப்பட்ட மரத்தினால் செதுக்கப்பட்ட மனித உருவம் கொண்ட சிலை சுமார் 5 அடி உயரம் கொண்டதாகவும், மிகவும் பழைமை வாய்ந்ததாகவும் காணப்பட்டுள்ளது. அண்மையில் நேபாளத்தில் ஏற்பட்ட பூகம்பத்தினையடுத்து குறித்த சிலை கடலில் கலக்கப்பட்ட நிலையில் தலைமன்னார் ஸ்ரேசன் கடற்கரையில் கரையொதுங்கியிருக்க முடியும் என அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

05ஆம் பக்கத் தொடர்ச்சி...

இன்று முற்போக்கு முகமூடி அணிந்து வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் நலனுக்காக என மூன்று மலையகத் தமிழ் அரசியல்வாதிகளைத் தலைவர்களாகக் கொண்ட கட்சிகளினால் முக்கூட்டணியொன்று தமிழர் முன் வைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு உண்மையில் இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றும் இருதரப்பினரில் ஒரு தரப்பினருக்கு தமிழர் வாக்குகளைச் சேகரித்துக் கொடுக்கும் அறப்பணிக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு என்றே கருதவேண்டும்.

எனவே மலையகத் தமிழர்களின் இன்றைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமாயின் இன்றைய அம்மக்கள் சார்ந்த தமிழ் தலைமையினாலோ அல்லது இடதுசாரித் தலைமையினாலோ முடியாது. தமிழர் அடையாளமாக இருந்தாலும் சரி, தொழிலாளர் குறியீடாக இருந்தாலும் சரி புதிய தலைமையொன்றினால் மட்டும் தான் இது சாத்தியமாகும்.

---

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவ்விடத்தில் கீழ்வரும் விடயத்தைச் சுட்டிக்காட்டி எதிரிக்குத்துணை போகின்றவர்களைத் தடுத்து நிறுத்துவது பொருத்தமானது. அதாவது ஆரம்பத்தில் இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயர் வியாபாரத்துக்காகத் தான் இலங்கைக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு இலங்கையின் அரசியல் தொடர்பாகவோ, ஆட்சி நிர்வாகந் தொடர்பாகவோ அலட்டிக்கொள்ள வேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. சுருங்கக்கூறின் முதலில் நாட்டுக்கு வந்த போர்த்துக்கேயருக்குத் தேசத்தின் அரசியல் நிர்வாகந் தொடர்பிலான எண்ணோட்டம் பூச்சியமாகவே இருந்தது. அவர்களை இத்தேசத்தின் ஆட்சி-அரசியல் நிர்வாகந் தொடர்பில் சிந்திக்கவைத்தவர்கள். அப்போது இத்தீவிலிருந்த மூன்று இராச்சியங்களான கோட்டை, கண்டி, கரையோரம் ஆகியவற்றை ஆண்ட சிங்கள மன்னர்களே எனின் பிழையன்று.

கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம், கரையோர இராச்சியம் என மூன்று இராச்சியங்களையும் ஆட்சி செய்த சிங்கள மன்னர்கள் தமக்குள் தகராறுகளில் ஈடுபட்டு ஒருவரோடு ஒருவர் மோதியபோது- வியாபாரத்துக்காக மட்டுமே வந்திருந்த போர்த்துக்கேயர் கெட்டிக்காரர்கள் என்னும் மனோபாவத்தின் பாற்பட்டு அவர்கள் ஒருவரை இன்னொருவர் முறியடிப்பதற்கு வியாபார நோக்கில் வந்திருந்த அந்த அந்நியர்களிடம் உதவி கேட்டுச் சென்றார்கள். இம் மன்னர்கள் இவ்வாறான முட்டாள்த்தனத்தோடு அவர்களிடம் உதவி கேட்கப்போனமையால் தான் அவர்கள் இலங்கையின் ஆட்சி நிர்வாகம் தொடர்பிலும், அரசியல் தொடர்பிலும் சிந்திப்பதற்கே ஆரம்பித்தார்கள். இதன் விளைவாக உதவி கேட்கப் போகும் மன்னர்களிடம் உதவுவதாக உறுதியளித்துவிட்டுத் தந்திரோபாயமாக மூன்று மன்னர்களையும் தான் வெற்றிகொண்டு தமது ஆட்சியை மூன்று இராச்சியங்களிலும் நிலைநிறுத்திவிட்டுப் பின்னர் தீவு முழுவதையுமே தம தாக்கிக்கொண்டும்விட்டார்கள். இது தான் இலங்கையானது அந்நியர் ஆட்சியின்பாற்பட்ட வரலாற்றுப் பின்னணியாகும்.

இவ்வரலாற்றுப் பின்னணியை ஒத்ததாகவே தற்போதைய வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரிவினையும் அதைச் சாதகமாகக் கொண்டதான ஆளுவோரின் ஆளுகைகளும் மேலோங்கி நிற்கின்றன.எனவே உடனடியாக இவ்வரலாற்றுப் பின்னணியைப் படிப்பினையாகக் கொண்டு நம்மவர்கள் தமக்குள்ளே உருவாகும் முரண்பாடுகளை எதிரிகளின் துணை யோடு எதிர்கொண்டு நமது சுய மரியா தையை இழப்பதற்கு வழிவகுக்காமல் வருமுன் காப்பார்களாக.

---

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதுமட்டுல்லாமல் இன்று ஆன்மீகத் தலைவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தமிழர்கள் பலருங்கூட மேற்கூறப்பட்ட துறைகள்சார்ந்த தமிழர் கலை, கலாச்சார விழுமியங்களுக்கு விரோதமாகத் துணைபோகின்றார்களேயொழிய அவர்களுடைய தமிழர் கலை கலாச்சாரத்தை . நாசப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத்தடுத்து நிறுத்தி தமிழர் கலை, கலாச்சார விழிப்புணர்வின் அவசியத்தை நிலைநிறுத்துவதற்குப் பின்னடிக்கின்றார்கள். எனவே அவர்கள் உடனடியாக இவற்றில் தலையிட்டுத் தடுத்து நிறுத்தித் தமிழர் கலை, கலாச்சாரம் தொடர்பிலான விழிப்புணர்வை நிலைநிறுத்தவேண்டும்.




## விஜய் சேதுபதியை வெட்கப்பட வைத்த நயன்தாரா



விஜய் சேதுபதி-நயன்தாரா நடிப்பில் விரைவில் வெளிவரும் படம் நானும் ரவுடி தான். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தான் நடந்து முடிந்தது. நயன்தாரா எப்போதும் யாரையும் புகழவே மாட்டாராம். ஆனால், படப்பிடிப்பில் விஜய் சேதுபதி நடிப்பை பார்த்து பலரிடம் புகழ்ந்துள்ளார். இதை ஒரு நாள் விஜய் சேதுபதி காதில் படும் படியே அவர் கூற, ஒரு நிமிடம் விஜய் சேதுபதி வெட்கத்தில் தலை குனிந்தாராம்.

## தன்னை பற்றிய கருத்திற்கு பதிலடி கொடுத்த விசாகா சிங்



தற்போதைய சமூக வலைத்தளங்களில் பிரபலங்களுக்கு எப்போதும் ஒரு விதமான பிரச்சினைகள் வந்து கொண்டே தான் இருக்கின்றது. அந்த வகையில் சமீபத்தில் இந்த பிரச்சினையை சந்தித்து இதற்கு பதிலடி கொடுத்தவர் தான் விசாகா சிங். இவர் கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களிடத்தில் பிரபலமானவர். பேஸ்புக் பக்கத்தில் விசாகா தன் புகைப்படத்தை சமீபத்தில் பகிர்ந்தார். இதில் கருத்து பகிர்வில் ஒரு இளைஞர் மிகவும் கொச்சைப்படுத்தும் விதமாக சில கமெண்ட்டுக்களை தெரிவிக்க, உன்னுடைய முகப்பு பக்கத்தில் இருக்கும் ஒரு அப்பாவி குழந்தை புகைப்படத்தை முதலில் நீக்கு. தைரியம் இருந்தால் உன்னுடைய புகைப்படத்தை "முகப்பு பக்கத்தில் போட்டு, இந்த மாதிரி கருத்துக்களைப் பதிவிடு. என்னுடைய மார்பு அழகுதான். இது ஒவ்வொரு பெண்ணுக்கும் இருப்பதுதான். உன்னுடைய அம்மா, சகோதரி, மனைவி, பாட்டி, அத்தை, தோழிகளுக்கும் இது பொருந்தும்.

அவர்களிடம் போய் இப்படி கமெண்ட் அடிப்பாயா? உனக்காக நான் வருத்தப்படுகிறேன். தைரியம் இருந்தால் நேருக்கு நேர் பேசு. இல்லையென்றால் என்னுடைய பக்கத்தை விட்டு வெளியே செல்' என பதிலடி கொடுத்தார். இதை தொடர்ந்து பல திரைப்பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் இவரின் தைரியத்தை பாராட்டி வருகின்றனர்.


## மாசுவை பின்னுக்கு தள்ளிய காக்கா முட்டை



தமிழகம் முழுவதும் தற்போது காக்கா முட்டை பற்றி தான் பேச்சு, இரண்டு சிறுவர்கள் மொத்த சினிமா ரசிகர்களை கவர்ந்து இழுத்து விட்டார்கள். ஆனால், ஒரு பெரிய பட்ஜெட் படத்தையே இந்த படம் பின்னுக்கு தள்ளும் என யாரும் கனவில் கூட நினைத்து இருக்க மாட்டார்கள், அது தான் உண்மை.

சென்னையில் பல திரையரங்குகளில் இந்த காக்கா முட்டை படத்தினால் மாசு படத்தின் காட்சிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இது உண்மையாகவே ஒரு பெரிய சாதனை தான் என கோலிவூட் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

## விஜய்யுடன் நடிக்க மறுத்த நடிகை?



இளைய தளபதி விஜய்யுடன் நடிக்க பல நடிகைகள் வெயிட்டிங். ஆனால், சமீபத்தில் ஒரு நடிகை புலி படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தும் நடிக்காமல் இருந்து விட்டார். அவர் வேறு யாரும் இல்லை தீபாவளி, ஆர்யா போன்ற பல படங்களில் ரசிகர்கள் மனதை கவர்ந்த பாவனா தான்.

ஆனால், இதை அவர் வேண்டுமென்று செய்யவில்லை. புலி வாய்ப்பு அவரை தேடி வருகையில் ஒரு மலையாள பட படப்பிடிப்பிற்காக அமெரிக்கா சென்றிருந்தார். இதனால், அவர்கள் கேட்ட கோல்ஷீட்டை கொடுக்க முடியவில்லையாம். இதை நினைத்து தற்போது மிகவும் வருத்தப்பட்டு வருகிறாராம்.

## ரகசிய திருமணத்தால் கோடம்பாக்கத்தில் அதிர்ச்சி



தமிழ் சினிமாவில் ரகசிய திருமணம் செய்து கொள்வது ஒன்றும் புதிது அல்ல. இந்த தடவை நான், லீலை, மதில் மேல் பூனை போன்ற தமிழ் படங்களில் நடித்த விபா ரகசிய திருமணம் செய்து கொண்டுள்ளார். இவர், ஆட்டா எனும் கன்னட படத்தின் மூலம் சினிமா உலகுக்கு அறிமுகமானவர். சில வருடங்களுக்கு முன் சினிமா உலகில் காலடி எடுத்த வைத்த விபா திடிரென்று திருமணம் செய்தது கோடம்பாக்கத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் அவரை பத்திரிகையாளர்கள் தொடர்புகொள்ள முயன்றபோது தொலைபேசியை எடுக்கவில்லை.

அதன் பிறகு அவரது அம்மாவை தொடர்பு கொண்ட பத்திரிகையாளர்கள், இது பற்றி அவரது அம்மா விளக்கம் அளித்தார். விபாவுக்கு திருமணம் நடந்து உண்மை தான், ஆனால் யாருடன் நடந்தது. ஏன் இந்த திடிர் கல்யாணம் என்பதையலாம் தெரிவிக்க மறுத்து விட்டார் .

**சுசீந்திரன் இயக்கத்தில் ஸ்ரீ, ஹரிஷ் கல்யாண் நடிப்பில் வில் அம்பு என்ற படம் தயாராகி வருகிறது. ரமேஷ் சுப்பிரமணியம் இயக்கும் இப்படத்திற்கு கல்யாண சமையல் சாதம் படத்திற்கு இசையமைத்த அரோரா நவீன் இசையமைத்து வருகிறார்.**

**தென் சென்னை பகுதியை மையமாக கொண்டு தயாராகி இருக்கும் இப்படத்தின் டிரைலர் வரும் 14ம் திகதி வெளியாக இருக்கிறது. படத்தின் டிரைலரை சிம்பு அல்லது சிவகார்த்திகேயன் வெளியிடுவார்கள் என கூறப்படுகிறது.**

## விஜய், அஜித்தை வசூலில் ஓரங்கட்டிய லோரன்ஸ்



தமிழ் சினிமாவின் வசூல் ராஜாக்கள் என்றால் விஜய், அஜித் தான். ஆனால், இவர்களையே ஓரங்கட்டும் வகையில் அமைந்துள்ளது லோரன்ஸ் இயக்கத்தில் வெளிவந்த காஞ்சனா-2. இப்படம் ரசிகர்களிடையே மாபெரும் வரவேற்பு பெற்றுள்ளது. தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் சேர்த்து ரூ.108 கோடி தற்போது வரை வசூல் செய்துள்ளது.

இதை வைத்து பார்க்கையில் சமீபத்திய விஜய், அஜித் படங்களை விட, காஞ்சனா-2 வசூல் சாதனை படைத்துள்ளது. மேலும், இன்னும் பல திரையரங்குகளில் இப்படம் வெற்றி நடைப்போடுவது குறிப்பிடத்தக்கது.

## இனி படமே இயக்க மாட்டேன்- ரவிக்குமார் கொடுத்த அதிர்ச்சி



தமிழ் சினிமாவிற்கு பல கமர்ஷியல் ஹிட் படங்களை கொடுத்தவர் கே.எஸ். ரவிக்குமார். இவர் இயக்கத்தில் வந்த லிங்கா படம் தோல்வியடைய மிக மன வேதனையில் இருந்தார். இதை விட சில விநியோகஸ்தர்கள் செய்த செயல், இவரை மிகவும் கஷ்டப்படுத்த, இனி சினிமாவே எடுக்கக்கூடாது என்ற மன நிலையில் தான் உள்ளாராம்.

மேலும், தற்போது தனுஷிற்கு அப்பாவாக ஒரு படத்தில் நடித்து வரும் இவர், தொடர்ந்து நடிப்பதில் தான் ஆர்வம் காட்டவுள்ளாராம்.


## ரூ. 1 கோடியை தூக்கி எறிந்த நஸ்ரியா



நேரம், ராஜா ராணி ஆகிய படங்களின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களை கவர்ந்தவர் நஸ்ரியா. இவர் பிரபல மலையாள நடிகர் பஹத் பாசிலை திருமணம் செய்து கொண்டு சினிமாவில் நடிப்பதை தவிர்த்தார்.

சமீபத்தில் இவர் தனது ஆசை கணவர் கொடுத்த ரூ.1 கோடி மதிப்பிலான காரை வெளியே ஓட்டி செல்ல, யாரோ ஒருவர் காரை இடித்து விட்டு சென்றார். இதனால், கோபமான நஸ்ரியா அந்த காரை விற்று விட்டாராம், தற்போது ரூ.30 லட்சம் மதிப்புள்ள கார் வாங்கியுள்ளார் என கூறப்படுகின்றது.

## ஐந்தாவது முறையாக திருமணம் செய்யப்போகிறேன் – அடா ஷர்மா



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வருபவர் அடா ஷர்மா. பொலிவூட்டில் பிஸியாக இருந்த இவரை இயக்குனர் பூரி ஜெகன்நாத் தான் தென்னிந்தியா பக்கம் கொண்டு வந்தார். இந்நிலையில் இவர் தன் டுவிட்டர் பக்கத்தில் 'ஐந்தாவது முறையாக திருமணம் செய்யப்போகிறேன்' என கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியில் ஆழ்ந்த ரசிகர்கள் அவர் விளக்கம் கொடுப்பதற்குள் ஏதேதோ பேச ஆரம்பித்து விட்டார்கள்.

பிறகு தான் தெரிந்தது. இவர் நடித்த படங்களில் இதுவரை 4 படங்களில் திருமணம் செய்வது போல் காட்சி இருந்ததாம், தற்போது புதிய படத்திலும் இப்படி ஒரு காட்சி வர, அதை தான் கூறினாராம். நல்ல கிளப்புறாங்கய்யா பீதிய!.

## தனுஷ் படத்திற்கு ஹொலிவூட் சண்டை இயக்குனர்



தமிழ் சினிமாவில் இருந்து பொலிவூட் சென்று வெற்றி பெற்ற ஒரு சில நடிகர்களில் தனுஷும் ஒருவர். இவர் அடுத்து பிரபு சாலமன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவிருக்கின்றார். இப்படம் மிக பிரமாண்டமாக உருவாகவுள்ளது, இதில் எக்ஸ் மேன், ஷங்கய் நூண், பேட்மேன் பிகின்ஸ் போன்ற படங்களுக்கு சண்டை அமைத்த ரோகர் யுயன் என்பவர் தான் பணியாற்றவுள்ளார்.

இவ்வளவு பெரிய சண்டை இயக்குனரை எப்படி இவர்கள் இங்கு அழைத்து வந்தார்கள் என கொலிவூட்டே ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளது.

## விவேக்கின் பாலக்காட்டு மாதவன் தயார்



நான் தான் பாலா படத்தை தொடர்ந்து விவேக் நாயகனாக நடிக்கும் படம் பாலக்காட்டு மாதவன். அறிமுக இயக்குனர் சந்திரமோகன் இயக்கியுள்ள இப்படத்தில் விவேக்குக்கு ஜோடியாக சோனியா அகர்வால் நடித்திருக்க, 'லொள்ளு சபா' சுவாமிநாதன், 'நான் கடவுள்' ராஜேந்திரன், மனோபாலா, ஆர்த்தி மற்றும் பலர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.

காமெடி படம் என்றாலும் இப்படத்தில் ஒரு நல்ல கருத்தை சொல்லியிருக்கிறாராம் சந்திரமோகன். தற்போது பாலக்காட்டு மாதவன் படம் வருகிற 26ம் திகதி வெளியாக இருப்பதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.



# கவிதைப் பூங்கா



### வித்தியா

தங்கையே வித்தியா
உனக்கு நேர்ந்த கதியென்ன!
இணையத்தளம் பார்த்ததுமே நாம்
இடிகலங்கிப் போய்விட்டோம்!
யாருக்குத் தெரியுமம்மா உனக்கு
இந்நிலை வருமென்று!
வித்தியா என்ற வீதியோலம்
உனக்குக் கேட்கிறதா?
நீ ஒரு வித்தியா தான் ஆனால் உன்
பல்லாயிரம் தோழிகளை
விழிப்படையச் செய்துவிட்டாய்!
எம் சந்ததி அழியும்வரை
உன் பெயர் அழியாதம்மா!

சு.தேவா
செட்டிகுளம்

### முள்ளிவாய்க்கால்

முள்ளிவாய்க்கால்
முட்களின் வாய்க்கால்
சொற்களுள் அடங்கா
சொல்லொண துயரங்கள்
சொந்தங்களின் கனவுகள்
சோகத்தோடு கரைந்த
இரத்த வாய்க்கால்
மறத்தமிழனின் நீண்ட வரலாற்றில்
இருண்ட கரும்புள்ளி
அதுவே தமிழ் இனத்தின்
இறுதியானதாக இருக்கட்டும்



கல்லூரி வாசலிலே
உள்ளூற ஆவலுடன்
கன்னியின் வரவுக்காய்க்
கால்கடுக்க நின்றிருந்தேன்

கலைந்தும் கலையாத
கார்மேகக் கூந்தலது
அலையலையாய் அசைந்தாட
அற்புத அழகுடனே

எழில் நீயும்
எதிரில் வந்தாய்
இதழோரம் குறுநகையை
இன்முகத்தில் ஏந்திவந்தாய்

உன்னழகை ரசிக்குமுன்னே
மின்னலொன்றைப் பாய்ச்சிவிட்டு
கணப்பொழுதில் கடந்துசென்றாய்
காதலுக்காய்க் காத்திருந்த

இளையவன் என்மனதுக்குள்
இனிமைதனை சிந்திச்சென்றாய்
நாளையும் மறுநாளும்
விடுமுறை அளித்தவரை

நிந்தித்தே நடக்கின்றேன்...!

### நகப்பூச்சு

நிலைக் கண்ணாடி முழுவதும்
நிரம்பி வழிகிறது உன் பிம்பம்...
கதிரவன் கண் அயரும் வேளை
நம் காதலை தூவி மறைகிறான்...

நெருக்கமான உணர்வு நேசத்தின்
பிடரியில் மறைத்து வைக்கப்பட்டு,,
நெஞ்சின் ஆழத்தில் விதையாகி
நெடும் மரமாகி பூத்து குலுங்கும்
இக்காதல் வெட்ட கோடாரி எதற்கு?

கொல்லும் விசமாய் வேரினில்
வெந்நீர் பாய்ச்சி விடு
வெந்து மடியட்டும் உன்
வெப்ப காட்டில் உன் நேசமும்
என் சுவாசமும்...!

நெருக்கம் கண்டு
நான் தவித்தேன்
உன்னை நெருங்கும்
எதையும் வெறுத்தேன்....


இறுக்கம் கொண்ட
இதயம் அதில்
இன்னும் கொஞ்சம்
இயல்பாய் வருத்தம்....

முதலாய் இது முடிவாய்
மனதை அது உருத்தும்
தடையே வேண்டாம்
தனியே தனியே தவிப்போமா?

ஊஞ்சல் ஆடும்
கிளியின் எண்ணம்
உன் நெஞ்சில் தூங்க
மனமும் கெஞ்சும்....

இரு கை இணைந்து
எல்லாம் மறந்து
இன்பக் கடலில்
நீந்திட வா வா

சிறகுகள் வேண்டாம்
பறந்திட வானில்
கனவுகள் போதும்
கண்ணா நீ வா .....





### அன்பு

யாரென்று பார்க்காது
கூலியும் கேற்காது
சுயம் தனை நினைக்காது
எதிர்பார்ப்பும் இருக்காது...

உணர்வுக்குள் உருவாகி
உயிரில் கருவாகும்
உதட்டினை மூடியும்
விழிகளில் பெருக்கெடுக்கும்...

மெழுகாய் உருகி
ஒளியை கொடுக்கும்
வலி கண்டும்
வாரியே அணைக்கும்...

தேசம் கிடையாது
மொழி தடுக்காது
மதமும் பிடிக்காது
தோல்வியும் இருக்காது...

அன்பு நிலைத்திருக்கும்
அனைத்தையும் சகித்திருக்கும்
அத்தனை ஜீவனுக்கும்
ஆண்டவன் அருளிய கொடை

அன்பு மட்டுமே... !!!

ஊரென்ன பேரென்ன
அது தேவையில்லை
நீ யாரென்ற கேள்விக்கு
இங்கு வேளையில்லை...

நட்பென்னும் சொல் போதும்
அதில் நாணம் இல்லை
தப்பென்ன சரியென்ன
அது பார்ப்பதில்லை...

கண்கள் கலங்கி நின்றால்
போதும் கைகள் ஓடிவரும்
கால் தடுக்கி விழுந்தால் கூட
தோள் சுமக்க தேடிவரும்...

நட்சத்திர விடுதியில் உணவு
நட்பு கேட்பதில்லை
மரத்தடியில் தேநீர் பங்குத்
தந்தால் கூட அது
தோற்பதில்லை...

காயம் கண்டால் காதல் கூட
கழட்டி விட்டே ஓடிவிடும்
கஷ்டம் தந்தாலும் நட்பு மட்டும்
காலம் முழுக்க கூட வரும்...

நட்பு இன்றி நம்பிக்கை கூட
நம்முடன் தங்கிட யோசிக்கும்
நட்பு மட்டும் போதும் போதும்
அது அன்பைத்தானே
யாசிக்கும்...



நீ வாழ்கின்ற
வாழ்க்கையில்
அதிகம் வெற்றி இல்லை
தோல்விகள்தான்
நிறைந்துள்ளது என எண்ணாதே...


செடியில்
இலைகள் அதிகம்தான்
பூக்கள் குறைவுதான்
ஆனால்
பூக்களுக்குத்தான்
மதிப்பு அதிகம் தோழா...!

### விண்ணைத் தொடலாம்

மண்ணில் விதையாய் விழுந்தேன்!
விண்ணைத் தொடும் விருட்சமாய்
உயர்ந்தேன்!
இடையில் பட்ட இடரெல்லாம்
வேர்கள் தாங்கிய வரங்கள்!
புயலும்,வெயிலும்,பூகம்பமும்
தாண்டி நிலைக்க
உறுதியே உரமாகும்!
நீங்களும் உள்ளத்தில்
மன உறுதியும்,நம்பிக்கையும் வளர்த்திட்டால்
விண்ணைத் தொடலாம்!



# புனைகதைப் புயல்



## முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

தொடர் -93

அதிகாலை மூன்று மணிக்கே வீடு களைகட்டியது. அயலவர்கள் சிலரும் வந்திருந்தனர். கணபதிப்பிள்ளையார் ஐயர் கூறியபடி பொருட்களை சரிபார்த்து எடுத்துவைத்தார். நான்கு மணிக்கு போவதற்கான வாகனம் வந்தது. வதனாவின் தாய், தந்தை உட்பட அயலவர்கள் சிலரும்வாகனத் திலேறிக்கொண்டனர். அரை மணி நேரப்பயணத்தில் வாகனம் உரிய இடத்திற்கு வந்து சேர்ந்தது. ஏற்கனவே ராம்குமாரும், சுதனும் மோட்டார்சைக்கிலில்வந்திருந்தனர். அங்கு ஐயர் கும்பங்களை அடுக்கி அலங்காரமாக மலர்களை சூட்டி தானும் மாலை அணிந்து டாம்பீகமாக அமர்ந்திருந்தார். அவர்களைக்கண்டதும் வாங்கோ

“கடமை செய்யிறாக்கள் இப்பிடி வாங்கோ....”

என அழைத்தார். அப்போது பிரச்சினை ஆரம்பமானது. ‘யார் கடமைசெய்வது’ என எல்லோரும் ஆளையாள் பார்த்துக்கொண்டனர். சிலர் வதனாவை போகும் படி கூறினர்.

“ஏன் அவள் நீங்க போங்கோ...”

கணபதிப்பிள்ளையாரை போகும் படி கூறினாள் செல்லம்மா. அதற்கிடையில் நின்ற நான்கைந்து பேருக்குள்ளும் கருத்துக்கள் பல வேறுபட்ட விதத்தில் உருவாகின.

“சின்னப்பிள்ளை ஏன்... வாழவேண்டிய பிள்ளை தகப்பன் செய்யலாம்தானே.”

“அவன் என்ன கனகாலம் வாழ்ந்தவனே.... இல்லைத்தானே தகப்பனே செய்யலாம்.”

“மனுசி செய்தாத்தானே நல்லது....”

“பிள்ளை தானே கொள்ளி. பிள்ளையை கொண்டும் செய்யலாம்தானே.”

“அவன் சாகயுக்கை பிறக்காத கரு என்னண்டு கடமைசெய்யிறது...”

முடிவின்றி மாறிமாறி கதைத்துக் கொண்டிருந்தனர். முடிவை ஐயரே கூறினார்.

“இந்த கடமைசெய்ய வேண்டிய காலத்தில மனைவி கர்ப்பவதியாக இருந்திருக்கிறா. அதால அவ கடமை செய்யிறது நல்லாயில்லை. பிறக்காத பிள்ளையின்ரை கையாலையும் செய்வீக்க ஏலாது. தந்தையார் மகனின்ர கடமையைய செய்யலாம். இல்லையண்டால் சகோதரங்களும் செய்யலாம்.”

பொருத்தமான முறையில் அவர் விளக்கமாககூறினார்.பலகிரியைகளை செய்வித்து ஆத்மா சாந்தியடையும் வண்ணமும், பெற்றோர்கள் மனம்திருப்தி அடையும் படியும் செய்த அவரின் ஆளுமை அவரது வார்த்தைகளில் வெளிவந்தது.

“ஐயா சொன்னது சரிதான். கணபதி... „போப்பா ஏன்மினக்கிடுவான்.”

“நான் சொன்னனான் தானே நீங்க போங்கோப்பா.”

காலை நேரக்குளிருக்கு அணிந்திருந்த சேட்டைக்கழற்றி வைத்துவிட்டு வந்தார்.

“இப்பிடி வாங்கோ.. இதில இருங்கோ...”

என்று தனக்கு பக்கத்திலிருத்திவிட்டு குட்டிக்கும்பிட்டு விநாயகரை வணங்கி சத்தமாக மந்திரங்களை உச்சரித்து கிரியைக ளில் ஈடுபடத்தொடங்கினார்.

“இறந்தவருடையை பெயர்... சொல்லுங்கோ...”

“ரவிக்குமார்...”

“திதி என்ன”

“அபரபக்க சப்தமி....”

விபரங்களை கேட்டு மந்திரத்துடன் சேர்த்துக்கூறி தனது கிரியைகளை நடாத்தினார். ஒருகட்டத்தில் கணபதிப்பிள்ளையிடம் கேட்டார்...

“மனைவி தாலி போட்டிருக்கிறாவோ..”

“இல்லை ஐயா... தாலி கட்டயில்லை.. வன்னீல கடைசியாய் தான் கட்டி வைச்சனாங்கள். படத்துக்கு முன்னுக்கு குங்குமம் வைச்சிட்டு சோறு குடுத்தனாங்கள்.”

என்றார். புதியதான ஒரு திருமண முறை அந்தக்காலத்தில் நிலவி யது. அதாவது ‘சோறு கொடுத்தல்’ இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பையும் தாண்டியபிறகு இந்தமுறைதான் பின்பற்றவேண்டியிருந்தது. பொன் னுருக்கவோ. தாலி செய்யவோ சந்தர்ப்பமிருக்கவில்லை. ஏன் ஒரு பூமாலைகட்டி மாற்றிக்கொள்ளக்கூட பூக்கள் கிடைக்காதவேளை. அதே நேரம் திருமணம் செய்து வைப்பதன் மூலம் தமது பிள்ளையை போரில் இணைத்துக்கொள்ளப்படுவதிலிருந்து காப்பாற்றமுடியும் என்ற நிலையில் முறைப்படிசெய்ய பின்பற்றிய முறை தான் இந்த ‘சோறு கொடுத்தல்.’ பின்பற்றப்பட்டது. இம்முறையில் பெண்ணினதும் ஆணினதும் தாய் தந்தையர்கள் கூடி நிச்சயித்து, பொதுவாக நாள் கூடப்பார்க்க சந்தர்ப்பமிருக்கவில்லை. ஐயர்மார் தமது பஞ்சாங்கத்தையெல்லாம் விட்டுவிட்டு ஓடி வந்து ரெண்ட்டுக்குள் முடங்கிக்கிடந்தனர். அவர்களிடம் கேட்டால் ,

“யாரட்டை பஞ்சாங்கம் இருக்குமெண்டு தெரியேல்லை... நீங்க மதியம் பன்ரண்டுமணிக்கு பிள்ளையளுக்கு சோத்தைக் குடுக்கலாம்”

என்று கூறிவிடுவார்கள். அதாவது முறையான திருமணத்தின் போது இறுதியாக மணமக்களுக்கு வழங்கப்படும் ‘பூதாங்கலச்சோறு’ என்ற சடங்கைமட்டும் செய்யும்படி கூறுவார்கள். அதற்குக்கூட நிறை வான சந்தர்ப்பமிருக்கவில்லை. ஏதோ கஸ்ரப்பட்டு வரிசையில் நின்று வாங்கிய நிவாரண அரிசி யில் சோறும் அதே நிவாரணத்தில்



கிடைத்த கடலைப்பருப்பில் ஒரு அவியலும்தான் பூதாங்கலச் சோற்றில் இருந்தது. கறிக்கு போட தேங்காய் கூட இருக்கவில்லை. எல்லாவற்றையும் இழந்த நிலை யிலும் சம்பிரதாயங்களையும், கலாச்சாரத்தையும் இழக்கக்கூடாது என்று இருந்த குடும்பங்கள் மணமக்களுக்கு புதியதான முறை யையே பின்பற்றி திருமணத்தை நடத்தி வைத்தனர். அந்த முறைக்கு இட்ட பெயர் தான் ‘சோறு கொடுத்தல்.’

வீட்டில் பந்தல் போட்டு முறைப்படி ஓமம் வளர்த்து தாலிகட்டுதல், தாலியை கோயிலில் பூசையில் வைத்து ஐயரின் கையால் வாங்கி கட்டுதல், பதிவுத்திருமணம், இம்முறைகள் நாள்நட்சத்திரம் பார்த்து ஊர் உறவுகளுக்கு சொல்லி பந்தி வைத்து படமெடுத்து என முறை கள் இருந்தன. இம்முறைகளில் எவையும் செய்ய முடியாத சூழலில் தான் ‘சோறு கொடுத்தல்.’ முறை பின்பற்றப்பட்டது. முறைப்படி அமைந்த திருமணத்தில் எல்லாச் சடங்குகளையும் கைவிட்டு இறுதியாக இருக்கும் பூதாங்கலச்சோறு கொடுத்தலைமட்டுமாவது செய்து திருமணத்தை முடித்து வைத்தனர். அதில் சில விழுமியங்களை கடைப்பிடித்தனர்.

முதலில் மாப்பிள்ளை தன் தாய் தந்தையரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவார். அதேபோல் பெண்ணும் பெற்றுக்கொள்வாள். பின்னர் இருவரும் சுவாமி படத்திற்கு முன்னால், அது கூட வாழ்த்து அட்டையில் இருக்கும் சுவாமி படமாக இருக்கும். மணமகன் மணமகளுக்கு குங்குமம் சூட்டி விடுவார். பின்னர் இருவரும் இருவரு டைய தாய் தந்தையர்களின் காலில் விழுந்து ஆசிபெற்றுக்கொள்வர். அதன்பிறகு இருவருக்கும் சோறு கொடுத்தல் இடம்பெறும். அதுவும் பத்துக்கறியோடு அல்ல அவியல் பருப்பும் சோறும். பின்னர் இரவு மணமக்களை ரெண்டினுள் தனியாக இருக்கவிடுவார்கள். வழமையாக உள்ளேபடுப்பவர்கள் வெளியே மணலில் படுத்துக்கொள்வார்கள்.

இந்த முறையில் தான் ரவிக்குமார் வதனா திருமணமும் இடம்பெற்றது. ஐயர் ஏற்கனவே இம்முறைபற்றி கேள்விப்பட்டிருந்ததால்,

“அப்ப இப்ப குங்குமம் வைச்சு..... மாலை இருக்கா? அ...அதை போட்டுக்கொண்டு வரச்சொல்லுங்கோ....”

அவர் கூறிய படி வருவதற்கு அவளைத்தயார் செய்ய தாயும், மாமி யாரும் எழுந்தனர். வதனாவும் எழுந்தாள்.

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## தர்ப்பைப் புல்லின் மகிமை

தர்ப்பை புல்லுக்கு இன்னொரு பெயர் 'குசா' என்பதாகும். இராமபிரானின் இரண்டாவது மகனின் பெயர் குசா. அவருடைய பெயரைக் குறிக்கும் அளவில் இந்தப் புல்லின் பெயரை வைத்துள்ளார்கள். தர்ப்பைப்புல் உஷ்ணத்தை அகற்றி உடலைக் குளுமை செய்கிறது. பாலும், சிறுநீரும் அதிகளவில் சுரக்கச் செய்கிறது. சிறுநீரக வலிக்குக் குணமளிக்கிறது. பாம்புக் கடி விஷத்தை அகற்றுகிறது. தர்ப்பை புல் பித்தம், வாதம், கபம் ஆகிய மூன்று தோஷங்களை சுத்தம் செய்கிறது. சிறுநீரக கற்களைக் கரைக்கிறது. இரத்தத்தில் தேங்கும் யூரியா, கிரியாட்டினின் கழிவுப் பொருட்களை அகற்றுகிறது. உடல் எடையைக் குறைக்கவும் பயன்படுகிறது. மொத்தத்தில் இது சிறுநீரக நோய் நிவாரணி என்று வேதங்கள் கூறுகின்றன.

உயிரைக் குடிக்கும் நோய்களில் கிட்னி பெயிலியர்தான் மோசமானது. ஆயுர்வேத, யுனானி மருத்துவர்கள் தர்ப்பை புல்லை பதப்படுத்தி மருந்தாகத் தருகின்றனர். அதனால் டயாலிஸிஸ் செய்யத் தேவையில்லை. சிறுநீரகமாற்று அறுவை சிகிச்சையும் தேவைப்படுவதில்லை. 50 வருடங்களுக்கு முன்பு அறுவை சிகிச்சை இல்லாத காலக்கட்டத்தில் மக்கள் இறைவனை வணங்கிவிட்டு வைத்தியர் தரும் தர்ப்பைப்புல் மருந்தைத்தான் பயன்படுத்தியதாக வேதங்கள் கூறுகின்றன.

இந்து சமுதாயத்தில் நன்றியைச் செலுத்தும் பழக்கம் அதிகளவில் இருப்பதால் தனக்கு வாழ்வளித்த தர்ப்பைப்புல்லை வணங்கும் பழக்கம் உள்ளது. யுனானி மருத்துவத்தில் தர்ப்பைப்புல் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. இதைமுறையாகப் பதப்படுத்தி கிட்னி பெயிலியர், ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு மருந்தாகத் தரப்படுகிறது. தர்ப்பையின் மகிமை, இந்துக்களின் நம்பிக்கை: தர்ப்பையை தேவ காரியங்களுக்கு கிழக்கு நுனியாகவும், பித்ரு காரியங்களுக்கு தெற்கு நுனியாகவும் பயன்படுத்துவார்கள். தர்ப்பை உஷ்ண வீரியமும், அதிவேகமும் கொண்டது. மேலும் பஞ்ச லோகங்களில் தாமிரத்தில் உள்ள மின்சார சக்தி தர்ப்பையிலும் உண்டு. எனவேதான் கோவில் கும்பாபிஷேகங்களில் தங்க, வெள்ளி கம்பிகளின் இடத்தில் அருளைக் கடத்த தர்ப்பையைப் பயன்படுத்துவார்கள்.

தர்ப்பையின் சாம்பலால்தான் கோவிலில் உள்ள விக்கிரகங்களையும், பாத்திரங்களையும் துலக்குவார்கள். எல்லாவிதமான ஆசனங்களையும்விட தர்ப்பாசனம் சிறந்தது என்பார்கள். பிரேத காரியங்களில் ஒரு தர்ப்பையாலும், சுப காரியங்களில் இரண்டு தர்ப்பைகளாலும், பித்ரு காரியங்களில் மூன்று தர்ப்பைகளாலும் தேவகாரியங்களில் ஐந்து தர்ப்பைகளாலும் சாந்தி, கர்மா போன்றவற்றில் ஆறு தர்ப்பைகளாலும் மோதிரம் போல் முடிய வேண்டும். இறைவழிபாடு, ஜபம், ஹோமம், தானம், பித்ரு தர்ப்பணம் முதலியவற்றில் கையில் தர்ப்பை மோதிரம் போட்டுக் கொள்ளாமல் செய்வது உரிய பலனைத் தராது என்பர்கள்.

கிரகண காலங்களிலும், அமாவாசையிலும் தர்ப்பைக்கு வீரியம் அதிகம். எனவேதான் கிரகண காலங்களில் உணவுப் பண்டங்களில் நுண்ணிய கிருமிகளால் கெடாமலிருக்க தூய்மையான தர்ப்பையைப் பரப்புகிறார்கள். தர்ப்பை மோதிரத்தை அணிந்துதான் பிராணாயாமம் செய்யவேண்டும் என்பதும் வழக்கமாக உள்ளது. திருநள்ளாறு கோயிலில் தர்ப்பைப்புல் தலவிருட்சமாக வணங்கப்படுகிறது. 'தருப்பை' என்பது ஒருவகையான நீளமான புல் ஆகும். இதனைக்கொண்டு கூரைவேயப்படும் என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பெரும் பாணாற்றுப்படை என்னும் நூலில் சங்க இலக்கியப்பெயராக தருப்பை எனவும், உலக வழக்குப் பெயராக தர்ப்பை, குசப்புல், தருப்பை, நாணல் எனவும் வழங்கப்படுகிறது. இது புதர்ச் செடியாகத் தரையடி மட்டத் தண்டிலிருந்து செழித்து வளரும்.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமுதாயத்தாரில் (பாவம் செய்த) அனைவரும் (இறைவனால்) மன்னிக்கப்படுவர் (தம் பாவங்களைத்) தாமே பகிரங்கப்படுத்துகின்றவர்களைத் தவிர. ஒரு மனிதன் இரவில் ஒரு (பாவச்) செயல் புரிந்து விட்டுப் பிறகு காலையானதும் அல்லாஹ் அவனது பாவத்தை (பிறருக்குத் தெரியாமல்) மறைத்துவிட்டிருக்க, இன்னாரே! நேற்றிரவு நான் (பாவங்களில்) இன்னின்னதைச் செய்தேன் என்று அவனே கூறுவது பகிரங்கப்படுத்துவதில் அடங்கும். (அவன் செய்த பாவத்தை) இரவில் (பிறருக்குத் தெரியாமல்) இறைவன் மறைத்துவிட்டான். (ஆனால் ,) இறைவன் மறைத்ததைக் காலையில் அந்த மனிதன் தானே வெளிச்சமாக்கி விடுகிறான். அறிவிப்பவர். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நூல்: புகாரி 6069

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: " மலையின் மீதிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொள்கிறவர் நரக நெருப்பில் (தள்ளப்பட்டு மேலிருந்து கீழே) என்றைக்கும் நிரந்தரமாக குதித்துக் கொண்டேயிருப்பர். விஷம் குடித்து தற்கொலை செய்துகொள்கிறவர் தம் விஷத்தைக் கையில் வைத்திருந்தபடி நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக் கொண்டேயிருப்பார். ஒரு கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறவரின் கூர்ாயுதத்தை அவர் தம் கையில் வைத்துக்கொண்டு நரக நெருப்பில் தம் வயிற்றில் தாமே என்றென்றும் நிரந்தரமாக அதனால் குத்திக் கொண்டேயிருப்பார்" என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) நூல்: புகாரி 5778

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாகவும், முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறைத் தூதராகவும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன் என்று கூறுபவருக்கு சொர்க்கம் கடமையாகிவிட்டது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூஸயீத் அல்குத்ரீ -ரலி, நூல் : அபூதாவூத் 1306)

## உன்னதப்பாட்டு

நான் உம்மைக் கூட்டிக்கொண்டு என் தாயின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவோவேன். நீர் என்னைப் போதிப்பீர். கந்தவர்க்கமிட்ட திராட்சரசத்தையும் என் மாதளம்பழரசத்தையும் உமக்குக் குடிக்கக்கொடுப்பேன்.

அவர் இடதுகை என் தலையின் கீழிருக்கும். அவர் வலதுகை என்னை அணைக்கும்.

எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகு மட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்க உங்களை ஆணையிடுகிறேன்.

தன் நேசர்மேல் சார்ந்துகொண்டு வனாந்திரத்திலிருந்து வருகிற இவன் யார்? கிச்சிலிமரத்தின்கீழ் உம்மை எழுப்பினேன். அங்கே உமது தாய் உம்மைப் பெற்றாள். அங்கே உம்மைப் பெற்றவள் வேதனைப்பட்டு உம்மைப் பெற்றாள்.

நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரையைப்போலவும் உமது புயத்தின்மேல் முத்திரையைப்போலவும் வைத்துக்கொள்ளும். நேசம் மாணத்தைப்போல கொடியதாயிருக்கிறது. அதின் தழல் அக்கினித் தழலும் அதின் ஜூவாலை கடும் ஜூவாலையுமாயிருக்கிறது.

திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது. வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது. ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும் அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும். நமக்கு ஒரு சிறிய சகோதரியுண்டு. அவளுக்கு ஸ்தனங்களில் நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்.

அவள் ஒரு மதிலானால் அதின் மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டுவோம். அவள் கதவானால் கேதுருப் பலகைகளை அதற்கு இணைப்போம்.

நான் மதில்தான். என் ஸ்தனங்கள் கோபுரங்கள். அவருடைய கண்களில் கடாட்சம்பெறலானேன்.

பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத் தோட்டம் உண்டாயிருந்தது. அந்தத் தோட்டத்தைக் காவலாளிகள் வசத்திலே அதின் பலனுக்காக ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காக கொண்டுவரும்படி விட்டார்.

என் திராட்சத்தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது. சாலொமோனே உமக்கு அந்த ஆயிரமும் அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும்.


தோட்டங்களில் வாசம் பண்ணுகிறவனே!. தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள். நானும் அதைக் கேட்கட்டும்.

என் நேசரே! தீவிரியும் கந்தவர்க்கங்களின் மலைகள் மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்.


## வித்தியாவின் சாவில் ஆசனமிட்டு அமர ஆசைப்படும் அரசியல்வாதிகள்

கடந்தவாரத்தொடர்ச்சி...

பின்னைய நாள்களில் இந்தச் செய்திகளின் சூடு எப்படியோ குறைந்தது. விசாரணைக்குழுக்கள் அடிக்கடி வருவதாகவும், செப்டெம்பர் 6 ஆம் திகதி மறுபடியும் தோண்டப்படும் என்வும் ஓர் அறிக்கை அரச தரப்பிலிருந்து விடப்பட்டது. அதன்படி குறித்த திகதியில் மீண்டும் தோண்டும் பணிகள் ஆரம்பமாகின. அமெரிக்க பிரதிநிதிகள் எலும்பு மீட்புப் பணிகளைக் கண்காணிக்க வந்திருந்தனர். இறுதியில் முடிவுகள் எதுவும் காட்டாமலேயே இந்த விவகாரம் மந்தமாகியது. பின்னர் எதிராளிகளின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை அனுராதபுரம் நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் நடந்த புதைகுழி தோண்டலில் அதிகளவில் சேதமடைந்திராத எலும்புக்கூடுகள் இரண்டை மறுபடியும் நிபுணர்கள் கண்டுபிடித்தனர். சாட்சியாளர்கள் காட்டிய சில இடங்களில் எலும்புக்கூட்டுத் தடயங்கள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் அவை யாருடையவை என்பதை அடையாளம் காணமுடியவில்லை. மூன்றாம் நாள் கண்டி வீதி - நல்லூர் நாயன்மார்கட்டு சந்திவீதி மூலையில் இருந்த இராணுவக் காவலரணின் பின்புறத்தில் மூன்று எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அருகருகே புதைக்கப்பட்ட நிலையில் ஆடைகள் ஏதுமற்ற நிலையில் ஓர் இளம் பெண் மற்றும் ஆண் ஆகியோரின் எலும்புக்கூடுகளாக அவை இருந்தன. கொழும்புத் துறை பகுதியில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட தம்பதியினரின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம், அவற்றின் மண்டையோடுகள் பிளந்து காணப்பட்டன. தலையில் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட வெடிப்பாக அவையிருக்கலாம் என சட்ட மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் நெரியெல்ல குறிப்பிட்டிருந்தார். தொடர்ந்து புதைகுழி தோண்டும் பணிகள் நடந்தன. 20 பேரை புதைத்தனர் என்று சோமரத்ன ராஜபக்ச தெரிவித்திருந்த இடமும், கிணறும் தோண்டப்பட்ட போதிலும் அங்கு எலும்புக் கூடுகள் எவையும் இருக்கவில்லை. இதனால் சோமரத்ன மறுபடியும் செம்மணிக்கு அழைத்துவரப்பட்டார். அப்போது அவர் சொன்ன பதிலோடு, தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன. "செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் உள்ள சரியான இடங்களையே நான் அடையாளம் காட்டினேன். அந்தப் புதைகுழிகளை தோண்டியபோது அங்கு சடலங்கள் காணப்படாததையிட்டு நான் அதிர்ச்சியடைகிறேன்" அதுவரையில் செம்மணியில் இருந்து 15 வரையிலான சடலங்களின் எலும்புகள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன. அதே வருடத்தில் டிசம்பர் 6 ஆம் திகதி இதுவரையில் செம்மணியில் நடத்தப்பட்ட புதைகுழி ஆய்வு தொடர்பிலான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. காலநிலை மாறியது. களநிலை நிலவரங்கள் மாறின. அடித்த மழையிலும், வன்னியில் எழுந்த போர் அலைகளிலும் எல்லாமே மறக்கப்பட்டன. 2000 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான ஆட்சி மாற்றமும் சமாதானமும் இந்தப் பெரியளவிலான மனிதப் படுகொலையை மறக்கச்செய்தன. சோமரத்னவின் மரணதண்டனை பற்றிய செய்தியொன்று கடந்த வருடத்துக்கு முற்பகுதியில் வெளியான செய்தியொன்றில் படித்ததாக நினைவு. அவரோடு கைதானவர்கள் எங்கே? என்ன நடந்தது போன்ற கேள்விகளும், செம்மணியில் புதைக்கப்பட்டவர்களின் நினைவைப் போல மறந்தேபோயிற்று. உலகளவில் நிரூபிக்கப்பட்ட இந்தக் குற்றம் அல்லது இனமொன்றை கூட்டுப் படுகொலை செய்தமைக்கான ஆதாரம் செம்மணி புதைகுழிக்குள்ளும் வருகின்றது. இதில் ஈடுபட்டவர்கள் சர்வதேச குற்றவியல் மன்றங்களில் விசாரிக்கப்படுவதும் தண்டனைக்குள்ளாவதும் அண்மைக் காலம்வரை நடந்து கொண்டேயிருக்கின்றது. ஆனால் உலகின் கண்முன்னே, அமெரிக்காவின் கண்முன்னே சாட்சிபூர்வமாக நிரூபிக்கப்பட்ட செம்மணி மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. இது இலங்கையில் இடம்பெற்ற உள்ளக விசாரணையொன்றின் நம்பிக்கைத் தன்மையினையும், பொறுப்புக்கூறும் போக்கையும் எடுத்துக்காட்டவும் கைவசமுள்ள சிறந்த ஆதாரங்களில் ஒன்று.



# அறிவியல் உலகம்



## முள்ளந்தண்டு வலி, மன அழுத்தங்களால் மாற்றமடையும் வாழ்க்கை



உலக சனத்தொகையில் 95 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் சுகாதாரப் பிரச்சினைகளுடன் வாழ்வதாக ஆய்வறிக்கையில்கண்டறியப்பட்டுள்ளது. சனத்தொகையில் மூன்றிலொரு பங்கிற்கு மேற்பட்டவர்கள் ஐந்திற்கு மேலான நோய்களால் அவதியுறுவதாக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. இது 188 நாடுகளில் இருந்து திரட்டிய தகவல்களின் அடிப்படையில் வரையப்பட்ட அறிக்கையாகும்.

Global Burden of Disease Study என்ற பெயரில் தொகுக்கப்பட்ட அறிக்கையின் விபரங்கள் லான்செட் சஞ்சிகையில் வெளியாகியிருக்கின்றன. முள்ளந்தண்டு கீழ்ப்புற வலி, மன அழுத்தம், இரும்புச்சத்து பற்றாக்குறை, கழுத்து வலி போன்றவை மக்களின் சுகாதாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.


## உலக சமுத்திர தினத்தை முன்னிட்டு கூகுளின் அதிரடி திட்டம்



அண்மையில் உலக சமுத்திர தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிலையில் கூகுள் நிறுவனம் தனது Street View சேவை யின் ஊடாக பல்வேறு சமுத்திரங்களின் அடிப்பகுதியில் எடுக்கப்பட்ட அற்புதமான புகைப்படங்களை வெளியிட்டிருந்தது. உலகெங்கிலும் சுமார் 40 இடங்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட காட்சிகளை Street View Oceans எனும் இணைப் பக்கத்தில் பிரசுரித்திருந்தது.

இது பற்றி கூகுள் தெரிவிக்கையில் எதிர்வரும் காலங்களில் வேறு சில நிறுவனங்களுடன் இணைந்து மேலும் வினைத்திறன் வாய்ந்த கடலடி ஆய்வுளை மேற்கொள்ளும் முகமாக Street View Oceans சேவையை மெருகூட்டவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

## செவ்வாயின் குகைகளில் கண்ணாடி படிமங்கள் கண்டுபிடிப்பு



செவ்வாய் கிரகத்தில் உள்ள குகைகளில் கண்ணாடி படிமங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதன் மூலம் அங்கு பல ஆண்டுகளுக்கு முன்பு உயிர்கள் இருந்திருக்கலாம் என்பதற்கு மேலும் ஓர் ஆதாரம் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.


## காலையில் எழுந்தவுடன் ஒரு கப் தண்ணீர்



தினமும் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பது நல்லது என பலரும் கூறியது கேள்விப்பட்டிருப்போம். ஆம், தண்ணீர் குடிப்பதால் எண்ணற்ற நோய்களில் இருந்து நம்மை பாதுகாக்கலாம். தினமும் தண்ணீர் குடிப்பதால் வயிறு சுத்தமாவதுடன், உடலில் உள்ள நச்சுக்கள் சிறுநீர், மலம் மூலம் வெளியேறிவிடும். பெரும்பாலான நபர்களுக்கு உடலில் நீர்ச்சத்து குறையும்போது தான் தலைவலி ஏற்படுகிறது, அத்தகைய நபர்கள் தினமும் தண்ணீர் குடித்து வருவது நல்லது. குறிப்பாக காலையில் அவசர அவசரமாக வேலைக்கு கிளம்பும் நபர்கள், சாப்பிடாமல் செல்வது வழக்கமாகிவிட்டது. இவர்கள் தினமும் தண்ணீர் குடிக்கும் போது பசி எடுப்பதுடன் அல்சர் தொல்லையிலிருந்து தப்பிக்கலாம்.

வெதுவெதுப்பான தண்ணீரை குடித்தால் உடலின் மெட்டாபாலிசம் அதிகரிப்பதுடன், உண்ணும் உணவு விரைவில் செரிமானமாகிவிடும். மேலும் இரத்த சிவப்பணுக்களின் வளர்ச்சியானது அதிகரித்து, இரத்தமானது அதிகப்படியான ஒக்சிஜனை கொண்டிருப்பதால் உடலானது எனர்ஜியுடன் இருக்கும். எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த வரப்பிரசாதம்என்றேசொல்லலாம். முகமும் பொலிவுடன் இருப்பதுடன், பருக்கள் வருவது குறைந்துவிடும்.


## உடலுக்கு அற்புத ஆரோக்கியங்களை அள்ளித்தரும் மிளகு



அன்றாட வாழ்வில் சேர்த்துக் கொள்ளக்கூடிய மருத்துவ குணங்கள் நிறைந்த பொருள் தான் மிளகு. இதில் மாங்கனீஸ், இரும்பு, பொட்டாசியம், விட்டமின் சி, விட்டமின் கே மற்றும் நார்ச்சத்து என்பன அடங்கி உள்ளது. வலி மற்றும் காது சம்மந்தமான பிரச்சினைகள், பூச்சிக் கடி, குடல் இறக்கம், சுக்குவான் இருமல் ஆஸ்த்துமா போன்றவற்றிற்கு மிளகு இன்றி அமையாத ஒன்று.நரம்புத்தளர்ச்சி, கை கால் நடுக்கம், உதறல், ஞாபக சக்தி குறைபாடு, முதுமை யில் உண்டாகும் மாறாட்டம் இவற்றிற்கு மிளகு சிறந்த மருந்தாகும். மிளகுடன் பனை வெல்லம் கலந்து காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால் தலைப்பாரம், தலைவலி போன்றவை குணமாகும். மிளகை சுட்டு அந்தப் புகையை நுகர்ந்தால் தலைவலி குணமாகும். அது மட்டும் இன்றி மிளகை இடித்து தலையில் பற்றுப் போட்டாலும் தலைவலி விரைவில் குணமாகும்.

தொண்டை வலி இருந்தால் கொஞ்சம் மிளகு, ஓமம், உப்பு ஆகிய மூன்றையும் சேர்த்து வாயில் போட்டு மென்றால் தொண்டை வலி படிப்படியாக குணமாகும். மிளகைப் ஒரு ஸ்பூன் எடுத்து அதை பொடி செய்து, சிறிதளவு உப்பு சேர்த்து சூடாக்கி சிறிதளவு நெய் சேர்த்து சாப்பிட்டால் வயிற்று உப்புசம், பசியின்மை போன்றவை உடனே குணமாகும். சளி, ஜலதோஷம் அதிகமாக இருந்தால், மிளகு ஒரு ஸ்பூன் எடுத்து நெய்யில் வறுத்து பொடி செய்து வைத்துக்கொண்டு தினமும் மூன்று வேளை அரை ஸ்பூன் பொடியைச் சாப்பிடுவது நல்லது. இரண்டு நாள்களிலேயே நல்ல மாற்றத்தை காணலாம்.

## செயற்கை தோலாக மாறும் வெங்காயம்




வெங்காயம் மூலம் செயற்கை தோலை உருவாக்கி புதிய சாதனை படைத்துள்ளனர் தைவான் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள். பொதுவாக வெங்காயத்தை சமையலுக்கு தான் பயன்படுத்துவர். ஆனால் அந்த பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் வெங்காயத்தோலை கோல்ட் பிளேட்டிங் முறைப்படி உண்மையான தோலாக மாற்ற முடியும் என்பதை கண்டுபிடித்துள்ளனர்.

மேலும், இந்த செயற்கை தோலை ரோபோட்டிக்ஸ் (Robotics) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.


## செல்பி எடுப்பதற்காக புதிய அப்ளிகேஷன்



மக்கள் மத்தியில் பிரபல்யமாக இருந்து செல்பி எடுப்பதற்கு புது அப்ளிகேஷன் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மக்களிடையே இருக்கின்ற இந்த மோகத்தை வைத்து பல செல்போன் நிறுவனங்கள் செல்பிக்காகவே பிரத்யேகமான செல்போன்களை தயாரிக்கின்றனர். மேலும் செல்பிக்காகவே பல அப்ளிகேஷன் உருவாக்கி வருகின்ற நிலையில் தற்போது எளிதாக செல்பி எடுக்க ஒரு புதிய அப்ளிகேஷன் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

'ட்ரிகர்டிராப் செல்பி' (Triggertrap) என்ற புதிய அப்ளிகேஷண், ஒலி மூலமாக செல்போன் கெமராவை இயக்குகிறது. இதனை தற்போது ஐஓஎஸ் ஸ்டோரில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## உலகின் வலிமை வாய்ந்த ரோபோ உருவாக்கம்



ரோபோ வடிவமைப்பில் கைதேர்ந்த ஜப்பான் நிறுவனமான FANUC உலகின் வலிமை வாய்ந்த முதலாவது ரோபோவை உருவாக்கியுள்ளது. முன்னைய ரோபோக்களை விடவும் கூடிய பாரத்தினை தூக்கவல்ல இந்த ரோபோ ஒரே நேரத்தில் சுமார் 1.7 தொன் எடைகொண்ட இரு சிறிய கார்கள் அல்லது 24 மனிதர்களை தூக்கவல்லது.

இலகுவானது மற்றும் கடுமையான வேலைகளை செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோ பொருட்களை 4.7 மீற்றர் உயரத்திற்கு நகர்த்தவல்லது. மேலும் M-2000 iA/1700L எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த ரோபோவானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இத்தாலியின் மிலன் நகரில் இடம்பெறவுள்ள கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## Kaspersky Lab நிறுவனத்திற்கும் சோதனை

கணனிகளை நேரடி வைரஸ்கள் மற்றும் இணைய வைரஸ்களிலிருந்து பாதுகாப்பை தரும் சிறந்த மென்பொருட்களின் ஒன்றான Kaspersky Anti Virus வடிவமைப்பு நிறுவனமான Kasperskyயிலுள்ள தரவுகள் ஹேக்கர்களால் திருடப்பட்டுள்ளது. ரஷ்யாவை தளமாகக் கொண்டு இயங்கும் நிறுவனத்திலேயே ஹேக்கர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இந் நிறுவனமானது வைரஸ் தாக்கங்கள் தவிர ஹேக்கர்களிடமிருந்து தனி நபர்களின் சொப்பிங் கார்ட் மற்றும் கிரடிட் கார்ட்களை. பாதுகாக்கும் சேவையையும் வழங்கி வந்த நிலையில் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த நிறுவனத்தின மீதான மக்களின் நம்பிக்கை எதிர்காலத்தில் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இது பற்றி கருத்து தெரிவித்த Kaspersky நிறுவனத்தின தலைமை அதிகாரி Eugene Kaspersky மூன்று வகையான புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஹேக்ஹிங் செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும், சைபர் பாதுகாப்புக்களை வழங்கும் நிறுவனங்களின் மீதான உளவுத் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ரகசியத் தகவல்களை களவாடும் போலிக் கைப்பேசிகள்




போலியாக தயாரிக்கப்படும் கைப்பேசிகள் அதன் பயனர்களால் மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புக்கள் உட்பட ஏனைய தரவுகளையும் களவாடுவதாக அதிர்ச்சி தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இவ்வாறு திருடப்படும் அழைப்புக்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் என்பன Stingrays எனும் தொழில்நுட்பம் மூலம் தொலை பேசி கோபுரங்களினூடாக பரிமாற்றப்படும் சமிக்ஞைகளை பயன்படுத்தி அவதானிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையினை லண்டன் பொலிசார் முதன் முறையாக வெளியிட்டுள்ளனர். எனினும் IMSI எனப்படும் (International Mobile Subscriber Odentity) மூலம் இவ்வாறான கைப்பேசிகளை இனங்கண்டு கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு உலகம்

## சாதனைகளை குவிக்கும் செரீனா வில்லியம்ஸ்



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் செக் குடியரசின் லூசி சபரோவாவை எதிர்கொண்ட செரீனா, 6-3, 6-7, 6-2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றார். இதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 20வது முறையாக சாம்பியன் பட்டத்தை அவர் வென்றுள்ளார். உலக சாதனையை சமன் செய்ய செரீனாவுக்கு இன்னும் 2 பட்டங்களே தேவை. தற்போது உலக அளவில் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனையாளராக ஸ்டெபி கிராப் இருக்கிறார். கடந்த 17 வருடமாக அசத்தலாக ஆடி வரும் செரீனா வில்லியம்ஸ் செய்யாத சாதனையே இல்லை. 33 வயதிலும் தன்னை எதிர்த்து மோதுவது யார் என்று அச்சப்படுவதே இல்லை செரீனா. கடந்த 2012ம் ஆண்டுக்குப் பிறகுதான் 7 பட்டங்களை வென்றுள்ளார் செரீனா.

இதற்கு காரணம் அவருக்குக் கிடைத்துள்ள காதலரும், பிரான்ஸைச் சேர்ந்த டென்னிஸ் பயிற்சியாளருமான பாட்ரிக் மொரட்டோக்ளோ தான். பாட்ரிக் வருவதற்கு முன்பு வரை அவ்வப்போது காயமடைந்து, உத்வேகமும் இல்லாதவராக இருந்தார். ஆனால் பாட்ரிக் வந்து எல்லாவற்றையும் மாற்றிப் போட்டு விட்டார். அடுத்து வரவுள்ள விம்பிள்டன், அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகளிலும் செரீனா ஆதிக்கம் செலுத்துவார் என பாட்ரிக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## புதிய மைல்கல்லை எட்டிய டில்ஷான்



இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் டில்ஷான், டி20 போட்டிகளில் 4000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார். இங்கிலாந்தில் நோட்வெஸ்ட் டி20 தொடரில் நடந்த ஆட்டத்தில் டெர்பைஷயர்-துர்ஹாம் அணிகள் மோதின. முதலில் விளையாடிய துர்ஹாம் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 147 ஓட்டங்களை எடுத்தது. மஸ்டார்ட் (20), ஸ்டோன்மென் (28), கோலிங்வுட் (41) சிறப்பாக விளையாடி அணியின் ஓட்டங்களை உயர்த்தினர். இதைத்தொடர்ந்து எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய டெர்பைஷயர் அணிக்கு டில்ஷான், டுர்ஸ்டன் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். டுர்ஸ்டன் (21) ஆட்டமிழக்க, அடுத்து வந்த ஹியூக்ஸ் 21 ஓட்டங்களில் வெளியேறினார்.

சிறப்பாக விளையாடிய டில்ஷான் (54) அரைசதம் கடந்து இலக்கை எட்ட உதவினார். மேலும் மொத்தமாக டி20 போட்டிகளில் 4000 ஓட்டங்களை கடந்தார். இருப்பினும் அடுத்து வந்தவர்கள் சோபிக்க தவறியதால் டெர்பைஷயர் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் துர்ஹாம் அணி 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

## பிரேசில் ஒலிம்பிக் போட்டி டிக்கெட் விற்பனை

பிரேசிலில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான டிக்கெட்கள் உள்நாட்டு ரசிகர்களுக்கு குறைந்த அளவே ஒதுக்கப்பட்டுள்ளது. பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் குலுக்கல் முறையில் முதற்கட்ட டிக்கெட் விற்பனையும் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

இதில், 35 சதவீத டிக்கெட்டுகள் மட்டுமே பிரேசில் ரசிகர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது முதற்கட்ட குலுக்கலில் வழங்கப்பட்டுள்ள 45 லட்சம் டிக்கெட்டுகளில் 16 லட்சம் டிக்கெட்டுகள் மட்டுமே பிரேசில் ரசிகர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் 52 லட்சம் மக்கள் டிக்கெட்டுக்காக விண்ணப்பித்திருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. துவக்க விழா, நிறைவு விழா உள்ளிட்ட 121 போட்டிகள், 694 அமர்வுகளுக்கான டிக்கெட்டுகள் விற்பனை ஆகிவிட்டன. இரண்டாம் கட்ட டிக்கெட் விற்பனைஜூலைமாதம்தொடங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கார்ட்டூன் கதாபாத்திரத்தில் கலக்கப்போகும் மேரி கோம்



கார்ட்டூன் கதாபாத்திரத்தில் பிரபல குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் இடபெறவுள்ளார். இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தை சேர்ந்த மேரி கோம், ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை பிரிவில் வெண்கலம் வென்றுள்ளார். தற்போது பெண்களின் ரோல் மொடலாக இருந்து வரும் இவரை, 'மேரிகோம் ஜூனியர்' என்ற கார்ட்டூன் கதாபாத்திரமாக உருவாக்க ஸ்கிரீன்ஸ்யுக் தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக மேரிகோமுக்கும் அந்த நிறுவனத்துக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து மேரி கோம் கூறுகையில், பெண் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில் இந்த கதாபாத்திரம் உருவாக்கப்படும். நம்பிக்கையும், தைரியமும் உள்ள இளம் தலைமுறையினரை உருவாக்குவதற்காக எனது பங்களிப்பை அளிக்கவுள்ளேன்.


குத்துச்சண்டை போன்ற கடுமையான விளையாட்டுப்போட்டிகளில் பெண் குழந்தைகள் ஈடுபடுவதை பெற்றோர்கள் விரும்புவதில்லை. இன்றைய உலகம் குற்றச்சம்பவங்களால் நிறைந்துள்ளது. எனவே பெற்றோர் இப்போதாவது விழித்துக் கொண்டு பெண் குழந்தைகளை குத்துச்சண்டை போன்ற போட்டிகளில் கவனம் செலுத்த அனுமதிக்க வேண்டும்'' என்றார். 'மேரி கோம் ஜூனியர்' தொடர் விரைவில் ஒளிபரப்பப்படவுள்ளது.

## இலங்கை டெஸ்ட் அணி அறிவிப்பு

பாகிஸ்தான் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 5 ஒருநாள், இரண்டு டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி காலேவில் வருகின்ற 17ம் திகதி தொடங்குகிறது. இதற்கான 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

16 வீரர்களை கொண்ட டெஸ்ட் அணி:- அஞ்சலோ மேத்யூஸ் (அணித்தலைவர்), லஹிரு திரிமன்னே, கவுஷ்ஹால் சில்வா, திமுத் கருணாரட்ன, குமார் சங்கக்கார, தினேஷ் சந்திமால், கிருத்துவான் வித்தானகே, ஜெஹான் முபாரக், குஷல் பெரேரா, ரங்கன ஹேரத், தில்ருவான் பெரேரா, தரிந்து கவுஷ்ஹால், நுவான் பிரதீப், தமிங்க பிரசாத், துஷ்மந்த சமிரா, சுரங்க லக்மால்.

## கரிபியன் லீக் போட்டியில் கால்வைத்த ஷாருக்கான்



ஐபிஎல் போட்டியில் விளையாடும் கொல்கத்தா அணியின் உரிமையாளர் நடிகர் ஷாரூக்கான் கரிபியன் லீக் டி20 தொடரின் டிரினிடாட் அணியை வாங்கியுள்ளார். இதன் மூலம் வெளிநாட்டு டி20 அணியை வாங்கிய முதல் உரிமையாளர் என்ற பெருமையை அவர் பெற்றார். இந்த அணியில் வெய்ன் பிராவோ, காலிஸ், டாரன் பிராவோ, போத்தா, கெவின் கூப்பர், கமரன் அக்மல் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் உள்ளனர். 3 முறை சாம்பியன் பட்டமும் வென்றுள்ளது.

கரிபியன் பிரிமீயர் லீக் போட்டியில் பொல்லார்ட் தலைமையிலான பார்படோஸ்டிரை டென்டீஸ் அணியை ஹொலிவூட் நடிகர் மார்க் ஹல்பெர்க்கும், கெய்ல் தலைமையிலான ஜமைக்கா அணியை ஹொலிவூட் நடிகர் ஜெரார்ட் பட்லரும் ஏற்கனவே வாங்கியுள்ளனர். தற்போது அந்த வரிசையில் கொல்கத்தா அணியின் உரிமையாளர் ஷாருக்கானும் இணைந்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், கிரிக்கெட் துறையில் உலகம் முழுவதும் விரிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எங்களது இலக்காகும். அதற்காக டிரினிடாட் டொபாக்கோ அணியை வாங்கி உள்ளேன் என்று கூறியுள்ளார்.

## சாதனை படைத்த முரளி விஜய், தவான்



வங்கதேசத்துக்கெதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி விளையாடி வருகிறது. இதில் முரளி விஜய், ஷிகர் தவான் இருவரும் 239 ஓட்டங்கள் எடுத்த தொடக்க ஜோடி என்ற பெருமையை பெற்றுள்ளனர். இந்த ஜோடி கடந்த 2013ல் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான மொகாலி டெஸ்ட் போட்டியில் முதல் விக்கெட்டுக்கு 289 ஓட்டங்கள் எடுத்தது.

உலகளவில் அவுஸ்திரேலியாவின் மத்யூ ஹைடன், ஜஸ்டின் லாங்கர் ஜோடி 6 முறை 200 ஓட்டங்களுக்கு மேல் குவித்து முதலிடத்தில் உள்ளது. டெஸ்ட் அரங்கில் முதல் விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த இந்திய ஜோடி வரிசையில் தவான், விஜய் 4வது இடம் பிடித்தனர். அதே போல் 1000 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த 6வது இந்திய ஜோடி என்ற பெருமையும் பெற்றுள்ளனர். 24 இன்னிங்சில் 1161 ஓட்டங்கள் எடுத்துள்ளனர்.

## உலகின் 'கோஸ்ட்லி கிரிக்கெட் கோச்' ரவிசாஸ்திரி



கிரிக்கெட் உலகில் அதிக சம்பளத்துடன் இந்திய அணிக்கு விரைவில் ரவிசாஸ்திரி பயிற்சியாளராக நியமிக்கப்படப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாட வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளது.

இந்த தொடருக்கு இந்திய அணியின் இடைக்கால பயிற்சியாளராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் வங்கதேச தொடருக்கு பின் ரவிசாஸ்திரி நிரந்தர பயிற்சியாளராக தெரிவு செய்யப்படப்போவதாகவும், இதற்காக அவருக்கு ஆண்டுக்கு ரூ.7 கோடி ஊதியமாக வழங்கப்படப் போவதாகவும் கூறப்படுகிறது. இது கிரிக்கெட் உலகில் இதுவரை யாரும் வாங்காத அதிகபட்ச சம்பளம் ஆகும்.

## இலங்கையின் அமைச்சராக பதவியேற்றார் சனத் ஜெயசூரியா


இலங்கைகிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியா இலங்கையின் அமைச்சராக பதவியேற்றுள்ளார். கிரிக்கெட் துறையில் அதிரடியால் கலக்கிய சனத் ஜெயசூரியா, 1996ம் ஆண்டு இலங்கை அணி உலகக்கிண்ணம் வென்றதில் முக்கிய பங்காற்றினார்.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலவின் அரசில் ஜெயசூர்யாவுக்கு துணை அமைச்சர் பதவி கிடைத்துள்ளது. இப்பதவியை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே அமைச்சர்களாக இருந்த 4 பேர் சமீபத்தில் பதவி விலகி ராஜபக்ஷவின் கோஷ்டியில் இணைந்தனர். அவர்களுக்கு பதிலாகவே ஜெயசூர்யா உள்ளிட்ட 4 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

# உலகச் செய்திகள்

## 102 வயதில் பி.எச்.டி பட்டம் பெற்று சாதனை



ஜேர்மனியை சேர்ந்த 102 வயதான மூதாட்டி ஒருவருக்கு டொக்டர் பட்டம் வழங்கியுள்ளதால் சர்வதேச அளவில் அதிக வயதில் டொக்டர் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். பெர்லின் நகரை சேர்ந்த Ingeborg Rapoport (102) என்பவர் ஹிட்லர் ஆட்சியின்போது 1937ம் ஆண்டு தனது மருத்துவ படிப்பை முடித்திருந்தார்.

பின்னர் கடந்த 1938ம் ஆண்டில் 'பி.எச்.டி.' ஆராய்ச்சி பட்டப்படிப்பு மேற்கொண்டார். டொக்டர் பட்டம் பெறுவதற்கு மருத்துவ துறையில் ஆய்வுக்கட்டுரை (thesis) எழுதி தெரிவாக வேண்டும் என்பதால், அந்த காலத்தில் ஜேர்மனியை வாட்டி எடுத்த தொண்டை அழற்சி நோய் குறித்து ஆய்வுக்கட்டுரை எழுதி தெரிவானார். எனினும் ஜேர்மனியை நாஜி படைகள் ஆட்சி செய்தன. Ingeborg Rapoport வின் தாயார் ஒரு யூதர் என்பதாலேயே அவருக்கு டொக்டர் பட்டம் வழங்க மறுக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதனால் அவரது முயற்சி தடைபட்டது.

இதற்கிடையே இரண்டாம் உலகப் போருக்கு பின் அங்கு நாஜிக்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் இவர் தொடர்ந்து பி.எச்.டி. பட்டம் படிக்க முயன்றார். ஆனால், வாழ்க்கை மாற்றம் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக அவரால் அதை படித்து முடிக்க முடியவில்லை. இருந்தும் அவர் விடாமல் தன்னம்பிக்கையுடன் படித்து வந்தார். தற்போது அவருக்கு 102 வயதாகிற நிலையில் சுமார் 80 வருடங்கள் டொக்டர் பட்டத்திற்காக காத்திருந்த அவருக்கு கடந்த மாதம் நல்ல செய்தி கிடைத்துள்ளது. Hamburg பல்கலைக்கழகத்தில் உள்ள குறைகளை சரிசெய்த முனைவர்கள், அவருக்கு டொக்டர் பட்டம் வழங்குவது குறித்தான ஆய்வில் இறங்கினர்.

இதனை தொடர்ந்து அந்த பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிர்வாகிகள் பெர்லினில் உள்ள அவரது வீட்டில் சந்தித்து ஆய்வுக்கட்டுரை குறித்தான சமீபத்திய நிகழ்வுகளை அளியுங்கள் என கேட்டுள்ளனர். கடந்த மாதம் நடந்த நேரடி ஒப்புவித்தல் தேர்வில் வெற்றி பெற்று பி.எச்.டி. தேர்வில் வெற்றி பெற்றார். அதை தொடர்ந்து அவருக்கு ஹாம்பர்க் பல்கலைக்கழகம் அவருக்கு டொக்டர் பட்டம் வழங்கியது. பட்டமளிப்பு விழாவில் Ingeborg Rapoport பேசும் போது, தள்ளாத வயதில் பெற்றுள்ள இந்த பட்டம் எனக்காக அல்ல. சர்வாதிகாரிகளால் நீதி மறுக்கப்பட்ட அனைவருக்கும் கிடைத்ததாகவே கருதுகிறேன் என்றார்.

## ரொஹிங்யா மக்களுக்கு குடியுரிமை அளிக்க வேண்டும் - மலாலா



தாய்நாட்டில்பிறந்துவளர்ந்த ரொஹிங்யா இன இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய் மியான்மார் அரசை வலியுறுத்தியுள்ளார். கல்விக்காக சர்வதேச அளவில் போராடி, 2014ம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், மியான்மார் அரசால் அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ள ரொஹிங்யா இன இஸ்லாமியர்களின் பிரச்சினைக்கு முடிவு கட்ட உலக தலைவர்கள் முன் வர வேண்டும்.

மியான்மார் நாட்டின் சிறுபான்மையின ரொஹிங்கயா மக்களிடம் மியான்மார் அரசு பாகுபாடு காட்டவேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார். பல தலைமுறைகளாக மியான்மார் நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள ரொஹிங்யா மக்கள் மியான்மார் நாட்டின் குடியுரிமைக்கு தகுதியானவர்கள். இந்த சமுதாயத்தில் உயர்ந்த மரியாதையுடன், சமமான உரிமைகளுடன் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என நினைப்பது போல ரொஹிங்யா மக்களுக்கும் அந்த வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். இன்றும், எதிர்வரும் எல்லா நாட்களிலும் நான் ரொஹ்ங்யா இன மக்களுக்கு ஆதரவாக துணை நிற்பேன். இது போல இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும் என மலாலா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மியான்மார் நாட்டை சேர்ந்த சுமார் 11 லட்சம் ரொஹிங்யா இன இஸ்லாமியர்களுக்கு அந்தநாடு குடியுரிமை வழங்க மறுத்து வருகிறது. அண்மையில் வெளியான செய்தியில், ரொஹிங்யா மக்கள் தொகையில் 10 சதவிகிதமான சுமார் 1 லட்சம் பேர் தற்போது மியான்மார் நாட்டை விட்டு கடத்தல் படகுகளில் நடுக்கடலில் தத்தளித்து இருப்பதாக பகீர் செய்திகள் வெளியாகியுள்ளது. சர்வதேச அளவில் ஒரு நாட்டு அரசால் மிகவும் அடக்கு முறைக்கு உள்ளான இனங்களில் ரொஹிங்யா இனத்தவரும் அடங்குவர் என ஐக்கிய நாடுகளின் சபை அண்மையில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## யானை சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் சுவைமிக்க 'கோப்பி'




தாய்லாந்தில் உள்ள சொகுசு ஹொட்டல் ஒன்றில் யானை சாணத்திலிருந்து கோப்பி தயாரிக்கப்படுவதுடன், அதன் சுவை மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. தாய்லாந்து மற்றும் மியான்மர் நாடுகளின் எல்லையில் Anantara என்ற பிரமாண்டமான சொகுசு ஹொட்டல் அமைந்துள்ளது. இந்த ஹொட்டலுக்கு வரும் மக்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு இங்கு வழங்கப்படும் சுவை மிக்க 'Black Ivory Coffee' என்றால் கொள்ளை பிரியம். நாடு முழுவதும் மிகப்பிரபலம் வாய்ந்த இந்த கோப்பியை தயாரிக்கும் முறை மிகவும் வித்தியாசமானதாகும்.

அதாவது, யானைகள் இடும் சாணத்திலிருந்து இந்த கோப்பியை விசேஷமாக தயாரிக்கிறார்கள். யானைகள் இடும் சாணத்திலிருந்து கோப்பி கொட்டைகளை தனியாக பிரித்தெடுத்து வெயிலில் உலர்த்தி அதன் மூலம் கோப்பி தயாரித்தபோது அதன் சுவை மிகவும் பிடித்துப்போனது. அதாவது யானைகள் பழங்கள், காய்கறிகள், மூலிகைகள், அரிசி வகைகள் மற்றும் கோப்பி கொட்டைகளை அன்றாடம் உண்டு வருகிறது. இவை அனைத்தும் யானையின் வயிற்றிற்குள் சென்று செரிமானத்தில் சேர்க்கிறது. பிற வகை உணவுகளுடன் இணைந்து குடல் வழியாக செல்வதால், கோப்பி கொட்டைகளுக்கு கூடுதல் சுவை கிடைக்கிறது.

மேலும், வயிற்றில் உற்பத்தியாகும் செரிமான திரவம் கோப்பி கொட்டையில் உள்ள கசப்பு தன்மையை முழுவதுமாக நீக்கி விடுகிறது. யானையின் வயிற்றிற்குள் சுமார் 17 மணி நேரம் நிகழும் இந்த செரிமான முறைக்கு பின்னர், அந்த உணவு சாணமாக வெளியேறுகிறது.

## கொலராடோவில் கட்டப்பட்ட இந்து கோவில் முறைப்படி திறப்பு



அமெரிக்காவில் கட்டப்பட்ட இந்து கோவில் மற்றும் கலாச்சார மையம், இந்து மத முறைப்படி பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள கொலராடோ மாநிலத்தில் இந்து கோவில் மற்றும் கலாச்சார மையம் கடந்த மார்ச் மாதம் முதல் கட்டப்பட்டு வந்துள்ளது. அந்த கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து அதை முறைப்படி திறந்து வைக்க திட்டமிடப்பட்டது. இந்நிலையில் கடந்த 7ம் திகதியன்று, அமெரிக்காவில் வசிக்கும் இரண்டு அர்ச்சகர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து சென்ற 7 அர்ச்சகர்கள் கலந்துகொண்டு வேத மந்திரங்கள் ஓதி முறைப்படி கோவிலை திறந்து வைத்தனர்.

இந்த கோவில் திறப்பு விழாவில் கொலராடோவில் வசிக்கும் ஏராள மான இந்துக்கள் கலந்து கொண்டனர். இந்து முறைப்படி ஆரத்தி, ஆராதனை, யாகம், கும்பாபிஷேகம் உள்ளிட்டவை சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த கோவி லில் ஐயப்பன், விநாயகர், துர்கை, கௌரிசங்கர், லட்சுமிநாராயண், ராதாகிருஷ்ணா, ராமர் தர்பார், சரஸ்வதி, சிவலிங்கம், நந்தி, சிவ பரிகாரங்கள், திருப்பதி வெங்கடாசலபதி ஆகிய சாமிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த இடம் கோவிலாக மட்டும் அல்லாமல் கலாச்சார மையமாகவும் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## 100 ஆண்டுகள் பழமையான ஓவியங்களை ஏலம் விட முடிவு



ஜேர்மனியின் அடால்ப் ஹிட்லர் வரைந்த 100 ஆண்டுகளை கடந்த ஓவியங்களை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப்போரின்போது ஜேர்மனியின் சர்வாதிகாரியாக இருந்தவர் அடால்ப் ஹிட்லர். கொடுங்கோலர் என்று கூறப்படும் இவருக்கு ஓவியம் வரைவதிலும் ஆர்வம் இருந்துள்ளது. இந்நிலையில் ஹிட்லர் வரைந்த ஓவியங்களை ஏலம் விட நூரிம்பெர்கை சேர்ந்த ஏல நிறுவனம் ஒன்று முடிவு செய்துள்ளது. இந்த ஓவியங்கள் 1904-1922 ஆகிய காலகட்டங்களுக்கு இடையே வரையப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. மேலும் இதில் ஏ. ஹிட்லர் என கையெழுத்தும் காணப்படுகின்றன.

அவர் வரைந்த 14 ஓவியங்கள் இம்மாதத்தின் 18-20 திகதிகளில் ஏலம் விடப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் யூரோவில் இருந்து 45 ஆயிரம் யூரோ வரைக்கும் இந்த ஓவியங்கள் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் இதே நிறுவனம் நடத்திய ஏலத்தில் 1914 ஆம் ஆண்டு ஹிட்லர் வரைந்த ஓவியம் ஒன்று 1 லட்சத்து 30 ஆயிரம் யூரோவுக்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது.


## தீவிரவாதிகளை அழிக்க புதிய திட்டத்தை கையில் எடுக்கும் அமெரிக்கா



ஈராக்கில் ஐஎஸ் தீவிரவாதிகளை சமாளிக்க அன்பார் மாகாணத்தில் புதிய ராணுவ தளத்தை அமைக்க அமரிக்கா திட்டமிட்டுள்ளது. மேலும் 400 வீரர்களை அனுப்பிவைத்து ஈராக் ராணுவத்தினருக்கு பயிற்சி அளித்து ரமதி நகரை தீவிரவாதிகளிடம் இருந்து மீட்கவும் ஒபாமா அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் இந்த திட்டத்திற்கு இன்னும் வெள்ளை மாளிகை ஒப்புதல் அளிக்கவில்லை. புதிய ராணுவ தளத்தை அமைக்க விரும்பும் அன்பார் மாகாணத்தில் சன்னி முஸ்லீம்கள் அதிக அளவில் உள்ளனர். அவர்கள் ஐஎஸ் தீவிரவாதிகளை எதிர்த்து போராடும் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அன்பாரின் தலைநகரான ரமதி பாக்தாத் அருகே உள்ளது. ரமதி நகரை மீட்க வேண்டும் எனில் அன்பாரில் உள்ள பயிற்சி பெற்ற ஈராக் பழங்குடியினத்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 500ல் இருந்து 10 ஆயிரமாக அதிகரிக்கப்படவேண்டும். ரமதியை மீட்க ஈராக் ராணுவத்தில் 3 ஆயிரம் பேரை புதிதாக சேர்க்க உள்ளனர். ஈராக் ராணுவத்திற்கு பயிற்சி அளிக்க அமெரிக்கா தவிர்த்து இங்கிலாந்தும் கூடுதல் படைகளை அனுப்பிவைக்க உள்ளது. 125 கூடுதல் படைகளை ஈராக்கிற்கு அனுப்பி வைப்பதாக இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

## முதியவரின் சிறுநீரகத்தில் இருந்த 420 கற்கள்



சீனாவில் முதியவர் ஒருவரின் சிறுநீரகத்தில் இருந்து சரியாக 420 சிறுநீரகக் கற்கள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. சீனாவின் கிழக்கு ஜியாங் மாகாணத்தைச் சேர்ந்தவர் ஹி டோங் (Mr He, 55). இவர் கடுமையான வயிற்று வலி மற்றும் சிறுநீர் தொற்று காரணமாக அவதிப்பட்டு வந்தார். இந்நிலையில் இவரின் உடலை சோதித்துப்பார்த்த மருத்துவர்கள் அவரது சிறுநீரகத்தில் கற்கள் இருப்பதை கண்டுபிடித்தனர்.

இதையடுத்து அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு சிறுநீரக கற்கள் நீக்கப்பட்டது. அதாவது அவரது சிறுநீரகத்தில் இருந்து சரியாக 420 சிறுநீரக கற்கள் அகற்றப்பட்டுள்ளது. ஹி டோங் உணவில் அளவுக்கு மீறிய பாலடைக் கட்டிகளை சேர்த்துக் கொண்டதும், போதிய அளவுக்கு தண்ணீர் குடிக்காமல் இருந்ததுமே, இந்த அளவுக்கு கற்கள் உருவாகக் காரணம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். மேலும் அறுவைசிகிச்சைக்கு பிறகு அவர் தற்போது நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


# விந்தை உலகம்

## மரத்தைச் சுற்றி கட்டப்பட்டுள்ள விநோத அலுவலகம்

பிரித்தானியாவில் இயற்கையை ரசிக்கும் வகையில் மரத்தைச் சுற்றி வித்தியாசமான முறையில் கட்டப்பட்டுள்ள அலுவலகம் ஒன்று அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. பிரித்தானியாவின் புகழ்பெற்ற கட்டடக்கலை நிறுவனமான டேடி ஹார்மெர் எல்எல்பி வித்தியாசமான அலுவலகத்தை கட்ட முடிவு செய்தது. அதன்படி பிரித்தானியாவின் கிழக்கு லண்டன் பகுதியில் உள்ள ஷோரேடிச் என்ற நகரில் மரத்தைச் சுற்றி அலுவலகம் ஒன்றை கட்டியுள்ளது.

மரக்கட்டைகள் மற்றும் காகித அட்டைகளாக கட்டப்பட்டுள்ள இந்த அலுவலகத்தில் வெளிப்புறம் முழுவதும் கண்ணாடி போன்ற பிளாஸ்டிக் மற்றும் வெளிப்படையான பாலிகார்பனேட் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது. வாடகைக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்தில் வைபை, மின்சாரம் போன்ற வசதிகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம்வரை இந்த அலுவலகம் திறந்திருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை வடிவமைத்த டெடி ஹார்மர் நிறுவனத்தை சேர்ந்த ரோரி ஹார்மர் இது குறித்து கூறுகையில், நகரத்தில் பசுமையாக இருக்கும் இடங்களை புதுமையாகவும் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வகையிலும் பயன்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.





## கறுப்பு நிறத்தில் காணப்படும் அதிசய தக்காளி

தக்காளி என்றாலே நம் எல்லோருக்கும் தெரியும். அது சிவப்பு நிறத்தில் இருக்கும். சிவப்பு நிறத்திலுள்ள தக்காளியைத் தான் பார்த்தும் இருப்போம்.

ஆனால், கறுப்பு நிறத்திலும் தக்காளி இருக்கின்றது. அதை நம்மில் எத்தனை பேர் பார்த்திருக்கிறோம்?. இது வெளிநாட்டில் விளைவிக்கப்பட்டுள்ளது. அந்த அதிசயத் தக்காளியின் படம் இதோ உங்களுக்காக...


















வவுனியா.செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மஹிந்தோதய ஆய்வுகூடம் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் 11.06.2015 அன்று காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் போதுவடமாகணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

படங்களும் தகவலும்:- இ.தர்சன்

## உலகின் மிகப் பெரிய எலி வகையான கபிபரா (Capybara)

உலகின் மிகப் பெரிய எலி வகை கபிபரா ஆகும். கினி பன்றிகளும் (Guinea pigs) வளை எலிகளும் (Rock cavies) இதன் நெருங்கிய உறவினர்கள். சிலி தவிர தென் அமெரிக்காவின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் கபிபராக்கள் அடர்ந்த காடுகள், புல்வெளிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் வசிக்கக்கூடியன. அனிமலியா (Animalia) இனத்தினுள் கவிடே (Cavidae) குடும்பத்தைச் சார்ந்தன. கூடி கட்டி வாழும் இயல்புடையன. 10 முதல் 20 வரை உள்ள குழுக்களாகவோ அல்லது 50 முதல் 100 வரை எண்ணிக்கை கொண்ட குழுக்களாகவோ வாழ்கின்றன.

பீப்பாய் வடிவ உடலமைப்பில் சிறிய தலையுடன் தோற்றமளிக்கும் கபிபராக்கள் 107 முதல் 134 செ.மீ நீளமும் 50லிருந்து 64 செ.மீ. உயரமும் கொண்டன. இவற்றின் எடை 35 கிலோவிலிருந்து 65 கிலோ வரை இருக்கும். பின்னங்கால்கள் முன்னங்கால்களைவிட சிறிது பெரிதாகவும் அகன்று விரிந்த பாதங்களையும் கொண்டுள்ளன. மூக்கு, கண், காது ஆகிய உறுப்புகள் மிக அருகருகே உள்ளன. இவற்றின் தோல் மருத்துவத் துறையில் பெரிதும் பயன்படுகிறது. புல், நீர்வாழ் தாவரம், பழம், மரப்பட்டை போன்றவற்றைச் சாப்பிடும் இவற்றின் தாடையானது உணவை அசைபோட்டுச் சாப்பிட வசதியான அமைப்பில் செங்குத்தாக அமைந்துள்ளது. புல்லிலுள்ள செல்லுலோஸ் இவற்றின் செரிமானத்திற்கு உதவுகிறது. நீரில் நன்கு நீந்தும் இயல்புடையதோடு, 5 நிமிடங்கள் வரை தண்ணீரில் மூழ்கியிருக்கும் திறமையையும் பெற்றுள்ளன. தனது அறிவுக் கூர்மையால் எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்கின்றன. சகதியில் புரள்வது என்றால் கபிபராக்களுக்கு மிகவும் பிடிக்கும்.

8 முதல் 10 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியன. கழுகு, சிறுத்தைப் புலியினுள் ஒரு பிரிவைச் சேர்ந்த Jaguar, அமெரிக்காவிலுள்ள பூனை வகையைச் சேர்ந்த மலைவாழ் விலங்கான Puma, Ocelot, Caiman ஆகியவற்றின் விருப்ப உணவாக கபிபராக்கள் உள்ளன. அனகொன்டா பாம்புகளும் கபிபராக்களை விருப்பமான உணவாக உட்கொள்கின்றன. மனிதர்களுடன் எளிதில் பழகும் தன்மை கொண்ட இவை அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களின் செல்லப் பிராணிகளாகத் திகழ்கின்றன.







## பஃபின் பறவை



ஐஸ்லாந்தில் கடற்கரையோரம் கடற்பறவைகளின் கூட்டம் அதிகமாக இருக்கும். இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? ஐஸ்லாந்தில் உள்ள கடற்கரைப் பகுதி, பொதுவாக ஆர்டிக் பகுதிகளில் குறைந்த அளவு பறவைகள்தான் வாழும்.

ஆனால், இந்த ஐஸ்லாந்துப் பகுதியில் மட்டும் நிறையப் பறவைகள் வாழ்கின்றனவே. எப்படி?

இங்கே கடல்வாழ் தாவரங்கள் எண்ணற்ற அளவு கிடைக்கின்றன. அதோடு குட்டி மீன்களும், பெரிய மீன்களும் ஏராளமாய்க் காணப்படுகின்றன. அந்தப் பெரிய மீன்கள்தான் அப்பறவைகளின் முதன்மை உணவு. எனவே உணவுக்குப் பஞ்சமே இல்லாததால் இங்கே பறவைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அந்தப் பறவைகளின் பெயர் பஃபின். இந்தப் பறவைக்குப் பெரிய அலகு உண்டு.






email - vanni_inn@yahoo.com

Vanni Inn

Chinese, Indian, Sri Lankan Food available









Hotel Vanni Inn

A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking

வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் கூடிய மங்கலகரமான அனைத்து நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074


இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 14.06.2015 அன்று வெளியிடப்பட்டது.